SriLankan Airlines

# மேகங்களற்ற தெளிவான வானம்

சிறிலங்கன் எயார்லையின்ஸ் ஆண்டறிக்கை 2015/16

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| முக்கிய விடயங்கள் | 3 |
| தலைவரின் செய்தி | 4 |
| முதன்மை நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு | 6 |
| பணிப்பாளர்களின் விபரக் குறிப்பு | 8 |
| முகாமைத்துவத்தின் முக்கிய உறுப்பினர்கள் | 11 |
| பணிப்பாளர்களின் விபரக் குறிப்பு | 18 |


## நிதியியல் அறிக்கைகள்


| | |
|---|---|
| பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை | 33 |
| சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 37 |
| பணிப்பாளர்களின் பொறுப்பாண்மைக் கூற்றுக்கள் | 38 |
| கணக்காய்வாளர் நாயகத்தின் சுயாதீனமான கணக்காய்வாளர் அறிக்கை | 39 |
| நிதியியல் நிலைமைக்கூற்று | 40 |
| இலாபம் அல்லது நட்டக் கூற்று | 41 |
| அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று | 42 |
| பங்குரிமை மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று | 43 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 44 |
| நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | 45 |


## இணைப்புக்கள்


| | |
|---|---|
| பத்தாண்டு மீளாய்வு - கம்பனி | 81 |
| உலகைச் சுற்றி | 82 |
| முக்கிய நிகழ்வுகள் | 84 |
| கலைச் சொல்லாக்கம் | 85 |
| கூட்டம் பற்றிய அறிவித்தல் | 86 |
| பதிலாள் | இணைக்கப்பட்டுள்ளது |
| கம்பனித் தகவல்கள் | பின்பக்க உள்ளட்டையில் |

# தீவிரம் நிறைந்த சவால்மிக்க சூழலொன்றில், சிறிலங்கன் எயார்லையின்ஸ் பல்வேறுபட்ட வியாபார அளவு முறைகளிடையேயும் செயலாற்றத்தில் பாராட்டத்தக்க முன்னேற்றத்தினைப் பதிவுசெய்துள்ளது.

ஷதடங்கல்களேதுமற்ற வான் வழிப்' பயணத்தினை எய்துவதற்கு "இன்னமும் மிக நீண்ட மைல்கள் நாம் பயணிக்க வேண்டியிருக்கும்" என்பதனை நாம் ஏற்றுக்கொள்கின்ற வேளையில், பற்றாக்குறையில் குறிப்பிடத்தக்க குறைப்பு, எமது வழித்தட வலையமைப்பையும் விமானத்தொகுதிகளையும் சிக்கனப்படுத்தியமை, சேவைகளில் குறிப்பாக விமானத்திற்குள்ளேயான சேவைகளில் முன்னேற்றம் முகாமைத்துவப் பதவிகளை வலுப்படுத்துவது உட்பட அலுவலர் கலாச்சாரத்தினையம் உறவுமுறைகளையும் சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றியமைத்தல் மற்றும் மீள ஒழுங்குபடுத்தல் - நாம் மேற்கொண்ட இவை அனைத்தும் எமது பிரதான வியாபார அலகுகளினதும் துணை நிறுவனங்களினதும் தொடர்ச்சியான வெற்றிகள், இனிவரும் ஆண்டுகளில் எயார்லையினினை மீளமைப்பதற்கான எமது திட்டங்கள் சரியான வழியில் கொண்டு நடத்தப்படுகின்றன என்பதனை நிரூபித்திருக்கின்றன.

சுருக்கமாகக் குறிப்பிடவும், **தெளிவான வான் பயணங்களுக்கு நாம் சரியான அளவினைக் கொண்டிருக்கின்றோம்**

You're our world SriLankan Airlines · oneworld · SriLankan Catering · SriLankan Engineering · FlySmiLes Frequent flyer rewards · SriLankan Economy · SriLankan Business

SriLankan Holidays A world of memories · SriLankan MICE Meet the world · SriLankan Cares · SriLankan Cargo · SriLankan Training · SriLankan IT Systems · upgrád e-auction

**எமது தொலைநோக்கு**

# ஆசியாவில் மிக முன்னுரிமை வாய்ந்த வான் நிறுவனமாக இருப்பது

**எமது பணி**

நாங்கள் வான் போக்குவரத்து தொழிலில் இருந்து வருகிறோம். நாங்கள் எமது வாடிக்கையாளர்களுக்கு நம்பகமானதும் மகிழ்ச்சி நிறைந்ததுமான பயண அனுபவத்தினை வழங்குகின்றோம். நாங்கள் எமது தொழில் பங்காளர்களுக்கு பல்வேறுபட்ட புதுமையான தொழில் நிபுணத்துவம் வாய்ந்த, பரஸ்பரம் இலாபமளிக்கும் பணிகளை வழங்கி வருகிறோம். நாங்கள் பங்குடமையாளர்களின் இலங்கை பற்றிய இலாபமளிக்கும் சந்தைப்படுத்தல் எதிர்பார்ப்புக்களை ஈடுசெய்வதுடன் சமூகத்தின் நலனோம்புகைகளுக்கு பங்களிக்கிறோம். நாங்கள் தகுதியும், முன்கூட்டிய செயற்பாடும் ஊக்கமும் கொண்ட குழுவாக இயங்குகிறோம். எங்களின் பங்களிப்பு அங்கீகரிக்கப்பட்டு அதற்கு விருதும் வழங்கப்பட்டிருக்கிறது.

| | | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| | | 2015/16 | 2014/15 | 2015/16 | 2014/15 |
| **நிதியியல்** | | | | | |
| வருமானம் | ரூ. மில்லியன் | 132,198.31 | 134,316.22 | 129,480.41 | 131,922.13 |
| தொழிற்பாட்டுச் செலவினம் | ரூ. மில்லியன் | (136,112.00) | (145,893.49) | (137,195.18) | (145,983.35) |
| வரிக்கு முன்னைய இழப்பு | ரூ. மில்லியன் | (12,086.55) | (16,254.53) | (12,621.69) | (16,433.03) |
| ஆண்டிற்கான தேறிய இழப்பு | ரூ. மில்லியன் | (12,083.62) | (16,329.90) | (12,621.69) | (16,494.66) |
| மொத்தச் சொத்துக்கள் | ரூ. மில்லியன் | 54,078.99 | 76,158.30 | 50,376.30 | 72,558.27 |
| பங்குடமையாளர் நிதியம் | ரூ. மில்லியன் | (80,447.11) | (67,292.86) | (87,781.26) | (74,105.90) |
| **போக்குவரத்து** | | | | | |
| பயணிகள் இயலளவு | கி.இ.கி.மீ மில்லியன் | | | 15,790.28 | 16,180.27 |
| மொத்த இயலளவு | கி.தொ.கி.மீ மில்லியன் | | | 2,165.21 | 2,224.87 |
| கொண்டு செல்லப்பட்ட பயணிகள் | வ.த.ப.கி.மீ மில்லியன் | | | 12,727.66 | 12,963.71 |
| மொத்தமாக கொண்டு செல்லப்பட்ட பாரம் | வ.த.தொ.கி.மீ மில்லியன் | | | 1,484.77 | 1,519.93 |
| பயணிகள் சுமைக் காரணி | % | | | 80.60 | 80.12 |
| ஒட்டுமொத்த சுமைக் காரணி | % | | | 68.57 | 68.32 |
| இலாப நட்டமற்ற சுமைக் காரணி | % | | | 75.54 | 77.03 |
| **அலுவலர் உற்பத்தித்திறன்** | | | | | |
| அலுவலர் தொகை | எண்ணிக்கை | 7,860 | 7,870 | 6,959 | 6,987 |
| ஊழியர் ஒருவருக்கான வருமானம் | ரூ. மில்லியன் | 16.82 | 17.07 | 18.61 | 18.88 |
| ஊழியர் ஒருவருக்கான கூட்டப்பட்ட பெறுமதி | ரூ. மில்லியன் | (0.32) | (1.08) | (0.63) | (1.41) |
| **விமானங்களின் தொகுதி** | | | | | |
| A320-200 | எண்ணிக்கை | | | 6 | 6 |
| A321-200 | எண்ணிக்கை | | | 2 | 2 |
| A330-200 | எண்ணிக்கை | | | 6 | 7 |
| A330-300 | எண்ணிக்கை | | | 7 | 2 |
| A340-300 | எண்ணிக்கை | | | – | 4 |
| ஆண்டின் இறுதியில் பணியிலுள்ள விமானங்கள் | எண்ணிக்கை | | | 21 | 21 |

**வருமானம் (குழுமம்)**

இல.ரூ. பில்.




**தேறிய இழப்பு (குழுமம்)**

இல.ரூ. பில்.




**தொழிற்பாட்டுச் செலவு (குழுமம்)**

இல.ரூ. பில்.





## எமது செயலாற்றம் நீண்ட காலத்தில் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய விமானத்திற்கான எமது மீளமைத்தல் உபாயம் தொடர்பில் நாம் சரியான முறையில் பயணிக்கின்றோம் என்ற நம்பிக்கையினை எமக்குத் தருகிறது.

சிறிலங்கன் எயார்லையின்ஸ்சின் 2015-16ஆம் நிதியாண்டிற்குரிய ஆண்டறிக்கையினையும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களையும் தங்களுக்கு நான் தயவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

சிறிலங்கன் எயார்லையின்ஸ் பற்றாக்குறை ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 26 சதவீதம் கொண்ட குறைப்பினை அடையும் விதத்தில் மீளாய்விற்குரிய காலப்பகுதியின் செயலாற்றத்தில் வலுவான மேம்பாடொன்றினைப் பதிவுசெய்தது. எரிபொருள் செலவில் ஏற்பட்ட குறைப்பிலிருந்து கிடைத்த நன்மைகள் முக்கிய பங்களிப்பாளராக இருந்த போதும் எமது மேம்பட்ட நிதியியல் செயலாற்றத்திற்கு எரிபொருள் செலவு மாத்திரம் காரணமாக இருக்கமுடியாது. கொள்வனவிலும் சேவை வழங்குவோருக்குச் செலுத்தப்பட்ட கட்டணங்களிலும் செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்பும் அதிகரித்த வினைத்திறனும் எமது இழப்புக்களைக் குறைக்க உதவின.

எயார்லையின் உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சவால்கள் இரண்டினதும் பிடியில் இன்னமும் சிக்குண்டிருப்பதுடன் எமது மேம்பட்ட செயலாற்றமும் இச்சவால்களின் பின்னணியிலேயே நோக்கப்படுதல் வேண்டும். இப்பின்னணியில், நீண்ட காலத்தில் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய வியாபாரங்களுக்கான எமது மீளமைப்பு வியாபாரத்தில் எமது செயலாற்றம் நாம் சரியான பாதையில் தான் பயணிக்கின்றோம் என்பதற்கான நம்பிக்கையினைத் தருகின்றது. எனினும், நாம் இன்னமும் நிறைய செய்ய வேண்டியிருப்பதுடன் பணி ஒழுக்கத்தில் ஏற்பட்ட முன்னேற்றமும் அதிகரித்த வினைத்திறனும் எமது இழப்புக்களை மேலும் குறைப்பதற்கு உதவும்.

மீளாய்விற்குரிய ஆண்டு, எமது வியாபார அலகுகள், பொறியியற்படுத்தல், தரைக் கையாளல் மற்றும் சிறிலங்கன் விமானப் போக்குவரத்துக் கல்லூரி என்பனவற்றிற்கு மிகச் சிறந்த ஆண்டாகக் காணப்பட்டது. எமக்கு முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனமான சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்டிற்கு முன்னெப்பொழுதுமில்லாத மிகச் சிறந்த ஆண்டாக இது காணப்பட்டதுடன் இவ்வாண்டில் அது இல.ரூ. 3.64 பில்லியனை இலாபமாகப் பெற்றுக்கொண்டது. கடந்த ஆண்டுகளில் எயார்லையின் தொழில் துறையில் அவதானிக்கப்பட்டிருக்கின்றவாறு, இத்தொழிலிலுள்ள துணை வியாபாரங்கள், பிரதான விமானப் போக்குவரத்து வியாபாரத்தினை விட பெருமளவு வருவாயினை வழங்கக்கூடியதன்மையைக் கொண்டிருந்தமையினைக் காட்டியதுடன், இடர்ப்பாடான மீளமைத்தல் கட்டத்தின் போது இத்துணை வியாபாரத்திலிருந்தான பங்களிப்பு மிக இன்றியமையாததொன்றாகக் காணப்பட்டது.

குறைந்த விளைவு மற்றும் அளவுக்கதிகமான இயலளவு என்ற நியதிகளில் உலகளாவிய தொழிற்பாட்டுச் சூழல் எமது வருமானத்தில் ஐயத்திற்கிடமின்றி கடுமையான பிரச்சனைகளை விட்டுச் சென்றிருப்பதுடன் இது எமது முக்கிய சந்தைகள் சிலவற்றில் காணப்பட்ட நாணயத் தேய்வின் காரணமாக மேலும் மோசமடைந்திருக்கிறது. உள்நாட்டைப் பொறுத்தவரை, சிறிலங்கன் தொடர்ந்தும் பாரிய படுகடன் சுமையினைத் தாங்குகிறது. இது இவ்வாண்டிற்கான வட்டிக் கொடுப்பனவில் இல. ரூ. 6.1 பில்லியனுக்கு வகைகூறியது. இது இவ்வாண்டுப் பகுதியின் இல. ரூ. 12.1 பில்லியன் கொண்ட மொத்த இழப்புக்களுடன் தொடர்பானதாகவும் காணப்பட்டது. இது பெருமளவிற்கு மறைப்புச் செய்யப்பட்டிருக்கிறது. இல்லையெனில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தொழிற்பாட்டு இழப்பில் ஏற்பட்ட 66 சதவீதம் கொண்ட வலுவான மேம்பாடுகள் படுகடனை ஈர்த்துக் கொள்வதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தின் மூலம் கட்டுப்படுத்தப்பட வேண்டிய முக்கிய பிரச்சனையாகவும் தொடர்ந்துமிருந்திருக்கும்.

எமது விமான சொத்துடமைச் செலவில் முன்னேற்றங்களை அடைவது எமது வியாபாரத்தினை வெற்றிகரமானதொன்றாக மாற்றுவதற்கு மிக இன்றியமையாது என்பதனை நாம் அடையாளம் கண்டிருக்கிறோம். இது விடயத்தில் நாம் எமது வியாபாரப் பங்காளர்களுடன் ஒத்துழைத்து வருகின்றோம். பாரம்பரிய செலவு அமைப்பு, வேலை நடைமுறைகள் மற்றும் செயன்முறைகள் என்பனவற்றைத் தனித்தனியாகப் பிரிப்பது தற்பொழுது இடம்பெற்றுவரும் சவாலாகும். சில துறைகளில் ஒழிவுமறைவற்ற தன்மை காணப்படாத போதும், அனைத்து ஆர்வலர்களினதும் ஆலோசனையுடனும் நாம் இதனைத் தொடர்ந்தும் கட்டுப்படுத்துவோம். அர்த்தமுள்ள மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு இத்தடைகள் நீக்கப்பட வேண்டுமென்பதனை ஏற்றுக்கொண்டவர்களின் காரணமாக நான் ஊக்குவிக்கப்பட்டுள்ளேன் என்பது சாதகமானதொரு அம்சமாகும். சபையிலுள்ளவாறு நண்பர்களும் நானும் நியாயமானதும் பாரபட்சமற்றதுமான விதத்தில் இதனை அடைவதற்கு கடமைப்பட்டுள்ளோம்.

கடந்த ஆண்டு முழுவதும் பங்குடமையாளர்களுடனும் மற்றும் இலங்கை அரசாங்கத்துடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களும் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றதுடன் செயலாற்றம் மற்றும் இடம்பெற்றுவரும் சவால்கள் தொடர்பில் கிரமமான இற்றைப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஐந்தொகையில் பெரும்சுமையாகவும் அதனுடன் இணைந்தும் காணப்படும் படுகடன் விடயங்கள் போன்றவற்றினை மாற்றி எயார்லையின்ஸினை மாற்றியமைப்பது சாத்தியமில்லையாயின் அது மிகவும் இடர்ப்பாடானதாக இருக்குமென்ற நிலைமையினை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. எனவே, படுகடனை மீளமைப்பதற்கும் 2016 நடுப்பகுதியில் அரச, தனியார் துறை பங்குடமையினை சாத்தியப்படுத்துவதற்காக சாத்தியம்மிக்க பங்குடமையாளர்களிடமிருந்து ஆர்வத்தினை வெளிப்படுத்துமாறு கோருவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு நான் எயார்லையின்ஸ்ஸிலுள்ள முக்கிய சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகளுக்குப் பொருத்தமான ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்த்திருப்பது பற்றி குறிப்பிட்டிருந்தேன். இத்துறைகளுக்குக் குறிப்பாக சர்வதேச விடயங்களுக்கு அனுபவமுள்ளவர்களை உள்ளெடுக்கும் அவசியம் பற்றி நாம் ஏற்றுக் கொண்டிருந்தோம். நாம் வெற்றிகரமான முறையில் புதிய பிரதான நிறைவேற்று அலுவலர், பிரதான வர்த்தக அலுவலர், பிரதான தொழில்நுட்ப அலுவலர் மற்றும் பிரதான நிதி மற்றும் நிருவா அலுவலர் ஆகியோரை இணைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதனை தங்களுக்கு அறிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். இவர்கள் எயார்லையி-ன்ஸ்ஸில் ஏற்பட வேண்டிய மாற்றங்களுக்கு தலைமைத்துவத்தினை வழங்குவர்.

இரத்த நாளங்களைப் போன்று, எமது முகாமைத்துவ அமைப்பினை வலுப்படுத்துவதற்கு நாம் எதிர்பார்த்திருப்பதுடன் முகாமைத்துவப் பயிற்சி ஆட்சேர்ப்புத் திட்டமொன்றினையும் நடைமுறைப்படுத்தியிருக்கின்றோம். இத்திட்டத்தின் கீழ் திறமையும் தேர்ச்சியும் தகைமையும் நிறைந்த ஆட்களைத் தெரிவு செய்வதில் நாம் ஈடுபட்டிருக்கின்றோம். இவர்கள் எதிர்காலத்தில் எயார்லையின்ஸிற்கான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான விடயங்களை மேலும் உருவமைத்துக் கொள்வர்.

எயார்லையின்ஸ் தொழில் துறையின் தொழிற்பாட்டுச் சூழல் தொடர்ந்தும் சவால் நிறைந்ததாகவே காணப்படுகிறது. எனினும், 2015-16இல் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் நிதியியல் ரீதியாக நீண்ட காலம் தாக்குப்பிடிக்கக்கூடிய விதத்தில் சிறிலங்கனுக்குச் சாதன வசதிகளை வழங்குவதுடன் இத்தொழிலை முன்னிலைப்படுத்துகின்ற சேவைகளையும் வழங்கும்.

முடிவாக, இலங்கை அரசாங்கம் எமக்கு தொடர்ச்சியாக வழங்கிவரும் ஆதரவிற்காகவும் எயார்லையின்ஸில் வைத்திருக்கும் நம்பிக்கைக்காகவும் நான் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எயார்லையின்ஸ் அலுவலர்களை வழிநடத்துவதில் சபையிலுள்ள எனது நண்பர்கள் ஆற்றும் பங்களிப்பிற்காகவும் கடினமான பணிக்காகவும் நான் அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் முகாமைத்துவம், அனைத்து ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் வழங்கும் ஒத்துழைப்பு, கடினமான பணி மற்றும் எயார்லையின்ஸிற்கான அர்ப்பணிப்பு என்பனவற்றிற்காக அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**அஜித் நிசங்க டயஸ்**
தலைவர்

2016 திசெம்பர் 22



## எமது பெறுபேறுகள் மாற்றமடைந்து வருகின்ற சந்தை நிலைமைகளின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்ததுடன் எமது வரலாற்றின் மிகப் பெரிய நிலைமாற்றுக் காலத்தில் எது சாத்தியமானதோ அதன் ஒரு பகுதியாக கடுமையான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியவர்களாகவுமிருந்தோம்.

எமது பெறுபேறுகள் மாற்றமடைந்து வருகின்ற சந்தை நிலைமைகளின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்ததுடன் எமது வரலாற்றின் மிகப் பெரிய நிலைமாற்றுக் காலத்தில் எது சாத்தியமானதோ அதன் ஒரு பகுதியாக கடுமையான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியவர்களாகவுமிருந்தோம்.

2016 நிதியாண்டுப் பகுதியின் செயலாற்றத்தில் சிறிலங்கன் குறிப்பிடத்தக்க மேம்பாட்டினை எய்தியமைக்கு பற்றாக்குறையில் ஏற்பட்ட குறைப்பே காரணமாகும். இவ்வாண்டுப் பகுதியில் எமது கிடைக்கத்தக்க இருக்கை கிலோமீற்றருக்கான செலவு ஐ.அ.டொலர் நியதிகளில் 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு குறைந்த எரிபொருள் செலவுகளின் தூண்டுதலும் எமது புதிய A330-300 தொகுதியின் அதிகரித்த வினைத்திறனும் அதேபோன்று 2015 யூனில் ஆரம்பமான கம்பனி முழுவதற்குமான மீளமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் காரணமாக எமது செலவுகள் சிலவற்றில் ஏற்பட்ட முக்கிய குறைப்புக்களும் காரணங்களாக அமைந்தன. சவாலாக விளங்கிய பாரம்பரிய செலவுகள் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்ற வேளையில் மற்றைய துறைகளிலும் முன்னேற்றங்கள் அடையப்பட்டன. இது அலகொன்றிற்கான செலவினைக் குறைக்க உதவியதுடன் இது உண்மையில் சாதகமானதொரு போக்காகவும் காணப்பட்டது. இது தொடருமெனவும் இனிவரும் நிதியாண்டுகளில் செலவுத்தளம் தொடர்ந்தும் மேம்படுமெனவும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் சிறிலங்கனின் துணை நிறுவனமான சிறிலங்கன் கேட்டறிங் மற்றும் ஏனைய உபாயம் மிக்க வியாபாரப் பிரிவுகள் கம்பனியின் செயலாற்றத்திற்கு அதிகரித்த பங்களிப்பினை வழங்கியுள்ளன. நிதியியல் செயலாற்றத்தின் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் சிறிலங்கன் கேட்டறிங், விமானநிலையம் மற்றும் தரைப் பணிகள் அதேபோன்று இலங்கை விமானப் போக்குவரத்துக் கல்லூரி என்பனவற்றில் அவதானிக்கப்பட்டது. இலங்கை விமானப் போக்குவரத்துக் கல்லூ ரியின் இரண்டாவது பட்டமளிப்பு நிகழ்ச்சித்திட்டம் ஆண்டின் இறுதியில் இடம்பெறவுள்ளதுடன் வேறுபட்ட துறைகளில் 300 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு தொழில்சார் நிபுணத்துவ விமானப் போக்குவரத்துத் தகைமைகள் வழங்கப்படவுள்ளன. எமது வாடிக்கையாளர்களுக்கு உயர்தரப் பணிகளை வழங்கும் பொருட்டு எமது உபாயம் மிக்க வியாபார அலகுகளில் தொடர்ந்தும் முதலீடு செய்யவுள்ளோம்.

பொறியியல் பக்கத்தில், யூரோப்பியன் ஏவியேசன் சேவ்ரி ஏஜென்சியின் வகை 145 மற்றும் 147 உறுதிப்படுத்தல்களைப் பெற்றிருப்பதன் காரணமாக, இனிவரும் ஆண்டுகளில் எமது மூன்றாந்தரப்பினருக்கான பொறியியல் பேணல் வியாபாரத்தினையும் பயிற்சி இயலளவையும் வளர்த்துக் கொள்ளக்கூடியவர்களாக இருக்கின்றோம். கூடுதலான மூன்றாந்தரப்புப் பணிகளுக்கு ஆயத்தமாகும் விதத்தில் எமது விமான தொங்கிச் சாதனங்களின் இயலளவினை அதிகரிக்கும் விதத்தில் விரிவாக்கத் திட்டங்கள் ஏற்கனவே நடைபெற்று வருகின்றன.

விமானத் தொழில் துறை முன்னெப்பொழுதுமில்லாத விதத்தில் இவ்வாண்டில் மாற்றத்திற்குள்ளாகி வருகின்றது. எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட கூரியதும் எதிர்பார்க்கப்பட்டதுமான வீழ்ச்சி இத்தொழில் துறையின் குறிப்பிடத்தக்களவு குறுங்கால உத்வேகத்திற்கு வழிவகுத்தது. குறுகிய காலத்திற்கு விமானக் கட்டணங்கள் நிறுத்தி வைக்கப்பட்டதுடன் விமான நிறுவனங்கள் குறிப்பிடத்தக்களவு இலாபங்களை அடைந்து கொள்ளக்கூடியனவாகவும் இருந்தன.

எனினும், அதன் பின்னர் சந்தையானது அதுவாகவே தன்னை உறுதிப்படுத்திக் கொண்டது. இறுதி ஒரு சில மாதங்களில் இதே போன்ற முன்னெப்பொழுதுமில்லாத விதத்தில் விளைவில் (கட்டணத்தில்) வீழ்ச்சியொன்றினை நாம் பார்த்தோம். பெரும்பாலான விடயங்களில், குறிப்பாக ஐரோப்பாவிலிருந்து ஆசியா வரையிலான கட்டணங்கள் கடந்த இரண்டாண்டு காலமாக பெரும்பாலும் அரைவாசியாகவே காணப்படுகின்றது.

எயார்லையின் பணத்திற்கேற்றவாறு மிகச் சிறந்த பணியினை வழங்குகையில் அதன் மூலதனத்தின் மீது போதுமான வருமானத்தினைப் பெறத்தவறி விடுவதனால் அதன் வியாபாரம் வரலாற்று ரீதியான இடர்ப்பாடுகளுக்கு திரும்பிவிடுவதனால் பலவிதமான நிறுவனங்களினால் அறிக்கையிடப்பட்ட சாதனைமட்ட இலாபங்கள் ஒரு குறுங்கால நிகழ்வாகவே காணப்பட்டன.

எனினும், இந்நிலைமையினை கருத்திற்கொள்ளாது சந்தைப் பங்குகளைப் பின்பற்றுவதில் சில பாரிய விமான நிறுவனங்களினால் சந்தையில் மேற்கொள்ளப்படும் ஒழுங்கற்ற இயலளவு அதிகரிப்புக்களை நாம் காண்கின்றோம். இது சந்தை நிலைமையினை மேலும் மோசமாக்கி வருமானத்தினை மேலும் குறைத்துவிடும்.

எமது சொந்தப் பெறுபேறுகள் இம்மாற்றமடைந்துவரும் சந்தை நிலைமைகளினால் பாதிக்கப்பட்டதுடன், எமது வரலாற்றில் மிகப் பெரும் மாற்றத்திற்குள்ளாகும் தன்மையாக எது சாத்தியமோ அதன் ஒரு பகுதியாக மிகக் கடினமாகத் தீர்மானங்களை நாம் எடுத்தோம். ஐரோப்பிய மையங்களான பிராங்பேர்ட், பரிஸ் மற்றும் ரோம் என்பனவற்றிற்கான தொழிற்பாடுகளை நிறுத்துவதென்ற எமது தீர்மானம் இந்நடவடிக்கைளின் ஒரு பகுதியாக இருந்ததுடன் தீவிரமான சவால்மிக்க சந்தை நிலைமைகளினால் இது மேற்கொள்ளப்பட்டதுடன் இது இப்பாதைகளுக்கான தொழிற்பாடுகளையும் உறுதியற்றதாகிவிட்டது. இத்தீர்மானமானது, எயார்லையின் மற்றும் இலங்கையின் சுற்றுலா தொழில் இரண்டின் மீதுமான தாக்கத்தினை மிகவும் கவனமாகவும் விபரமாகவும் பகுப்பாய்வு செய்ததன் பின்னர் மேற்கொள்ளப்பட்டதுடன் வியாபாரத்தினை முன்கொண்டு செல்வதற்கான செலவுச் சேமிப்புக்களையும் இது உருவாக்குமென எதிர்பார்க்கப்பட்டது. இம்மையங்களுக்கும் இலங்கைக்குமிடையிலான இணைப்பினையும் நாம் உறுதிப்படுத்தியிருப்பதுடன் இது எமது வண்வேர்ள்ட் பங்குடமையாளர்களுடனும் மற்றைய எயார்லையின் பங்குடமையாளர்களுடனும் குறியீட்டுப் பகிர்வு பறப்புக்களினூடாகத் தொடர்ந்தும் பேணப்படும்

முன்னோக்கிப் பயணிக்கையில், சிறிலங்கன் நன்கு செயலாற்றும் ஆசிய பாதைகளில் அதன் பிரசன்னத்தினை வலுப்படுத்தவும் - கம்பனியின் நிதியியல் செயலாற்றத்தினை மேம்படுத்தவும், முக்கிய பிராந்திய மையங்களுடனான இலங்கையின் இணைப்பினை அதிகரிக்கவும் பெறுமதிகூடிய சிறிய சந்தைகளுக்கு பணியாற்றவும் எதிர்பார்க்கப்படுகிறது. எமது தொழிற்பாடுகளினூடாக செலவுகளை நாம் தீவிரமாகச் சேமிக்கின்ற வேளையில் எமது உற்பத்திகளையும் சேவைகளையும் மேம்படுத்தும் விதத்தில் முதலீடுகளை மேற்கொள்ளவும் நாம் ஆழமாகச் சிந்தித்து வருகிறோம். இம்முதலீடுகள் எமது புதிய விமான ஊர்திகளுடன் சேர்ந்து சந்தைகளில் எமது போட்டித்தன்மையினை உயர்த்தும் என்பதுடன் சிறிலங்கனை கூடுதலான வாடிக்கையாளர் தெரிவுசெய்வதற்கான முன்னுரிமையினை அளிக்கச் செய்வதற்கும் உதவும். இம்முயற்சிகளின் பெறுபேறுகளை, அனைத்துப் பாதைகளிலும் சிறிலங்கனின் வாடிக்கையாளர் தரமிடலில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளுடன் வெளிப்படையாகக் காணமுடிகிறது. வாடிக்கையாளர்கள் சிறிலங்கனின் உபாயத்தின் இருதயத்தில் இருப்பதுடன் நாம் தரையிலும் வானிலும் எமது அனுபவங்களை உயர்த்துவதற்கும் நாம் திடசங்கற்பம் பூண்டிருக்கிறோம்.

2017இல் சிறிலங்கன் எயார்லையின், பயணிகளின் வசதிகளை அதிகரிப்பதற்கும் வினைத்திறன்களைத் தூண்டுவதற்குமென முதற்தடவையாக பல எயார்பஸ் A320 நியோ குடும்ப வானூர்திகளை அறிமுகப்படுத்துவதற்கு எண்ணியுள்ளது. இப்புதிய விமானங்கள் எமது புதிய உபாயங்களுக்குத் துணையாக விளங்குமென்பதுடன் சந்தை மாற்றங்களுக்கு விரைந்தும் லாபகமான முறையிலும் செயலாற்றுவதனையும் இயலச்செய்யும்.

எனினும், இடர்பாடான தன்மைகள் இன்னமும் முடியவில்லை. எமது எதிர்காலத் திட்டங்கள் பற்றி சுழன்றுவரும் மிக நெருக்கடியான பிரச்சனை யாதெனில் நான்கு எயார்பஸ் A350-900 விமானங்களை எமது தொகுதியில் சேர்க்கும் விதத்தில் 2016 மற்றும் 2017இல் விநியோகிப்பதற்காக மிகவும் வேறுபட்ட பொருளாதார மற்றும் தொழிற்பாட்டுச் சூழலில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமேயாகும். வர்த்தக ரீதியாக, இந்நடவடிக்கையினை மேற்கொள்வது சிறிலங்கனுக்குச் சாத்தியமானதொரு தேர்வாக இருக்காது. இவ்விமானத்திற்காக ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வினைக் கண்டறியும் பொருட்டு எயார்பஸ் மற்றும் விமானங்களின் குத்தகையாளர்களுடன் நாம் தொடர்ந்தும் தீவிரமான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறோம். இதன்படி, 2016 மாச்சில் ஒரு விமானத்திற்கான குத்தகை உடன்படிக்கையினை ஒரு தடவையிலான இரத்துச்செய்தல் கட்டணத்துடன் இரத்துச் செய்யக்கூடியவர்களாக இருந்தோம். இது இவ்வாண்டிற்கான அறிவிக்கப்பட்ட இழப்பின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடியதாக இருந்ததுடன் எஞ்சிய மூன்று வானூர்திகள் மீதான பேச்சுவார்த்தைகளையும் 2016 ஒத்தோபரில் இறுதிப்படுத்தக் கூடியதாக இருந்ததுடன் குத்தகையாளருடனான குத்தகை முடிவுறுத்தல் உடன்படிக்கைகளும் தற்பொழுது முடிவுறுத்தப்பட்டுள்ளன. இத்தீர்மானமானது செலவுமிக்கதொன்றாக இருப்பினும் வெளிநாட்டு நிபுணத்துவ பகுப்பாய்வுகள் இதனை ஆதரிப்பதுடன் பொருளாதாரச் சூழலில் முழுமையான மதிப்பீடாகவும் காணப்படுகின்றது. எயார்லையினின் உறுதிவாய்ந்த எதிர்காலத்திற்கு இதுவே மிகச் சிறந்த தேர்வாக இருக்குமென்பதில் ஐயமில்லை. சந்தையில் அகன்ற உடலமைப்பினைக் கொண்ட விமானங்கள் மிகையாகக் காணப்படும் தற்போதைய சூழ்நிலையினைக் கருத்திற்கொள்கையில் இந்த இரத்து நடவடிக்கை முன்கூட்டிய தீர்மானமாகக் காணப்படுகிறது.

சந்தையில் நிலவும் போட்டித்தன்மை பயங்கரமானதொரு நிலைக்கு தொடருமென்பதுடன் சந்தையில் மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடியவர்களினால் மட்டுமே உயிர் வாழமுடியும். நாம் அடைவோம் என நம்பும் கலப்பு விமானத் தொகுதி, ஏற்கனவே குறிப்பிடப்பட்ட வலையமைப்பு மாற்றங்களுடன் சேர்ந்து எமது எயார்லையின்ஸ்சுக்கான உறுதியான எதிர்காலத்திற்கான அத்திவாரத்தினைக் கட்டியெழுப்ப உதவும். எமது மீளமைத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்கு இதுவாகவே இருப்பதுடன் எமது பங்காளர்களின் ஆதரவுடன் சேர்த்து இவ்விலக்கினை நாம் அடைவோம் எனவும் திடமாக நம்புகிறேன.

இவ்வாண்டு முழுவதும் எமக்களித்த ஆதரவிற்காக அனைத்துக் குழுமங்களினதும் ஊழியர்களுக்கும் பங்குடமையார்களுக்கும் வாடிக்கையாளர் மற்றும் பங்குடமையாளர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். எதிர்வரும் ஆண்டுகளில் ஆற்றுவதற்கு எமக்கு நிறைய வேலைகளுண்டு; எனினும் நாம் அவற்றை நல்லதே நடக்குமென்ற வளர்ந்துவரும் உணர்வுடனும் நம்பிக்கையுடனும் எதிர்கொள்வோமாக.



**சுரேன் ரத்வத்தை**
முதன்மை நிறைவேற்று அலுவலர்

2016 திசெம்பர் 22

# பணிப்பாளர்களின் விபரக் குறிப்பு



**அஜித் என் டயஸ்**
தலைவர்



**ஜே. எம். எஸ். பிறிட்டோ**



**ஆர். சி. டி. த சில்வா**



**மகிந்த ஹரதாசா**



**றக்கித்த ஜெயவர்த்தன**



**சுனில் டி. பீரிஸ்**



7

ஹரீந்திரா கே. பாலபட்டபென்தி



8

நிரஞ்சன் த சில்வா தேவா ஆதித்திய

### 1. அஜித் என் டயஸ்

திரு. அஜித் என் டயஸ் 2015 பெப்புருவரி 12ஆம் நாளன்று சிறிலங்கன் எயார்லையின்ஸ்சின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டதுடன், சிறிலங்கன் எயார்லையின்ஸ், சிறிலங்கன் கேட்டறிங் மற்றும் மிகின் லங்கா (பிறைவேற்) லிமிடெட் என்பனவற்றின் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார்.

இவர் ஐக்கிய ராஜ்யத்தின் ரெக்ஸ்ரையில் இன்சிற்றியூற்றின் உறுப்பினராவர். ஐக்கிய ராஜ்யத்தின் சல்போட் பல்கலைக்கழகத்தின் பட்டயம் பெற்ற புடவைத் தொழில்நுட்பவியலாளருமாவார்.

ஆடைக் கைத்தொழிலின் முன்னோடியான இவர் பிறாண்டிக்ஸ் குழுமத்தின் இணை நிறுவனராவர். இவர், இணைந்த ஆடைச் சங்கங்களின் கூட்டமைப்பினதும் சுதந்திர வர்த்தகவலய தயாரிப்பாளர் சங்கத்தினதும் கொழும்பு ஹில்டனின் சொந்தக் கம்பனியான ஹோட்டல் டெவலப்பேர்ஸ் (பிறைவேற்) லிமிடெட்டினதும் தலைவராகவும் இருந்து வருகின்றார்.

தற்பொழுது, இவர் ஆடை ஏற்றுமதி, வேளாண்மை மற்றும் பொழுதுபோக்குத் தொழில் துறைகளில் மிகுந்த ஈடுபாடு காட்டி வருகின்றார்.

### 2. ஜே. எம். எஸ். பிறிடட்டோ

2015 பெப்புருவரி 12ஆம் நாளன்று சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்ட இவர் சிறிலங்கா கேட்டறிங் லிமிடெட் மற்றும் மிகின் லங்கா (பிறைவேற்) லிமிடெட் என்பனவற்றின் பணிப்பாளராகப் பணியாற்றுகின்றார்.

எல்எல்பி (லண்டன் பல்கலைக்கழகம்) மற்றும் எம்பீஏ (லண்டன் சிற்றி பிசினஸ் ஸ்கூல்) ஆகிய பட்டங்களுக்குச் சொந்தக்காரரான இவர் இலங்கை, லண்டன் மற்றும் வேல்ஸ் பட்டயக் கணக்காளர் நிறுவனங்கள் இரண்டினதும் உறுப்பினருமாவர்.

பல்வேறுபட்ட துறைகளில் ஆழ்ந்த புலமையினைக் கொண்டுள்ள இவர் பிறைஸ் வோட்டர்கவுஸ் லண்டன், உலக வங்கி என்பன உள்ளிட்ட பல்வேறு சர்வதேச அமைப்புக்களில் பணியாற்றிய 35 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பெறுமதிமிக்க அனுபவங்களை தன்னகத்தே கொண்டிருக்கின்றார்.

தற்பொழுது திரு. பிறிட்டோ எயிற்கன் ஸ்பென்ஸ் பிஎல்சி, எயிற்கன் ஸ்பென்ஸ் ஹோட்டல் ஹோல்டிங்ஸ் பிஎல்சி என்பனவற்றின் துணைத் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் எல்பிற்றிய பிளாண்டேஷன் பிஎல்சி இன் தலைவராகவும் பணிபுரிகிறார். இவர் டிஎவ்சிசி வங்கி, டிஎவ்சிசி வர்த்தன வங்கி, சிறிலங்கன் எயார்லையின்ஸ் மற்றும் இலங்கை ஊழியர் கூட்டமைப்பின் முன்னாள் தலைவருமாவர்.

### 3. ஆர். சீ. டி. த சில்வா

2015 பெப்புருவரி 12ஆம் நாள் சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்ட இவர் இதற்கு முன்னர் 2002-2004ஆம் ஆண்டுப்பகுதியிலும் பணிப்பாளராக பணியாற்றியிருக்கின்றார்.

இவர் சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்டின் பணிப்பாளருமாவர்.

களனி ரயர்ஸ் பிஎல்சி தனியார் மயமாக்கப்பட்டதிலிருந்து (1992) தலைவராகவும் கூட்டு முயற்சியாக உருவாக்கப்பட்டதிலிருந்து சியற் கம்பனிகள் குழுமத்தின் இலங்கைத் தலைவராகவும் (1998) பணியாற்றியதுடன் இவர் தற்பொழுது வீல்ஸ் குறூப் கம்பனிகளின் தலைவராக இருந்து வருகின்றார்.

இவரினால் நிறுவப்பட்ட யூனியன் கொமோடிரீஸ் (பிறைவேற்) லிமிடெட்டின் தலைவராக 2013 திசெம்பர் 31 வரை இருந்த இவர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், ரான்ஸ் ஏசியா ஹோட்டல், கிளப் றொபின்சன், யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு லிமிடெட்டின் முன்னாள் தலைவராகவும் இருந்திருக்கின்றார். இவர் ஏசியன் அலையின்ஸ் இன்சூரன்ஸ், டெல்மேஜ் வோசைத் லிமிடெட், லீவிஸ் பிறவுண் அன்ட் கம்பனி லிமிடெட், இன்ரகொன்டினல் ஹோட்டல் மற்றும் ஒப்றோய் ஹோட்டலின் பணிப்பாளராகவும் பணியாற்றியிருக்கிறார்.

### 4. மகிந்த ஹரதாசா

2015 பெப்புருவரி 12ஆம் நாள் சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்ட இவர் முன்னர் 2002-2004 காலப்பகுதியிலும் பணிப்பாளர் சபையில் பணியாற்றியிருக்கின்றார்.

இவர் சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட் மற்றும் மிகின் லங்கா (பிறைவேற்) லிமிடெட் என்பனவற்றின் பணிப்பாளருமாவர்.

1985-2004 காலப்பகுதியில் இவர் வார்ணஸ் லங்கா சட்ட அலுவலகத்தின் சிரேஷ்ட பங்காளராக இருந்ததுடன தற்பொழுது வார்ணஸ்சின் சிரேஷ்ட பங்காளராக இருந்து வருகின்றார்.

தொழில் முறையில் சட்ட அறிஞராக இருந்த இவர் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம், சர்வதேச அபிவிருத்திக்கான சங்கம், சர்வதேச இறைச் சங்கம் என்பனவற்றின் உறுப்பினரான இவர் ஐஎவ்ஏ (இலங்கை) கிளை இல் நிறுவன உறுப்பினர். ஏசியன் பேற்றன் அற்றனிஸ் அசோசி'சன் மற்றும் இன்ர பசுபிக் பார் அசோசி'சன் என்பனவற்றின் நிறுவன உறுப்பினருமாவர்.

### 5. றக்கித்த ஜெயவர்த்தன

2015 பெப்புருவரி 20ஆம் நாளன்று சிறிலங்கன் எயார்லையின்ஸின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்ட இவர் சிறிலங்கன் கேட்டறிங்க் லிமிடெட்டினதும் மற்றும் மிகின் லங்கா (பிறைவேற்) லிமிடெட்டினதும் பணிப்பாளராக பணியாற்றுகின்றார்.

தலைவர்/முதன்மை நிறைவேற்று அலுவலர், பொது முகாமையாளர் போன்ற சிரேஷ்ட பதவிகளை வகித்தமையின் மூலம் அவர் குளோபல் எயார்லையின்ஸ்சின் தொழில் துறையில் 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தையும் நிபுணத்துவ வெளிப்படுத்துகைகளையும் கொண்டிருப்பதுடன் இவர் நியூயோர்க் (ஐக்கிய அமெரிக்கா), லண்டன் (ஐக்கிய இராச்சியம்), கொங்கொங் மற்றும் இலங்கையினைத் தளமாகக் கொண்டு தொழிற்படுகின்ற, அமெரிக்காவிலிருந்து ஐரோப்பா வரை, ஆசிய பசுபிக் மற்றும் ஆபிரிக்கா வரை தொழிற்படுகின்ற பாரம்பரிய போக்குவரத்து நிறுவனங்கள், ஒப்பந்த அடிப்படையிலான மற்றும் குறைந்த செலவிலான விமான நிறுவனங்களுக்கும் பணிகளை வழங்குகின்றார்.

விமானப் பயணம் தொடர்பான சில்லறை தொழில் துறைக்கான அவரின் பங்களிப்பு உலகளாவிய ரீதியில் அங்கீகரிப்பட்டிருப்பதுடன் அவருக்கு பல விருதுகளையும் கௌரவங்களையும் சேர்த்திருக்கிறது.

- இலண்டனில் ஒஸ்கார் 'ஐஎஸ்பிவை' இல் 2015ஆம் ஆண்டிற்கான உறுப்புரிமை விருது
- 2014ஆம் ஆண்டின் விமான உள்ளகப் பணிகளுக்கான ஆளுகை விருது, எயார்லையின்ஸ் சில்லறை மாநாடு
- இத்தொழில் துறையின் மிகப்பெரும் சக்தியாகவும் ஐ.அ.டொலர் 10 பில்லியனுக்கு மேற்பட்ட மொத்தப் புரள்வினைக் கொண்டதுமான ஆசிய பசுபிக் றவல் றிரெயில் அசோசியேசனில் நிறுவனத் தலைவராக ஏகமனதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

லண்டன் இன்சிற்றியூட் ஒவ் மார்கற்றிங் இன் முழு உறுப்பினராவர்.

### 6. சுனில் டி. பீரிஸ்

2015 பெப்புருவரி 12ஆம் நாளன்று சிறிலங்கன் எயார்லையின்ஸ்சின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டதுடன் மனிதவள நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட் மற்றும் மிகின் லங்கா (பிறைவேற்) லிமிடெட்டின் பணிப்பாளராகவும் பணியாற்றுகின்றார்.

இவர் இருபது ஆண்டு காலச் சேவையைக் கொண்ட, ஓய்வுபெற்ற இராணுவ அலுவலராவர்.

சிலோன் ருபாக்கோ கம்பனி லிமிடெட் மற்றும் குறூப் றிஸ்க் அன்ட் சேவ்ரி என்பனவற்றின் முகாமையாளராக விளங்கியதுடன் சி.ரி.சி றேடிங் கம்பனி லிமிடெட்டின் பொது முகாமையாளராகவும் இருந்தவர். அதன் பின்னர் அவர் றிச்சேர்ட் பீரிஸ் எக்ஸ்போட்ஸ் லிமிடெட்டின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளராகவும் றிச்சேர்ட் பீரிஸ் டீஸ்ரிபியூட்டர்ஸ் மற்றும் றிச்சேர்ட் பீரிஸ் கீல்ஸ் பிளாண்டேஷன் லிமிடெட் என்பனவற்றின் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். இவர், ஒன்றிணைக்கப்பட்ட கிறபைட் (பிறைவேற்) லிமிடெட்டின் முகாமைத்துவப் பணிப்பாளாராகவும் பணியாற்றியுள்ளார். இவர் பிளாஸ்ரிபக் லிமிடெட் அவுஸ்திரேலியாவின் தலைவராகவும் நிப்போன் நேச்சர் போம்ஸ் (பிறைவேற்) லிமிடெட்டின் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் பணியாற்றியிருக்கின்றார்.

### 7. ஹரீந்திரா கே. பாலபட்டபெந்தி

இவர் 2015 யூன் 26ஆம் நாளிலிருந்து சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார்.

இவர் பாதுகாப்பான அச்சிடல் மற்றும் லக்ஷ்ஷறி ஹோம் டெவலெப்மென்ட் (அவுஸ்திரேலியா) இற்கான அதிகாரம்பெற்ற வங்கித்தொழில் போன்ற பரந்தளவிலான துறைகளில் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட முழுமையான தொழில்முயற்சியாளராக விளங்குகின்றார். இவர் நிக் மற்றும் றீபுக் ஆகிய வர்த்தக நாமங்களை இலங்கைக்கு அறிமுகப்படுத்துவதில் முன்னோடியாக இருந்தவர். ஆலோசனை ஒப்படைகள் தொடர்பில் பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நெதர்லாந்து, சீனா மற்றும் இந்திய ஆகிய நாடுகளிலிருந்தான பல்தேசிய ஒத்துழைப்புக்களை ஏற்படுத்துவதில் ஈடுபட்டிருக்கின்றார்.

திரு. பாலபட்டபெந்தி அவர் நிறுவிய ஓபல் குழுமத்தின் தலைவர்/முதன்மை நிறைவேற்று அலுவலராக இருக்கின்றார். இக்குழுமமானது பாதுகாப்பு அட்டைகளை அச்சிடல், கட்டுமானம், நீர் சுத்திகரிப்பு, மாற்று வலு, எண்ணெய் சுத்திகரிப்பு என்பனவற்றில் ஈடுபட்டிருந்ததுடன் இவர் இலங்கையில் ஒபத்தியூர் (பிரான்ஸ்), எச்ஐடி (ஐக்கிய அமெரிக்கா) என்பனவற்றினையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்.

இலங்கை ஐக்கிய அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியாவில் கல்வி கற்ற இவர் வியாபார முகாமைத்துவத்தில் பட்டமொன்றினையும் வியாபார நிருவாகத்தில் முதுமானிப் பட்டத்தினையும் (எம்பீஏ - அவுஸ்திரேலியா) வியாபார நிறைவேற்றுநர் சங்கத்தின் (எம்ஏபீஈ - ஐக்கிய இராச்சியம்) உறுப்பினராகவும் இருக்கின்றார். இவர் பட்டய முகாமைத்துவ நிறுவகத்தின் உறுப்பினராவர்.

உறுப்பினர் - ஐரோப்பிய வர்த்தக சம்மேளனம்

உறுப்பினர் - இலங்கை சீன வியாபாரச் சபை

### 8. நிரஞ்சன் த சில்வா தேவா ஆதித்திய

2015 மே 26ஆம் நாளிலிருந்து சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

இவர் ஒரு விமானவியல் பொறியியலாளராவர். றோயல் ஏரோ நியூட்டிக்கல் சோசையிற்றியின் பட்டதாரியான இவர் லோபுறோ பல்கலைக்கழகத்திலிருந்து விமானவியல் பொறியியலில் சிறப்புப் பட்டத்தினைப் பெற்றவர். இவர் 1986இல் பிரதம மந்திரி மார்க்கிறற் தச்சரின் கீழ் ஐரோப்பிய விமானப் போக்குவரத்தின் ஒழுங்குகளைத் தளர்த்துவதன் மீதான குழுவின் தலைவராகப் பணியாற்றியதுடன் ஐக்கிய இராச்சியத்தின் இரண்டாவது பெரிய விமான நிறுவனமான எயார் யூரோப்பாவின் பணிப்பாளர் சபையில் பணியாற்றியதுடன் போக்குவரத்திற்குப் பொறுப்பான விதத்தில் ஸ்கொட்லாந்து அலுவலகத்தில் ஜோன்மேயரின் அரசாங்கத்தில் பாராளுமன்றச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். ஐரோப்பிய பாராளுமன்றத்தின் போக்குவரத்துக் குழுவில் பணியாற்றிய இவர் தற்பொழுது 23 பில்லியன் யூரோ அபிவிருத்தி வரவு செலவுத்திட்டத்தினை மேற்பார்வையிடுகின்ற வெளிநாட்டு அபிவிருத்திக் குழுவின் துணைத் தலைவராகவும் இருந்து வருகின்றார்.

கொன்சவேற்றிக் கட்சியின் உறுப்பினரான இவர் 1999 தொடக்கம் 8 மில்லியன் மக்களைக் கொண்ட தென் கிழக்கு இங்கிலாந்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்றார். இதற்கு முன்னர் 1992 இலிருந்து 1997 வரையான காலப்பகுதியில் பிறன்போட் மற்றும் ஐல்வேர்த் தொகுதியினைப் பிரதிநிதித்துவப்படுத்தி பிரித்தானிய பொதுச் சபையின் பாராளுமன்ற உறுப்பினராகவும் ஸ்கொட்லாந்தில் பிரித்தானிய அரசாங்கத்தின் உறுப்பினராகவும் இருந்தார். பொதுச் சபையின் துணைத் தலைவராக விளங்கிய இவர் விமானப் போக்குவரத்து தொடர்பான குழுவின் தலைவராகவும் இருந்தார். இவர் பொதுச் சபையின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட காலணித்துவத்திற்குப் பின்னைய ஆசியாவில் பிறந்த முதலாவது நபராக விளங்குவதுடன் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் கொன்சவேற்றி உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஆசிய நாட்டவராகவும் விளங்கினார்.

அவர் வட கொரியாவிற்கும் தென் கொரியாவிற்குமிடையில் சமாதானத்தினைக் கொண்டு வருவதற்கான ஐரோப்பிய ஒன்றியம் - கொரிய தூதுக்குழுவினது தலைவராக விளங்குகின்றார். அவர் ஐரோப்பிய ஒன்றிய சீன பாராளுமன்ற சிநேகபூர்வ குழுமத்தின் தலைவராகவும் ஐரோப்பிய ஒன்றியம் இந்தியாவின் வர்த்தகச் சம்மேளனத்தின் ஆயுள்காலத் தலைவராகவும் இருக்கின்றார். அவர் இலண்டன் மேதகு மகாராணியினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற லண்டன் மாநகரின் லோர்ட் லெப்டிடென்சியில் மேதகு துணை லெப்டினட் ஆக 1985 இலிருந்து பணியாற்றுவதுடன் 2011 மாச்சில் கத்தோலிக்க தேவாலயத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவராகவும் அவரினால் ஆற்றப்பட்ட சுனாமி நிவாரண பணிகளுக்காக பௌத்த துறவியினால் விஷ்வ கீர்த்தி சிறிலங்கா அபிமானி என்ற பட்டமும் வழங்கப்பட்டது. அண்மையில் இவர் இலங்கை பிரதமருக்கான கௌரவ மூத்த மதியுரையாளர்களிலொருவராகவும் நியமிக்கப்பட்டார். இவர் லண்டனிலும் கொழும்பிலுமுள்ள பட்டியலிடப்பட்ட பகிரங்கக் கம்பனிகள் பலவற்றிலும் பணிப்பாளராக பணியாற்றியுள்ளார்.



1

**சுரேன் ரத்வத்தை**
முதன்மை நிறைவேற்று அலுவலர்

கப்டன் சுரேன் ரத்வத்தை 2015 ஒத்தோபர் 15ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் முதன்மை நிறைவேற்று அலுவலராக நியமிக்கப்பட்டார். விமான நிறுவனமொன்றின் விமானியான கப்டன் சுரேன் ரத்வத்தை இத்தொழில் துறையில் 30 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அனுபவத்தினைக் கொண்டவர். 1984இல் எயார் லங்காவில் முதலில் இணைந்ததன் பின்னர் 1989இல் எமிறேட்சிற்குச் சென்ற இவர் அக்கம்பனியில் பல்வேறு பதவிகளையும் வகித்தார். போயிங் B-777 மற்றும் எயார்பஸ் A-380 என்பன உட்பட பல்வேறு வகைப்பட்ட விமானங்களில் 1900 இற்கு மேற்பட்ட பறப்பு மணித்தியாலங்களுடன் இவர் உலகளாவிய சூழ்நிலைகளில் பரந்த அனுபவங்களைக் கொண்ட ஒருவராவர்.

எம்றி றைடில் ஏரோறநியூரிகல் பல்கலைக்கழகத்திலிருந்து இளமானிப் பட்டத்தினையும் முதுமானிப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்ட இவர் றோயல் ஏரோறநியூரிகல் சங்கத்தின் உறுப்பினருமாவார். பல்வேறு கட்டுரைகளின் ஆசிரியரான சுரேன் பல ஆண்டுகளாக விமான நிறுவனத் தொழிற்பாடுகளில் ஆழமாக மூழ்கிப் போனவர்.

சுரேன் நன்கறிந்த மனித காரணிகளின் ஆராய்ச்சியாளரும் பயிற்சியாளருமாவர். இவர் இத்துறையில் அநேக சிறப்புக் கட்டுரைகளையும் எழுதியிருக்கின்றார். விமான நிறுவனங்களில், மிக அண்மையில் எமிறேட்ஸ் விமான நிறுவனம் உட்பட பல்வேறு வகையான முக்கிய அறிவுத்தல்களை விடுக்குமளவிற்கு முகாமைத்துவப் பதவியினை ஆற்றியிருக்கின்றார்.



2

**சிவா இராமச்சந்திரன்**
பிரதான வர்த்தக அலுவலர்

இத்துறையில் 40 ஆண்டு கால அனுபவத்தினைக் கொண்ட இவர் கடந்த காலங்களில் சிங்கப்பூர் எயார்லையின்ஸ், கட்டார் எயார்வேய்ஸ், கிங்விஸர் எயார்லையின்ஸ், ஜெட் எயார்வேயிஸ் இறுதியாக நைஜீரியாவின் எறிக் எயார் போன்ற முன்னணி விமான நிறுவனங்களில் பணியாற்றியிருக்கின்றார். இவர் எயார்லங்கா என அழைக்கப்பட்ட சிறிலங்கன் எயார்லையின்ஸ்ஸில் 1991-2002 வரையான ஒரு தசாப்த காலமாக பணியாற்றியிருக்கின்றார். இவ்விமான நிறுவனங்களில் அவர் உபாயம்மிக்கப் பதவிகளில் பணியாற்றியதுடன் ஆசியா, மத்திய கிழக்கு, ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் ஆபிரிக்கா போன்ற பல இடங்களில் பணியாற்றியிருக்கின்றார். பிரதான வர்த்தக அலுவலராக சிறிலங்கன் எயார்லையின்ஸ்ஸில் இணைவதற்கு முன்னதாக ஆபிரிக்க விமான நிறுவனத்தில் சிரேஷ்ட உதவி வர்த்தகத் தலைவராகப் பதவியை வகித்தார். அவரின் முக்கிய கவனம், வர்த்தக நடவடிக்கைகளில் காணப்பட்ட வேளையில் தரைப் பணிகள் மற்றும் நிதி தொடர்பான ஆழ்ந்த அறிவும் பறப்பு தொழிற்பாடுகள் மற்றும் பேணல் தொடர்பான அவரது முன்னைய அனுபவங்களும் விமான நிறுவனத்திற்கான அவரது பங்களிப்பிற்கு மேலும் பெறுமதி சேர்த்தன.


3


4

**மனிக் குணசேகரா**
பிரதான கம்பனி அலுவல்கள் அலுவலர்

1995இல் கம்பனியில் இணைந்து கொண்ட இவர் 2010 வரை பணியாற்றியதுடன் தற்பொழுது நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்கான ஒப்பந்தமொன்றின்படி பிரதான கம்பனி அலுவல்கள் அலுவலராக பணியாற்றுகிறார்.

கம்பனியில் அவர் பணிபுரிந்த காலப்பகுதியில் சர்வதேச உறவுகள், வர்த்தகத் திட்டமிடல் மற்றும் காப்புறுதி ஆகிய துறைகளில் பல்வேறு பதவிகளை வகித்திருக்கின்றார். கம்பனியில் இணைவதற்கு முன்னர் திருமதி. குணசேகரா வெஸ்ற்பக் பாங்கிங் கோப்பிரேஷன், அவுஸ்திரேலியா மற்றும் ஜேம்ஸ் பெறி அன்ட் அசோசியேட், டுபாய் என்பனவற்றிற்காகப் பணிபுரிந்திருக்கின்றார். இவர் இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்தான இளம் சட்டமானிப் பட்டத்திற்கும் ஐக்கிய அமெரிக்காவின் ஹாவார்ட் சட்டக் கல்லூரியின் சட்ட முதுமானிப் பட்டத்திற்கும் சொந்தக்காரராவர்.

**லலித் வித்தான**
குழும பிரதான நிதி மற்றும் நிருவாக அலுவலர்

திரு. லலித் வித்தான கம்பனித் துறையில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக பல முகாமைத்துவப் பதவிகளை வகித்திருக்கின்றார். இதில் அவர் வங்கித்தொழில், தயாரிப்பு மற்றும் வர்த்தகப்படுத்தலில் 20 ஆண்டுகளுக்கும் மேல் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் பணிபுரிந்திருக்கின்றார். இவர் பிரான்டிக்ஸ் குழுமம், ஏர்னஸ்ட் அன்ட் யங், ஆம்ஸ்ரடாம் றொட்டடாம் (அம்றோ) வங்கி, ஐபீஎம் வேள்ட் றேட் கோப்பிரேஷன் அன்ட் கார்சன் கம்பர்ச், பப்ளிக், எம்ஜேஎவ் குழுமம் மற்றும் யமகா கோப்பிரேஷன் (ஐக்கிய அமெரிக்கா) ஆகிய பல நிறுவனங்களில் பணியாற்றியுள்ளார்.

திரு. வித்தான தற்பொழுது நிதி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் பதவி ஏற்பாட்டு தொழிற்பாடுகளைக் கவனிக்கும் விதத்தில் சிறிலங்கன் எயார்லையின்ஸ் மற்றும் மிகின் லங்காவிற்கான குழும பிரதான நிதி மற்றும் நிருவாக அலுவலராக தொழில்புரிகின்றார். இப்பதவிக்கு மேலதிகமாக அவர் இதன் துணை நிறுவனமான சிறிலங்கன் கேட்டறிங்கின் பொது முகாமையாளராக அதனை முகாமைப்படுத்தியும் வருகின்றார்.

இவற்றிற்கு முன்னர் இவர் இலங்கை வங்கி, தங்கொட்டுவ புறோசலீன் பிஎல்சி, மேர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா பிஎல்சி, சிலீஸ் லிமிடெட் மற்றும் செலான் வங்கி என்பனவற்றின் பணிப்பாளர் சபையில் சுயாதீனப் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். திரு. வித்தான தொலைத்தொடர்பூட்டல் ஆணைக்குழுவில் ஒரு ஆணையாளராகவும் இருந்திருக்கின்றார்.

திரு. வித்தான கொழும்பு சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்த வியாபார நிருவாகத்தில் முதுமானிப் பட்டத்தினையும் இளம் கலைமானி (ஆர்னஸ்) பட்டத்தினை ஐக்கிய இராச்சியம் மன்செஸ்டர் மெற்றோபொலிட்டன் பல்கலைக்கழகத்திலிருந்தும் பெற்றுக்கொண்டார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவக் கணக்காளர் பட்டய நிறுவகம், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் ஆகிய இரண்டினதும் உறுப்புரிமையாளராவர். இவர் ஐக்கிய அமெரிக்காவின் புறொஜக்ட் மனேஜ்மன்ட் இன்ஸ்ரிரியூட்டில் முகாமைத்துவ தொழில்சார் நிபுணருமாவார்.



5

**தின்னக பத்மபெரும**

பிரதான தொழில்நுட்ப அலுவலர்

2016இல் பிரதான தொழில்நுட்ப அலுவலராக கம்பனியில் இணைந்து கொண்டார். இணைவதற்கு முன்னதாக அவர் அமன்ரம் கப்பிட்டல் மற்றும் மகப் யூரோப் ஆகிய விமானக் குத்தகைக் கம்பனிகளில் சிரேஷ்ட பதவியினை வகித்ததுடன் அங்கு அவர் தயாரிப்பாளர்கள் மற்றும் குத்தகைத்தாரர்களிடமிருந்து விமானங்களைக் கொள்வனவு செய்யும் தொழில்நுட்ப மற்றும் வர்த்தக விடயங்களிலும் விமான நிறுவனங்களுக்கு விமானங்களை குத்தகைக்குவிடும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தார். இதற்கு முன்னர், அவர் லுவ்தான்சா டெக்னிக்கில் இணைந்து அயர்லாந்து மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் லுவ்தான்சா வசதிகளுடன் பல சிரேஷ்ட பதவிகளை வகித்தவர். இவர் ஐக்கிய அமெரிக்காவில் நோத் கரோலினா ஸ்டேட் பல்கலைக்கழகத்திலிருந்து எந்திரவியல் பொறியியலில் விஞ்ஞானமானிப் பட்டத்தினையும் ஐக்கிய அமெரிக்காவின் வேர்ஜினியா பொலிடெக்னில் இன்ஸ்ரிரியூட் அன்ட் ஸ்டேட் பல்கலைக்கழகத்திலிருந்து விஞ்ஞானத்தில் முதுமானிப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்டார்.



6

**சானக ஒலாகம**

விமான அறைப் பணிகளின் தலைவர்

1984இல் கம்பனியில் இணைந்து கொண்ட இவர் 2016இல் விமான அறைப் பணிகளின் தலைவராக நியமிக்கப்பட்டார். கம்பனியில் முன்னர் அவர் வகித்த பதவிகள் பணி விநியோகத் தலைமைப் பொறுப்பு, தரைக் கையாளல் பொறுப்பு, விமானச் சரக்குத் தொழிற்பாடுகள், உற்பத்தி அபிவிருத்தி, வாடிக்கையாளர் அலுவல்கள் மற்றும் பாதுகாப்பு என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

இலங்கை மற்றும் மாலைதீவு, ஐக்கிய இராச்சியம், அயர்லாந்து, ஸ்கான்டிநேவியா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடா, சீன, குவைத், ஜோர்டன் மற்றும் லெபனான், கட்டார் மற்றும் பாறெயின் ஆகிய நாடுகளுக்கான முகாமையாளராக இருந்திருக்கின்றார்.

இவர் பறப்புத் தொழிற்பாடுகள் மற்றும் தரைக் கையாளல் போன்றவற்றின் அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

இவர் இங்கிலாந்து, ஹாடிவ் மெற்றோபொலிட்டன் பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிருவாகத்தில் முதுமானிப் பட்டத்தினைப் பெற்றிருக்கின்றார்.



7

### றயின்ட் ரணதுங்க

பறப்புத் தொழிற்பாடுகளின் தலைவர்

பறப்புத் தொழிற்பாடுகளின் தலைவரான கப்டன் றயின்ட் அஸ்வின் ரணதுங்க 1987இல் கடேட் விமானியாக கம்பனியில் இணைந்து கொண்டார். எயார்பஸ் விமானத்தினைத் தொழிற்படுத்துவதற்கு முன்னதாக இவர் எல்1011 இல் இரண்டாந்தர அலுவலராகவும் முதலாந்தர அலுவலராகவும் படிப்படியாக முன்னேறினார். உயர் முகாமைத்துவ பதவியைக் கொண்டுள்ள கப்டன் ரணதுங்க அவரின் தற்போதைய A330இன் குறித்துரைக்கப்பட்ட கட்டுப்பாட்டு விமானியாகவும் இருக்கின்றார்.



8

### சாமர ரணசிங்க

தலைமைச் சரக்கு அலுவலர்

இவர் 2013இல் கம்பனியில் தலைமைச் சரக்கு அலுவலராக இணைந்து கொண்டார்.

இவர் வாடிக்கையாளர் பணிகள், சரக்குப் பதிவுகள், சரக்குகளின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் விமானநிலையத் தொழிற்பாடுகள் ஆகிய துறைகளில் விமான நிறுவனச் சரக்கு மற்றும் விமானப் போக்குவரத்து தொழில் துறையில் 16 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தினைக் கொண்டவர்.

கம்பனியில் இணைவதற்கு முன்னர் இவர் இலங்கையில் தொழிற்படுகின்ற சர்வதேச புகழ்வாய்ந்த விமான நிறுவனங்களில் பல சிரேஷ்ட முகாமைத்துவப் பணிகளை ஆற்றியுள்ளார்.


9

### பிரதீப் கெகுலாவல
மனிதவளங்களின் தலைவர்

பிரதீப் கெகுலாவல கம்பனித் துறையில் தசாப்தங்களுக்கு மேற்பட்ட முகாமைத்துவ அனுபவத்தினைக் கொண்ட சிரேஷ்ட மனிதவள அபிவிருத்தியில் சிறந்ததொரு தொழில்சார் நிபுணராவர். 15 ஆண்டுகளுக்கு முன்னர் மனிதவள அபிவிருத்திக் கலையில் அவர் தனது ஈடுபாடுகளைக் காட்டுவதற்கு முன்னர் செயற்றிட்ட முகாமைத்துவம், பொது முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் மற்றும் வியாபார அபிவிருத்தி ஆகிய துறைகளில் முக்கிய முகாமைத்துவப் பதவிகளை வகித்தவர். பிரதீப் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் மனிதவளத்தின் தலைவராக சிறிலங்கள் எயார்லையின்ஸ்ஸில் இணைவதற்கு முன்னதாக, கல்வி, அலுவலக தன்னியக்கப்படுத்தல், பொறியியல் மற்றும் ஆடைத் துறைகளிலுள்ள பல்வேறு முன்னணிக் கம்பனிகளில் மனிதவளத் துறையின் தலைவர் பதவிளை வகித்திருக்கின்றார்.

அவரது பிரதான தொழில்சார் நிபுணத்துவ நடவடிக்கைகளுக்குப் புறம்பாக, ஒரு தசாப்தத்திற்கு மேலாக கம்பனித் துறைக்கான ஆலோசனையாளராகவும் தேர்ச்சி அபிவிருத்தி ஏற்பாட்டாளராகவும் இருந்திருக்கின்றார்.

கொமன்வேல்த் ஒவ் லேர்னிங்கிலிருந்தான எம்பிஏ பட்டம், இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திலிருந்தான அறிவுசார் முகாமைத்துவத்தினைச் சிறப்புத் துறையாகக் கொண்டு தகவல் முகாமைத்துவத்தில் எம்எஸ்சி பட்டம் என்பன உட்பட முகாமைத்துவம், மனிதவளங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் பட்டப்பிற்படிப்புத் தகைமைகளைக் கொண்டிருக்கின்றார். இவர் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்திலிருந்தும் சிங்கப்பூரிலுள்ள முகாமைத்துவப் பட்டப்பிற்படிப்பு நிறுவகத்திலிருந்தும் மனிதவள முகாமைத்துவத்தில் நிறைவேற்று பயிற்றுவிப்பிற்கான பட்டத்தினையும் பெற்றுக் கொண்டிருக்கின்றார்.

பிரதீப் ஜெனிவாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கத்தின் மனித மூலதனக் குழுவினது வழிகாட்டல் குழுவின் நிறுவக உறுப்பினராகவும் பணியாற்றி வருகின்றார். இவர் தற்பொழுது இலங்கை, கொழும்பு பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவத்தில் முனைவர் பட்டத்திற்கான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றார்.


10

### யசந்த திசநாயக்கா
நிதித் துறைத் தலைவர்

2004இல் கம்பனியில் இணைந்த கொண்ட யசந்தா திசநாயக்கா நிதித் துறை தலைவராகவும் (2009)/நிதித் துறை முகாமைத்துவத் தலைவராகவும் (2015) வும் நியமிக்கப்பட்டார். கம்பனியின் நிதி மற்றும் வர்த்தகக் கொள்வனவுகள் இவருக்கு அறிக்கையிடப்படும்.

இவர் முதலாவது சர்வதேச முறி வழங்கல் மற்றும் இஸ்லாமிய நிதியியல் என்பன உட்பட கம்பனிக்கான பல முன்னோடி நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் முன்னணியிலிருந்து தொழிற்பட்டவர். இது அவருக்கு இரண்டு ஆசிய விருதுகளுக்கு அங்கீராமாக அமைந்தது. இவர் புதிய A330-300 விமானத் தொகுதிக்கான விநியோகத்திற்கு முன்னரான நிதியிடல் வடிவமைப்பின் சூத்திரதாரியாக விளங்கினார். 2012இல் எயார் பினான்ஸ் ஜேர்னனினால் இக்கொடுக்கல்வாங்கல் "இவ்வாண்டிற்கான விநியோகிப்பிற்கு முன்னரான நிதியிடல்" என அங்கீகரிக்கப்பட்டது.

கம்பனியில் இணைவதற்கு முன்னர் திரு. திசநாயக்கா முதலீட்டு வங்கித்தொழில் மற்றும் தொலைத் தொடர்பூட்டல் துறைகளில் சிரேஷ்ட பதவிகளை வகித்தவராவர். தொழில்முறைக் கணக்காளரான இவர் (முகாமைத்துவக் கணக்காளர் பட்டய நிறுவகம், ஐக்கிய இராச்சியத்தின் உறுப்பினராவர்) வேல்ஸின் காடிவ் பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிருவாகத்தில் முதுமானிப் பட்டத்தினைப் பெற்றவராவர்.



11

### தல்றின் திருக்குமார்

கம்பனிச் செயலாளர்/கம்பனிச் செயலகத் தலைவர்

2013இல் கம்பனியில் கம்பனிச் செயலாளராக இணைந்து கொண்ட தல்றின் திருக்குமார் மிக அண்மையில் கம்பனி செயலகப் பணிகளின் தலைவராகப் பதவி உயர்த்தப்பட்டார். கம்பனி செயலகப் பணிகள் பிரிவு சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட் சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட் மற்றும் மிகின் லங்கா (பிறைவேட்) லிமிடெட் என்பனவற்றிலிருந்து செயலகப் பணிகளை வழங்குவதற்குப் புறம்பாக, இம்மூன்று கம்பனிகளுக்குமான மூத்த முகாமைத்துவத்திற்கான கொடுப்பனவுப் பட்டியலுக்கான வசதிப்படுத்தல்களையும் வழங்குகிறார். இவர் சிறிலங்கன் கெயர் றஸ்ற்றிற்கான நம்பிக்கைப் பொறுப்பாளராகவம் இருக்கின்றார்.

பகிரங்க கம்பனிகளில் கம்பனி செயலக நடைமுறைகள் துறையில் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தினைக் கொண்ட இவர் பன்முகப்படுத்தப்பட்ட இலங்கையின் இரண்டு பாரிய குழுமங்களில் சிரேஷ்ட பதவிகளை வகித்திருந்தார்.

திருமதி. திருக்குமார் இலண்டன் செயலகங்கள் மற்றும் நிருவாகத்திற்கான பட்டய நிறுவகத்தில் இணை உறுப்பினராக உள்ளதுடன் இவர் அடிலெட்டிலுள்ள அவுஸ்திரேலியா இன்ஸ்ரிரியூட் ஒவ் பிசினஸ்சிலிருந்து வியாபார நிருவகத்தில் முதுமானிப் பட்டத்தினையும் பெற்றிருக்கின்றார்.



12

### பிறிமால் த சில்வா

பொது முகாமையாளர் - சிறிலங்கன் விமானப் போக்குவரத்துக் கல்லூரி

1988இல் விமானியாக கம்பனியில் இணைந்து கொண்ட இவர் தற்பொழுது சிறிலங்கன் விமானப் போக்குவரத்துக் கல்லூரியின் பொது முகாமையாளர் பதவியை வகிக்கின்றார். இந்நியமனத்திற்கு முன்னர், அவர், விமான அறைகளில் பாதுகாப்பு முகாமையாளர், விமான உள்ளகத் தொழிற்பாடுகள் மற்றும் பயிற்சிக்குப் பொறுப்பான முகாமையாளர் உட்பட கம்பனியில் பல்வேறு பதவிகளையும் வகித்திருக்கின்றார்.

# இலங்கையின் தேசிய போக்குவரத்து நிறுவனத்திற்கான நீடித்துநிலைத்திருக்கக்கூடிய ஆற்றலைக் கொண்ட புதிய யுகமொன்றினை நோக்கி.

சிறிலங்கன் எயார்லையின்ஸ் அதன் பிராந்திய நிலைமையினை வலுப்படுத்துவதிலும் கம்பனியின் அடிமட்டத்தின் மீது குவிந்த பார்வையினைச் செலுத்துவதிலும் கவனம் செலுத்தும். எயார்லையினை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு, இலங்கை அரசாங்கம் சிறிலங்கனுடன் அரச தனியார் பங்குடமையில் நுழைவதற்கு விரும்பும் தரப்பினரிடமிருந்து ஆர்வத்தினை வெளிப்படுத்தும் அழைப்பினை கோரியிருப்பதுடன் இது தொடர்பாக நடைமுறைகளை இந்நிதியியல் ஆண்டு முடிவடைவதற்கு முன்நிறைவு செய்யலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இது எயார்லையினின் இன்னொரு யுகத்தின் ஆரம்பத்திற்கான சமிக்ஞைகளைக் கொண்டிருப்பதுடன் இது இதன் வேகம்மிக்க குறிக்கோள் மற்றும் சிறிலங்கனுக்கான உண்மையான நீடித்துநிலைத்திருக்கும் ஆற்றல் வாய்ந்த தன்மையினையம் கொண்டிருக்கும்.

## நாம் தொழிற்படுகின்ற சூழல்

### உலகளாவிய தோற்றப்பாட்டின் தேவை

2015ஆம் ஆண்டுப் பகுதியில் உலகின் விமானப் போக்குவரத்துத் தொழில் துறை உலகளாவிய பொருளாதாரம், மக்களையும் இடங்களையும் இணைத்தல், மற்றும் பொருளாதார அபிவிருத்தியைத் தூண்டுவதற்கு உதவியளித்தல் என்பனவற்றிற்குப் பங்களித்தது. சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கத்தின்படி (IATA) இத்தொழிலானது 2015ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 35.3 பில்லியன் கொண்ட இலாபத்தினை (4.9 சதவீதம் கொண்ட இலாப அளவினை) அறிவித்தது. மூலதனத்தின் மீதான தொழில் துறையின் வருமானம் இதன் மூலதனச் செலவினை விஞ்சிக் காணப்பட்ட வேளையில் இதன் தேறிய இலாப அளவு மற்றைய அனைத்துக் கைத்தொழில்களுக்கிடையே பார்க்கையில் மிகக் குறைந்த அளவினதாகவே காணப்பட்டது. சராசரியாக விமான நிறுவனம் கொண்டு செல்லப்படும் பயணி ஒருவருக்கு ஐ.அ.டொலர் 10 இற்குக் குறைவான இலாபத்தினையே இன்னமும் பெறுகிறது. உண்மையில் சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கத்தின் பணிப்பாளர் நாயகமும் முதன்மை நிறைவேற்று அலுவலருமான ரொனி ரெய்லர் தொழில்துறையின் இலாபத்தன்மை நிலைத்திருக்கக்கூடியது என்பதிலும் பார்க்க உடைந்துவிடக் கூடியது என்பதனை விளக்குகிறார்.

2015இல் உலகளாவிய மொ.உ.உற்பத்தி 2.5 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் முக்கியமான பொருளாதாரங்களில் காணப்பட்ட வலுவான செயலாற்றம் (யூரோ வலயத்தில் மீட்சி எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க விரைவாக காணப்பட்டமை உட்பட) சீனாவிலும் பிரேசிலிலும் காணப்பட்ட மெதுவான வளர்ச்சியின் ஒட்டுமொத்த தாக்கத்தினையும் விஞ்சிக் காணப்பட்டது. குறைந்த விமானக் கட்டணங்கள் பெருமளவு விமானப் பயணங்களை தூ ண்டியமையானது மத்திய கிழக்கு மற்றும் ஆசிய பசுபிக்கில் அவதானிக்கப்பட்ட பயணிகள் கேள்வியில் காணப்பட்ட அதிகரிப்புடன் சேர்ந்து வட அமெரிக்காவின் இணைத்தரப்பினரின் விமானப் பயணங்களை விஞ்சிக் காணப்பட்டது. இவ்வாறான நிலைகள் காணப்பட்ட போதும் தொழில்துறையின் வருமானம் உண்மையில் 2014இன் ஐ.அ.டொலர் 758 பில்லியனிலிருந்து 2015இல் ஐ.அ.டொலர் 710 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

இவ்வீழ்ச்சிக்கான முக்கிய காரணம் அநேக விமான நிறுவனங்கள் மேலதிகமாக சந்தைப் பங்குகளைக் கைப்பற்றிக் கொள்ளும் நம்பிக்கையுடன் அவற்றின் இயலளவினை தீவிரமான முறையில் அதிகரித்துக் கொண்டமையேயாகும். இது உண்மையான சந்தைக் கேள்வியை விஞ்சிக் காணப்பட்டது. இது மிகவும் சவால்மிக்க வர்த்தகச் சூழலைத் தோற்றவித்ததுடன் அவற்றின் வருமானங்களையும் விரைந்து மோசமடையச் செய்தது. ஐ.அ.டொலர் உயர்வடைந்தமைக்கெதிராக பல சந்தைகள் அவற்றின் விலைகளை வலுவான முறையில் மிதப்படுத்திக் கொண்டமையின் விளைவாக தாழ்ந்த எண்ணெய் விலைகள் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைந்த தாக்கத்தினையே கொண்டிருந்தன.

தொடர்ந்தும் குறைந்த இலாப அளவுடன் தொழிற்பட்ட வேளையில், விமானத் தொழில்துறை பேரண்டப் பொருளாதாரம் அதேபோன்று நுண்பாக பொருளாதார மட்டங்கள் இரண்டினதும் உலகளாவிய பொருளாதாரத்தின் மீது சாதகமான தாக்கமொன்றினைத் தொடர்ந்தும் ஏற்படுத்தியது. உலகளாவிய பொருளாதாரத்தின் முக்கியமான இயலுமைப்படுத்துநர் என்ற ரீதியில் தொழில்துறையானது உறுதியான தொழிற்பாட்டினை வழங்குவதுடன் நிதியியல் செயலாற்றத்தினையும் மேம்படுத்துகின்றது. தொழில்நிலை மட்டங்களை உயர்த்துகின்றது. சிறந்த உற்பத்திகளையும் பணிகளையும் புலனாய்வு செய்வதுடன் பயணிகளுக்கு பெறுமதிமிக்க பணிகளையும் வழங்குகின்றது. தொழில்துறையானது முன்னெப்பொழுதுமில்லாத விதத்தில் கூடியளவு மக்களையும் வியாபாரங்களையும் இணைக்கின்ற வேளையில், அதன் சூழல் ரீதியான செயலாற்றத்தினை மேம்படுத்தி நீடித்த நிலையான எதிர்காலத்திற்கும் பங்களிக்கின்றது.

### சவால்மிக்க உள்நாட்டுத் தோற்றப்பாடு

தனியானதொரு வியாபார நிறுவனம் என்ற அந்தஸ்தினை அடைந்திருப்பதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் இலாபமளிக்கத்தக்க விதத்தில் இலங்கையின் பொருளாதாரத்திற்குப் பங்களிக்க வேண்டுமென்பது இலங்கை அரசாங்கத்தின் முக்கிய குறிக்கோள்களிலொன்றாகும்.

இத்தகைய பின்னணியில், உள்நாட்டு தொழிற்பாட்டுச் சூழலில் செல்வாக்குச் செலுத்திய அடிப்படைக் காரணிகளில் சிலவற்றின் மீளாய்வு பின்வருமாறு:

2015இல் இலங்கையின் மொ.உ.உற்பத்தி 4.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து 2014 இனை விட சிறிதளவு குறைவானதாகக் காணப்பட்டது (4.9 சதவீதம்). இது 2016இல் 5.3 சதவீதத்திற்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

2015இல் இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 18 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் நாட்டிற்கு பயணங்களை தொழிற்படுத்துகின்ற மற்றைய சில விமான நிறுவனங்களினால் அதிகரிக்கப்பட்ட இயலளவு இக்கேள்வியின் வளர்ச்சியை பெருமளவிற்கு விஞ்சுவதாகக் காணப்பட்டது. கடந்த இரண்டாண்டுகளில் காணப்பட்ட 17 சதவீதம் கொண்ட உள்நாட்டுக் கேள்விகள் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இதே காலப்பகுதியில் (2013/14 எதிர் 2015/16) மத்திய கிழக்கு விமான நிறுவனங்களின் இயலளவு வளர்ச்சி 55 சதவீதமாகக் காணப்பட்டது. இது தீவிரமான போட்டிச் சூழலொன்றினைத் தோற்றுவித்ததுடன் விமான நிறுவனங்கள் சந்தைப் பங்குகளை முண்டியடித்துப் பெற்றுக்கொள்ள முயன்றமையினால் சில பிராந்தியங்களில் கட்டணம் கடுமையாக வீழ்ச்சியடையவும் வழிவகுத்தது. இச்சூழ்நிலையானது குறிப்பாக இலங்கை விடயத்தில் பூதாரமாகியதுடன் இலங்கை ஐரோப்பாவிற்கான அதன் நீண்ட நேர வழித்தடம்கள் சிலவற்றின் ஆற்றல் தொடர்பில் இத்தகைய அனுபவங்களை கொண்டிருந்தது.

இதன் விளைவாக, எயார்லையின்ஸ் பாதை வலையமைப்பு மீளபகுப்பாய்வு செய்யப்பட்டு வியாபார நிறுவனமொன்றாக நீடித்து நிலைத்திருக்கக்கூடிய ஆற்றல்வாய்ந்த தன்மையினை எய்தும் விதத்திலும் பிரச்சனைகளற்ற விமானப் பயணத்தினை நோக்கிய உபாயம்மிக்க விதத்தில் இதனை எடுத்துச்செல்லும் விதத்திலும் மிகச் சிறந்த உச்சநிலை நிர்ணயிக்கப்பட்டது.

இப்பிராந்தியத்தின் மையமொன்றாக, இலங்கை அதன் வலுவான புவியியல் சார்ந்த சந்தை நிலைமையின் அநுகூலமான தன்மையினைச் சிறந்த முறையில் தொடர்ந்தும் பயன்படுத்திக் கொள்வதனை எயார்லையின் உறுதிப்படுத்தும் விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் நாட்டிற்கான சுற்றுலாப் பயணிகளின் உட்பாய்ச்சல் எல்லா நேரங்களிலும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதாகக் காணப்பட்டது.

## நிதியியல் மீளாய்வு

எரிபொருள் விலைகளில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சியின் முக்கிய காரணமாக இவ்வாண்டுப் பகுதியில் ஒட்டுமொத்த விலைக்குறைப்புக் காணப்பட்ட போதும் குழுமமானது இலங்கை ரூ. 12,083.62 மில்லியன் (2015 - இலங்கை ரூ. 16,329.90 மில்லியன்) கொண்ட இழப்பினைப் பதிவுசெய்தது. எனினும், இந்நன்மைகளின் ஒரு பகுதி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் விமானப் போக்குவரத்து வருமானம் 3.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையின் மூலம் குறைந்து போயிற்று. கொழும்புச் சந்தைக்கான மற்றைய விமான நிறுவனங்களின் அதிகரிப்பு குறிப்பிட்ட சந்தைகளில் விமானக் கட்டணங்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியுடன் இணைந்து வருமானங்களின் வீழ்ச்சிக்குப் பங்களித்தன. மேலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலங்கை ரூபா தேய்வடைந்தமையின் காரணமாக ஏற்பட்ட வெளிநாட்டுச் செலாவணி இழப்புக்களின் தாக்கமும் ஒரு A350-900 விமானத்திற்கான விமானக் குத்தகை உடன்படிக்கை

இரத்துச் செய்யப்பட்டமையின் காரணமாக ஒரே தடவையில் ஏற்பட்ட செலவும் எயார்லையின்ஸ்ஸின் செயலாற்றத்தினைப் பாதித்தன.

### வருமானம்

**குழும வருமானத்தில் சதவீத மாற்றம்**

| | 2015/16 | 2014/15 | மாற்றம் |
|---|---|---|---|
| | இ.ரூ. மில். | இ.ரூ. மில். | % |
| பயணிகள் | 104,925.82 | 108,319.52 | -3.1 |
| சரக்கு | 12,458.48 | 13,766.15 | -9.5 |
| விமான முனைக்கோடி மற்றும் ஏனைய பணிகள் | 11,481.75 | 9,296.66 | 23.5 |
| தீர்வையற்றறைவை | 572.61 | 508.88 | 12.5 |
| உணவு வழங்கல | 2,759.65 | 2,425.01 | 13.8 |
| | 132,198.31 | 134,316.22 | -1.6 |

2016இல் குழுமத்தின் வருமானம் இலங்கை ரூ. 132,198.31 மில்லியனாகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 1.6% சதவீதம் கொண்டதொரு வீழ்ச்சியாகவும் காணப்பட்டது. வீழ்ச்சிக்கு குறைந்த சந்தை விளைவுகளும் ஏனைய காரணிகளுமே காரணமாகும்.

**குழும வருமானத்தின் உள்ளமைப்பு**

இ. ரூ. மில்லியன்




பயணிகள் மற்றும் சரக்கு என்பனவற்றை உள்ளடக்கிய எயார்லையின்ஸின் தொழிற்பாடுகள் இலங்கை ரூ. 117,384.3 மில்லியனாகக் காணப்பட்டதுடன் இது குழும வருமானத்தில் 88.8 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.8 சதவீதம் குறைவானதாகும்.

விமான முனைக்கோடி மற்றும் ஏனைய பணிகளிலிருந்தான வருமானத்தில் இலங்கை ரூ. 2,185.09 மில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 23.5 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும்.

சிறிலங்கன் விமான நிலையம் மற்றும் தரைப் பணிகள், சிறிலங்கன் என்ஜினியரிங் மற்றும் விமானப் போக்குவரத்துக் கல்லூரி என்பனவற்றை உள்ளடக்கிய உபாய வியாபார அலகுகள் அவற்றின் மேம்பட்ட செயலாற்றத்தின் காரணமாக இக்குழுமத்தின் வருமானத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்குப் பங்களித்தன. அதிகரித்த இலாபம் மற்றும் இலாபத்தன்மை என்பனவற்றின் காரணமாக சிறிலங்கன் கேட்டறிங் சேர்விஸ் லிமிடெட்டிற்கு இது முன்னெப்பொழுதுமில்லாத மிகச் சிறந்த ஆண்டாக இருந்தது.

இனிவரும் பக்கங்களில் இது கூடியளவிற்கு விபரமாகத் தரப்படுகின்றன.

**ஆரம்ப விற்பனை பிரதேசங்களின்படி குழும வருமானத்தின் உள்ளமைப்பு – 2015/16**

%




**ஆரம்ப விற்பனை பிரதேசங்களின்படி குழும வருமானத்தின் உள்ளமைப்பு – 2014/15**

%




புவியியல் பிரிவுகளின் நியதிகளில் 2016இல் உயர்ந்த வருமானப் பங்களிப்புப் பிரிவாக ஆசியா காணப்பட்டதுடன் மொத்தக் குழும வருமானத்தில் இலங்கை முறையே ஏறத்தாழ 32 சதவீதத்திற்கும் 28.1 சதவீதத்திற்கும் வகைகூறின.

### செலவினம்

| | 2015/16 | | 2014/15 | |
|---|---|---|---|---|
| | இல. ரூ. மில். | % | இல. ரூ. மில். | % |
| விமான எரிபொருள் செலவு | 33,198.90 | 23.0 | 53,451.02 | 35.4 |
| ஊழியர் செலவு | 11,790.83 | 8.1 | 10,186.63 | 6.8 |
| விமானநிலையம், பாதைகள் மற்றும் பயணிகள் செலவுகள் | 20,170.97 | 13.9 | 20,296.55 | 13.4 |
| விமானங்களின் வாடகை மற்றும் குத்தகை | 20,129.91 | 13.9 | 16,315.67 | 10.8 |
| விமானப் பேணல் மற்றும் பழுதுபார்த்தல் | 14,515.22 | 10.0 | 11,932.41 | 7.9 |
| தேய்வு/பதிவழிப்பு | 2,989.44 | 2.1 | 2,555.60 | 1.7 |
| விற்றல், சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரச் செலவுகள் | 11,314.97 | 7.8 | 11,828.85 | 7.8 |
| விமானிகளின் செலவு | 11,538.80 | 8.0 | 10,643.54 | 7.0 |
| செலாவணி இழப்பு | 2,325.68 | 1.6 | 409.98 | 0.3 |
| ஏனைய செலவுகள் | 8,137.28 | 5.6 | 8,273.24 | 5.5 |
| நிதிக் கட்டணங்கள் | 6,051.93 | 4.2 | 5,094.68 | 3.4 |
| விமானக் குத்தகை உடன்படிக்கையின் இரத்துச் செய்தமைக்கான இழப்பீடு | 2,561.55 | 1.8 | – | 0 |
| மொத்த குழுமச் செலவுகள் | 144,725.48 | 100 | 150,988.17 | 100 |

விமான எரிபொருள் செலவு இலங்கை ரூ. 20,252 மில்லியனால் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக நிதிச் செலவினங்கள் உள்ளிட்ட மொத்தச் செலவுகள் 6.7 சதவீதத்தினால் குறைவடைந்து, இலங்கை ரூ. 9,781 மில்லியனாகக் காணப்பட்டன. 2015 உடன் ஒப்பிடுகையில் இது 37.9 சதவீதம் கொண்டதொரு வீழ்ச்சியாகும். ஐ.அ.டொலர் சதம்/ஐ.அ.டொலர் கலன் நியதிகளில் உலகின் எரிபொருள் விலைகள் 2015இன் 275.05 உடன் ஒப்பிடுகையில் 2016இல் 171.95 இற்கு குறைவடைந்தமையின் காரணமாகவும் புதிய விமானத் தொகுதியான A330-300 விமானத்தின் எரிபொருள் சிக்கனத்தின் காரணமாகவும் விமான எரிபொருள் செலவு குறைவடைந்தது. இது வருமானத்திற்கான விமான எரிபொருள் செலவு விகிதத்தினை 2015இன் 50.1 சதவீதத்திலிருந்து 2016இல் 31.9 சதவீதத்திற்கு மேம்படுத்தியது.

### பயணிகள் விமானத் தொகுதியின் எரிபொருள் உற்பத்தித்திறன்




### எரிபொருள் விலை எதிர் நுகர்வு




பழைய தொகுதியான A340-300 விமானத்திற்குப் பதிலாக புதிய விமானத் தொகுதி அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக 2016இல் விமானக் குத்தகைச் செலவு (அனைத்துத் தொகுதியும் தொழிற்பாட்டுக் குத்தகை நிலையிலேயே உள்ளன) இலங்கை ரூ. 20,129.91 மில்லியனுக்கு 23.4 சதவீதத்தினால் அதிகரித்தன.

விமானங்களின் பேணல் மற்றும் பழுதுபார்த்தல் செலவுகள் 2015 உடன் ஒப்பிடுகையில் 2016இல் இலங்கை ரூ. 2,582.81 மில்லியன் கொண்ட அதிகரிப்பினை காட்டியமைக்கு 2015இல் மூன்று A340-300 விமானங்களுக்கான திருப்பி வழங்கும் நிபந்தனைகள் தொடர்பான மீள்பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து ஏற்பட்ட எழுத்து மூல உத்தரவாத ஏற்பாடுகளே காரணமாகும்.

ஐ.அ.டொலருக்கெதிராக, ரூபா தேய்வடைந்தமையின் காரணமாக 2016இல் செலாவணி இழப்பு இலங்கை ரூ. 2,325.68 மில்லியனாகக் காணப்பட்டது (2015இல் செலாவணி இழப்பு இலங்கை ரூ. 409.98 மில்லியன் காணப்பட்டது).

இதன்படி, 2016இல் குழுமத்தின் தொழிற்பாட்டு இழப்பு இலங்கை ரூ. 7,663.58 மில்லியனால் இலங்கை ரூ. 3,913.69 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில 66 சதவீதம் கொண்டதொரு குறைப்பாகும் (2015இல் இலங்கை ரூ. 11,577.27 மில்லியனாகும்).

நிதிச் செலவுகள் இலங்கை ரூ. 6,051.93 மில்லியனுக்கு 18.8 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு தொழிற்படு மூலதனத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட புதிய கடன் வசதிகளே முக்கிய காரணமாகும்.

வரிக்கு முன்னரான இழப்பு 2014/15இன் இலங்கை ரூ. 16,254.53 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015/16இல் இலங்கை ரூ. 12,086.55 மில்லியனுக்கு 25.6 சதவீதத்தினால் குறைவடைந்தது. A350-900 விமானமொன்று இரத்துச் செய்யப்பட்டமைக்குச் செலுத்தப்பட்ட ஒரே தடவையில் இடம்பெற்ற நட்ட ஈடான இலங்கை ரூ. 2,561.55 மில்லியனும் உயர்ந்த செலாவணி இழப்பான இலங்கை ரூ. 2,325.68 மில்லியனும் இல்லாமல் இருந்திருக்குமாயின் வரிக்கு முன்னரான இழப்பில் 55.7 சதவீதமான குறைப்பினைக் குழுமம் காணக்கூடியதாக இருந்திருக்கும்.

### நிதியியல் நிலைமை

2016 மாச்சு 31இல் குழுமத்தின் மொத்தச் சொத்துக்கள் இலங்கை ரூ. 54,078.99 மில்லியனாகக் காணப்பட்டன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 29 சதவீதம் கொண்டதொரு வீழ்ச்சியாகும். இதற்கு A330-300 விமானத்தின் விநியோகத்திற்கு முன்னரான கொடுப்பனவுப் பெறுகைகளே முக்கிய காரணமாகும். மேலும் பங்குடமையாளர்களின் நிதியங்கள், நடைமுறையாண்டின் இழப்புக் காரணமாக இலங்கை ரூ. 80,447.11 மில்லியனுக்கு 19.5 சதவீதத்தினால் குறைவடைந்தன.

### குழும பங்குரிமை மூலதன உடமையாளர் நிதியம் மற்றும் மொத்தச் சொத்துக்கள்

இல. ரூ. பில்லியன்




### தொழிற்பாட்டுச் செயலாற்றம்

தடம்கள்/பிராந்தியங்களின்படி கம்பனியின் தொழிற்பாட்டுச் செயலாற்றத்தின் மீளாய்வு.

| | பயணிகள் எண்ணிக்கை | | | வ.ப.கி. மீற்றர் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2015/16 '000 | 2014/15 '000 | மாற்றம் % | 2015/16 Mn. | 2014/15 Mn. | மாற்றம் % |
| பிராந்தியம் | 1,857 | 1,821 | 2.6 | 1,578 | 1,572 | 0.5 |
| மத்திய கிழக்கு | 939 | 994 | -5.6 | 3,602 | 3,783 | -4.8 |
| தென்கிழக்கு ஆசியா மற்றும் தூர கிழக்கு | 1,065 | 1,024 | 4.0 | 3,633 | 3,435 | 5.8 |
| ஐரோப்பா | 467 | 508 | -8.0 | 3,914 | 4,174 | -6.2 |
| மொத்தம் | 4,328 | 4,348 | -0.4 | 12,728 | 12,964 | -1.8 |

இயலளவு மற்றும் கொண்டு செல்லப்பட்ட பயணிகள் ஆகிய நியதிகளில் போக்குவரத்து 2016இல் சிறிதளவால் வீழ்ச்சியடைந்த வேளையில் பயணிகள் சுமைக் காரணி சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.

### கிடைக்கத்தக்க இருக்கை இயலளவு, பயணிகள் போக்குவரத்து மற்றும் சுமைக் காரணி




## தொழிற்பாடுகளின் மீளாய்வு

இப்பிரிவில் நாங்கள் எயார்லையினின் முக்கியமான வியாபாரத் துறைகள் முழுவதினதும் செயலாற்றத்தின் மீளாய்வொன்றினைத் தருகின்றோம்.

### ஷசிறிலங்கன் வர்த்தக நாமம்

ஆய்விற்குரிய காலப்பகுதியில் அதன் வாடிக்கையாளர் வசதிகளின் மீது தொடர்ந்தும் முதலீடுகளை மேற்கொண்டதன் உலகளாவிய ரீதியில் ஏற்கனவே வலுவடைந்திருந்த வர்த்தக நாமம் மேலும் உயர்வடைந்தது. சிறிலங்கனின் வர்த்தக நாமம், அதன் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் பயணம் முழுவதிலும் அவர்களுக்கான உணர்வு பூர்வமான மிகச் சிறந்த தர உற்பத்திகள் மற்றும் பணிகளினை வழங்குவதற்கான அதன் கடப்பாடுகளினை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் எயார்லையின் A330-300 புதிய விமானத்தினை அதன் தொகுதியில் சேர்க்கும் நடவடிக்கை பூர்த்தியடைந்தமையினால் அதன் விமானத்திற்குள்ளேயான பறப்பு வசதிகள் உயர்வடைந்தன.

அனுசரணை நிகழ்வுகளில் உபாயம் மிக்க முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டமையானது வர்த்தக நாமத்திற்கு மிகச் சிறந்த வெளிப்படுத்துகைகள் கிடைக்கக் காரணமாயிற்று.

எயார்லையின் அதன் வர்த்தக நாமப் பிரசன்னங்களை சமூக ஊடக அலைவரிசைகளில் தொடர்ச்சியாக விளம்பரப்படுத்தி அதனைக் கட்டியெழுப்பி வந்ததுடன் அதிகளவிற்கு சுறுசுறுப்பான நடவடிக்கைகளைக் கொண்டிருந்ததுடன் சமூக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தது.

இம்முயற்சிகளின் உச்சநிலையினை எயார்லையின்ஸின் வர்த்தக நாமப் பெறுமதி மேலும் உச்சநிலையினை அடைந்தமையில் காணமுடிந்ததுடன் இலங்கையின் முதல் 10 வர்த்தக நாமங்களில் ஒன்றாகவும் பரந்தளவில் நாட்டின் முன்னணி விமான நிறுவனமாகவும் மாற்றமடைந்தது.

### செயலாற்றமும் பங்களிப்பும்

எமது அறிக்கையின் இப்பிரிவானது எயார்லையினின் செயலாற்றத்தின் முக்கிய அம்சங்களின் திணைக்கள ரீதியான பொதுநோக்கத்தினையும் முன்னேற்றத்திற்கான பங்களிப்பினையும் தருகிறது.

### வர்த்தகம்

**வழித்தடம்களின் வலையமைப்பு மற்றும் விமானத் தொகுதிகளின் திட்டங்கள்**

சிறிலங்கன் தற்பொழுது 17 நாடுகளிலுள்ள 30 சேரிடங்களுக்கு பறப்புக்களை மேற்கொள்வதன் மூலம் ஐரோப்பா, மத்திய கிழக்கு, தூரகிழக்கு மற்றும் இந்திய உபகண்டம் ஆகிய இடங்களிலுள்ள முக்கிய தலைநகரங்களுக்கான அதன் பணிகளை வழங்குகின்றது.

குறியீட்டுப் பகிர்வுத் தொழிற்பாடுகளினூடாக, எயார்லையின் வட அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய ஆசியா, ஆபிரிக்கா, கனடா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் உட்பட 31 நாடுகளிலுள்ள 71 மேலதிக சேரிடங்களுக்கு மக்கள் பயணிப்பதற்கான வசதிகளை வழங்குகின்றது.

இவ்வாண்டுப் பகுதியில், எயார்லையின் அமெரிக்கன் எயார்லையின், எயார்பேர்லின், நிகி (அவுஸ்திரேலியா) மற்றும் கட்டார் எயார்வேய்ஸ் என்பனவற்றுடன் குறியீட்டுப் பகிர்வு பங்குடமையினை ஸ்தாபித்துக் கொண்டமையின் மூலம் அதன் வலையமைப்பினை விரிவாக்கிக் கொண்டது. புதிய குறியீட்டுப் பகிர்வானது பயணிகள் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்ததும் வசதிமிக்கதுமான தன்மையுடன் அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகளிலுள்ள அநேக சேரிடங்களுக்கு நிகரற்ற சேவைகளுடன் பயணிக்கக்கூடிய வாய்ப்பினை வழங்கியது. இக்குறியீட்டுப் பகிர்வானது வண்வோர்ள்ட் உறுப்பு எயார்லையின்சுகளுடன் சிறிலங்கன் எயார்லையின்ஸ் தற்பொழுது

கொண்டுள்ள ஒத்துழைப்பினைக் கட்டியெழுப்பவும் பலப்படுத்தவும் உதவியிருக்கிறது.

வண்வோர்ள்ட் அணியின் உறுப்பினர் என்ற வகையில், சிறிலங்கன் எயார்லையின் தனியொரு பயணச்சீட்டில் உலகம் முழுவதிலுமுள்ள 1,800 இற்கும் மேற்பட்ட வண்வோர்ள் சேரிடங்களுக்கு பறப்பதற்கான வாய்ப்பினைப் பயணிகளுக்கு வழங்குகின்றது. 2014 மே 01இல் கௌரம் மிக்க உலகளாவிய விமான நிறுவனங்களின் அணியான வண்வோர்ள்டில், இந்திய துணைக் கண்டத்திலிருந்து நுழைந்து கொண்ட முதலாவது எயார்லையினாக சிறிலங்கன் விளங்கி தற்பொழுது உறுப்புரிமையினைப் பகிர்ந்து கொண்டிருப்பதன் மூலம் தற்பொழுது எயார்போர்லின், அமெரிக்கன் எயார்லையின்ஸ், பிரிட்டிஸ் எயார்வேயிஸ், கதே பசுபிக், பின் எயார், லைபீரியா, யப்பான் எயார்லையின்ஸ், லான், மலேசியன் எயார்லையின்ஸ், குவன்டாஸ், றோயல் யோர்டானியன் மற்றும் S7 ஆகிய எயார்லையின்சுகள் போன்ற மிகப் பெரிய மிக முதன்மை வாய்ந்த வர்த்தக நாமங்களைக் கொண்ட விமானப் பயண நிறுவனங்களுடன் சேர்ந்து பறப்புக்களை மேற்கொள்கிறது.

2016 மாச்சு 31இல் சிறிலங்கன் 29 வழித்தடம்களில் வாரமொன்றிற்கு 250 இற்கு மேற்பட்ட பறப்புக்களை மொத்தமாகத் தொழிற்படுத்துகிறது. இவ்வெண்ணிக்கையில் 09 தென்கிழக்கு ஆசிய வழித்தடம்களிலும் 09 பிராந்திய வழித்தடம்களிலும் 07 மத்திய கிழக்கு வழித்தடம்களிலும் 04 ஐரோப்பிய வழித்தடம்களிலும் தொழிற்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறிலங்கன் எயார்லையின்ஸ் இன்றுவரை 8 மொழிகளை உள்ளடக்கிய விதத்தில் பல்மொழி இயலாற்றலுடன் கூடிய புதிய செல்லிடத் தொலைபேசி சிநேகபூர்வ சிறிலங்கன் எயார்லையின்ஸ் வெப்தளத்தின் மூலம் உலகளாவிய ரீதியில் பயணிகளை சென்றடையத்தக்க விதத்தில் இத்தகவல்களை அதிகரித்து வருகின்றது. இதற்கு எயார்லையின்ஸின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினால் பெருமளவிற்கு வசதியளிக்கப்பட்டு வருகிறது.

#### வலையமைப்பினை உச்சப்படுத்துதல்

உள்நாட்டுச் சூழலைப் பற்றி கலந்துரையாடிய பொழுது நாம் குறிப்பிடப்பட்டவாறு சிறிலங்கன் சாத்தியமானளவிற்கு குறுங்கால கட்டமைப்பொன்றிற்குள் நீடித்து நிலைத்திருக்கும் ஆற்றல்வாய்ந்த தன்மையொன்றிற்குள் திரும்புகின்றதொரு பின்னணியில் அதன் வழித்தட வலையமைப்பினை மீண்டும் பகுப்பாய்வு செய்து ஒழுங்குமுறைப்படுத்த வேண்டியிருந்தது.

இச்செயன்முறையின் அடிப்படையில், கணிசமானதொரு காலப்பகுதி வரை எயார்லையினின் இலாபத்தன்மையில் கரிசனைக்குரியதொரு விடயமாக இருந்து வருகின்ற குறிப்பிட்ட ஐரோப்பிய வழித்தடம்கள் பற்றி சில முக்கியமான பிரச்சனைக்குரிய தீர்மானங்களை சிறிலங்கன் எயார்லையின் எடுக்க வேண்டியிருந்தது. அத்தகைய தொழிற்பாடுகளின் ஆற்றல்வாய்ந்த தன்மையானது இப்பிராந்தியத்தின் மற்றைய விமான நிறுவனங்கள் மேற்கொண்ட கேள்வியை விஞ்சிய கட்டுப்பாடற்ற இயலாற்றல் உள்ளீடுகளின் காரணமாக மேலும் மோசமாகப் பாதிக்கப்பட்டது.

இதன் காரணமாக சிறிலங்கன் எயார்லையின்ஸ் 2016 ஏப்பிறல் 30ஆம் நாளிலிருந்து ரோமிற்கான அதன் சேவைகளை நிறுத்திக் கொண்டதுடன் 2016இன் எதிர்வரும் குளிர்கால அட்டவணையிலிருந்து பரிஸ் மற்றும் பிராங்க்பேட் என்பனவற்றிற்கான சேவைகளையும் முடிவுறுத்த இருக்கின்றது.

எயார்லையினின் ஐரோப்பிய வழித்தட வலையமைப்பினைப் பொறுத்தவரை, குறைவடைந்த எரிபொருள் விலைகளைக் கவனத்தில் எடுப்பினும் கூட, இவ்வழித்தடமானது தொடர்ந்தும் 40 சதவீதத்திற்குமான எதிர்மறையான பங்களிப்பினைக் கொண்டுள்ளமையினையையே இக்கரிசனைகள் எடுத்துக்காட்டியன.

ஐரோப்பா கட்டணத்திற்காக உயர்ந்தபட்ச வருவாயினை தக்கவைப்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு (திட்டமிடப்பட்ட இடைநிறுத்தலின் பின்னர்) ஏற்கனவேயுள்ள பங்குடமையாளர்களுக்கு மேலதிகமாக, பல குறியீட்டுப் பகிர்வு பங்குடமைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடைந்த போட்டியாளரின் நடவடிக்கை அழுத்தத்தினை தோற்றுவித்ததுடன் தூரகிழக்கு மற்றும் இந்தியப் பிராந்தியங்களிலுள்ள சிறிலங்கன் ஆதிக்கம் பெற்றிருந்த சந்தைகளிலும் அதன் இருப்பிற்கு சவால்களைத் தோற்றுவித்தது.

சந்தை நிலைமைகள் மற்றும் இதன் மையச் சந்தைகளுக்கான போட்டிச்சூழல் என்பனவற்றை விபரமாக மதிப்பிட்டதன் பின்னர், சிறிலங்கன் இது வலுவான செயலாற்றத்தினைக் கொண்டிருக்கும் மத்திய கிழக்கு, சீனா மற்றும் இந்தியா போன்ற சந்தைகளின் வலையமைப்பினை வலுப்படுத்துவதற்கு விருப்பம் கொண்டிருந்த வேளையில், சிறிலங்கன், சந்தை நிலைமைகளைக் கட்டியெழுப்பக்கூடிய இடங்களில் புதிய மற்றும் உயர்ந்த உள்ளார்ந்த வாய்ப்புக்களைக் கொண்ட சிறிய ஆனால் பெறுமதிகூடிய சந்தைகளை விரிவாக்கத் தொடங்கியது.

அனைத்துத் துறைகளிலும் காணப்பட்ட சவால்களுக்கு மத்தியிலும் ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் சிறிலங்கன் எயார்லையின், சிறிலங்கன் எயார்லையினின் முக்கிய சந்தைகளில் ஐ.அ.டொலருக்கெதிராக முக்கியமான நாணயங்கள் தேய்வடைந்தமையின் காரணமாக ஏற்பட்ட இயலளவு மற்றும் தாக்கங்களுக்கெதிரான சீராக்கங்களை மேற்கொண்டதன் பின்னர் முன்னைய நிதியாண்டின் (2014/15) வருமானங்களை விஞ்சக்கூடியதாக இருந்தமையினைக் கவனிப்பது பொருத்தமானதாகும்.

தங்கு தடையற்ற தெளிவான விமானப் பயணத்தினை நோக்கி இறுதியாக வடிவமைக்கப்பட்ட எயார்லையினின் வியாபார உபாயத்தின் ஆதரவுடன் அனைத்து வலையமைப்புக்களையும் உச்சப்படுத்தும் முன்னெழுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆசிய சந்தைகளை உயர்ந்தளவிற்கு உருவாக்கிக் கொள்வதில் நாம் செலுத்திய கவனமும் கொழும்பினை முக்கியமான மையமாக வலுப்படுத்த உதவியிருக்கிறது.

சிறிலங்கனுக்கும் அதன் சகோதர நிறுவனமான மிகின் லங்காவிற்குமிடையில் ஒன்றன் மீது ஒன்று கவிந்திருந்த வலையமைப்பினைக் குறைப்பது கவனத்திற்குரிய இன்னொரு துறையாகும்.

பழைய அகன்ற உடலமைப்பினைக் கொண்ட விமானங்களுக்குப் பதிலாக எயார் பஸ் குடும்பத்திலிருந்து மிகக் கூடியளவிற்கு வலுச் சிக்கனமானதும் பேணல் செலவுகள் குறைந்ததுமான சிநேகபூர்வ மாதிரிகளைக் கொண்ட விமானங்கள் சேவையிலீடுபடுவதை உறுதிப்படுத்தும் விதத்தில் எயார்லையினின் விமானத் தொகுதியினை மீளப் புதுப்பிக்கும் திட்டம் சீரமைக்கப்பட்டிருக்கிறது.

எயார்லையினின் தற்போதைய விமானத் தொகுதி எட்டு A320 குடும்ப விமானங்களையும் ஏழு A330-300 விமானங்களையும் ஆறு A330-200 விமானங்களையும் உள்ளடக்கியுள்ளது. வரும் காலத்தில் புதிய தலைமுறை விமானங்களுக்கு இவற்றை மேலும் தரமுயர்த்துவதற்கு எயார்லையின் எதிர்பார்க்கிறது. புதிதாகச் சேர்க்கப்பட்ட விமானங்கள் உபாய ரீதியானவையாகவும் எயார்லையினின் வியாபாரத் திட்டங்களுக்குப் பொருத்தமானவையாகவும் இருப்பதுடன் சிக்கனமான தொழிற்பாடு மற்றும் விமான உள்ளகச் சாதனங்கள் ஆகியவற்றின் நியதிகளில் குறிப்பிடத்தக்களவிற்கு அநுகூலம் நிறைந்தனவாகவுமுள்ளன.

#### சரியான நேரத்திலான செயலாற்றம்

ஆய்விற்குரிய காலப்பகுதியில், எயார்லையின் சராசரியாக 80 சதவீதம் கொண்ட சரியான நேரச் செயலாற்றத்தினைப் பேணியது. இப்பெறுபேறானது, மொத்தமாக 26,754 பிரிவுகளில் 4.3 பில்லியன் வாடிக்கையாளர்களின் பறப்புத் தொடர்பில் அடையப்பட்டதொன்றாகும்.

சரியான நேரச் செயலாற்றம் தொடர்பில் உச்சமட்ட சாதனை அடையப்பட்டமைக்கு பல்வேறு வகையான ஒழுங்குமுறைகள், செயற்பாடுகள் மற்றும் வழியலகுகள் மற்றும் எயார்லையினின் பல்வேறு முக்கிய திணைக்களங்களின் குறிப்பிடத்தக்க ஒத்துழைப்பு என்பன யாவும் ஒன்றுசேர்ந்தமையே காரணமாகும்.

இவ்வாண்டில் மிகச் சிறந்த பெறுபேறுகள் எய்தப்பட்டமையையிட்டு அவர்கள் யாவரும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

#### பிளை ஸ்மைல்

பிளை ஸ்மைல் எமது விசுவாசம் நிறைந்த வாடிக்கையாளர்களின் நிகழ்ச்சித்திட்டமாகும். உலகம் முழுவதிலும் இந்நிகழ்ச்சித்திட்டத்தில் 418,051 உறுப்பினர்கள் தற்பொழுது இருக்கின்றனர். இந்நிகழ்ச்சித்திட்டமானது ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்து வருவதுடன் இது 2014/15 இலிருந்து 2015/16 நிதியாண்டில் 16 சதவீதமான உறுப்பினர் வளர்ச்சியைக் காட்டியது.

எமது மொத்த ஒன்றுசேர்ந்த மைல்களின் பொறுப்பு ஏறத்தாழ ஐ.அ.டொலர் 20 மில்லியன் பெறுமதியுடன் 2.5 பில்லியன் மைல்களாகக் காணப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டமானது ஆரோக்கியமான வருவாய் செலவு வீதமான 60 சதவீதத்தில் பேணப்பட்டு வருவதுடன், இது தொழில்துறை அளவு விதிகளில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் உள்ளது.

2015/16 நிதியியல் ஆண்டில், மைல்களின் காலாவதி கம்பனியின் வருமானத்திற்கு வரவேண்டிய பிற்போடப்பட்ட வருமானமான மதிப்பிடப்பட்ட ஐ.அ.டொலர் 2.4 மில்லியனில் 309 மில்லியனாகக் காணப்பட்டது.

பிளை ஸ்மைல் உறுப்பினர்கள் எமது 26 வான் வழியல்லா பங்காளர்களின் மூலம் உணவு, பொழுதுபோக்கு, நிதியியல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல் போன்ற விடயங்களை அனுபவித்ததன் மூலம் வருவாய் செலவிடல் வசதிகளையும் பெற்றுக் கொண்டனர்.

வண்வேர்ள்ட் அணியின் போக்குவரத்து உறுப்பினரொருவர் என்ற முறையில் அனைத்து அங்கத்துவ விமான நிறுவனங்களினாலும் ஒன்றுசேர்ந்த அங்கீகரிக்கப்பட்ட எமரால்ட், சபையர் மற்றும் றூபி தர வரிசை அணியினருடன் பிளாட்டினம், தங்கம் மற்றும் கிளாசிக் தரம் கொண்ட உயர்தர உறுப்புரிமையொன்றைக் கொண்ட அணியினருடன் நாம் இணைந்திருக்கின்றோம். இவ்வசதியானது உலகளாவிய ரீதியில் எமது உறுப்பினர்களுக்கு சுமுகமான பயணத்தினையும் அநேக சிறப்பு வசதிகளையும் வழங்குகிறது.

இதன் மூலம், எமது தங்கம் மற்றும் பிளாட்டின உறுப்பினர்கள் உலகளாவிய ரீதியில் 600 அமைவிடங்களில் இவ்வசதியை பெற்றுக் கொள்கின்றனர்.

சிறிலங்கனின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு பிளைஸ்மைலுக்காக அபிவிருத்தி செய்யப்பட்டிருப்பதுடன் இது எங்கேயிருந்தும் எமது அனைத்துப் பணிகளையும் ஒற்றைத் தொடுகை மூலம் செல்லிடத் தொலைபேசி வாயிலாக பெற்றுக் கொள்வதற்கான வசதிகளைச் செய்திருக்கிறது. இதனூடாக எமது உறுப்பினர்கள் தமது மைல் மீதியைப் பரிசோதித்து பார்க்க முடிவதுடன் எமது தற்போதைய உறுப்பினர்களுக்கான வசதிகள் தொடர்பான அறிவித்தல்களைப் பெறவும், அவர்களது கணக்குகளை முகாமைப்படுத்தவும் அவர்களது தோற்றப்பாடுகள் தொடர்பான தரவுகளை இற்றைப்படுத்திக் கொள்ளவும் அதேபோன்று பிளைஸ்மைல் பங்காளர்களின் பொருட்களையும் பணிகளையும் பெற்றுக் கொள்வதற்கான மீட்பு பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளவும் உதவுகிறது.

சிறிலங்கன் எயார்லைனின் விசுவாச நிகழ்ச்சித்திட்டத்திற்கான மற்றொரு பெறுமதிகூட்டலாக, பிளைஸ்மைல் உறுப்பினர்கள் விமானத்தில் பயணம் செய்யும் போதே தீர்வையற்ற பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான மைல்களை பெற்றுக் கொள்வதனை அனுமதிக்கும் விதத்தில் தனித்துவம் வாய்ந்த விண்ணப்பமொன்றினை மிக விரைவில் வெளியிடவுள்ளோம்.

### சிறிலங்கன் ஹொலிடே

இலங்கையிலிருந்தும் இலங்கைக்குள்ளுமான பயணங்களை ஊக்குவிக்கின்ற எயார்லைனின் பொழுதுபோக்குப் பிரிவாக விளங்கும் சிறிலங்கன் ஹொலிடே எயார்லைனின் வலையமைப்பின் அனைத்து மையங்களுக்குள்ளேயுமுள்ள ஒரு விடயமாகும். சிறிலங்கன் ஹொலிடேயின் முக்கிய பங்காளர்களான பல முன்னணி சுற்றுலாவிடுதிகள், பயண தொழிற்பாட்டாளர்கள் மற்றும் ஏனைய சுற்றுலா தொடர்பான அமைப்புக்கள் என்பன பரந்த தெரிவுகளைக் கொண்ட விடுமுறை வாய்ப்புக்களைப் பயணிகளுக்கு வழங்குகின்றன.

25இற்கு மேற்பட்ட சிறிலங்கன் விடுமுறை அதிகாரம்பெற்ற தொழிற்பாட்டாளர்கள் அனைத்துக் கணனி வழி அதேநேர மையங்களிலிருந்து உள்வரும் சிறிலங்கன் ஹொலிடேகளை தொழிற்படுத்தி வருகின்றன. 2015/16இல் நான்கு புதிய அதிகாரம்பெற்ற தொழிற்பாட்டாளர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

மேலும், இதே ஆண்டில் சிறிலங்கன் ஹொலிடே நீண்ட காலத்தில் இந்திய சந்தையில் முனைப்பான ஒரு நிலையினை ஸ்தாபித்துக் கொள்ளும் நீண்ட காலத் திட்டத்தின் சிறந்ததொரு ஆரம்பமாக பதிவுசெய்யும் செயன்முறையினை மேற்கொள்வதற்காக அடிப்படைத் திட்டமொன்றுடன் அதன் இந்திய சந்தையினைத் திரட்சிப்படுத்தியது. இது 2014/15ஆம் ஆண்டிற்கெதிரான இலாபத்தில் 13 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைத் தோற்றுவித்தது.

சிறிலங்கன் ஹொலிடே வெளித்துறை பயண முகவர்கள், அதேபோன்று கம்பனி மற்றும் நேரடிப் பயணிகளினூடான வழிப்படுத்துகைகளினூடாக பயணிகளுக்கு பணியாற்றியது.

முன்னைய நிதியியல் ஆண்டுப் பகுதியில் சிறிலங்கன் ஹொலிடே தீவின் அனைத்துப் பாகங்களிலும் சிறிலங்கன் ஹொலிடே வர்த்தக நாமத்தினை ஸ்தாபிக்கும் நோக்குடன் சுற்றுலாச் சந்தைகளை ஏற்படுத்துவதற்கான தொழிற்பாடுகளில் கவனம் செலுத்தியது. இதனுடன் மற்றைய முன்னெடுப்புக்களும் சேர்ந்தமையின் காரணமாக வெளிச் சுற்றுலாத் திணைக்களம் அதன் வியாபாரத்தினை முன்னைய ஆண்டினை விட 14.2 சதவீதத்தினால் அதிகரித்தது.

உள்ளக மற்றும் வெளிவாரி வியாபாரங்கள் இரண்டினதும் காரணமாக ஒட்டுமொத்த சிறிலங்கன் ஹொலிடே மிகச் சாதகமான நிதியியல் ஆண்டொன்றினைக் கொண்டிருந்ததுடன் முன்னைய நிதியியல் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலாப நியதிகளில் 13.4 சதவீதம் கொண்ட ஒன்றுசேர்ந்த வளர்ச்சிக்கு வழிப்படுத்தியமையினையும் எடுத்துக்காட்டியது.

### கைத்தொழில் விடயங்கள்

ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் எயார்லைனின் உலக வழித்தடம்கள் 66 நாடுகளை உள்ளடக்கியிருந்தவிடத்து எயார்லைனை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக பொதுவான விற்பனை முகவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

இது சீனா, பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளிலுள்ள சிறிலங்கன் எயார்லைன்ஸின் சொந்த அலுவலகங்களுக்கு மேலதிகமானதாகும்.

56 பயணிகள் பொது விற்பனை முகவர் உடன்படிக்கைகள் மற்றும் 40 கார்கோ பொது விற்பனை முகவர் உடன்படிக்கைகளைச் சேர்த்து மொத்தமாக 96 பொது விற்பனை முகவர் உடன்படிக்கைகள் தொழிற்பாட்டிலிருந்து வருகின்றன.

### பறப்பில்

பயணிகளின் உணர்வுபூர்வமான தன்மையிலிருந்து நோக்குகையில் இது உண்மையில் முழுமையாக பயணம் பற்றியதேயாகும். எனவே, விமானத்திற்குள்ளேயான அனுபவங்கள் ஷபயணிகளின் ஒன்றுகலந்த திருப்திக்கு' மிக முக்கியமானதொன்றாகும்.

### விமானத்தின் உட்புற வசதிகள்

சிறிலங்கன் எயார்லைனின் விமானப் பயணத்தின் போதான வசதிகள், இத்தொழில் துறையிலுள்ள மிகச் சிறந்த மற்றைய நிறுவனங்களுக்குச் சமமானவையாகும். எமது யு330 அகன்ற உடலமைப்பினைக் கொண்ட விமானத்தின் வியாபார வகுப்பின் தட்டையான படுக்கையைக் கொண்ட இருக்கை வசதி தரமானதாகும். வியாபார வகுப்பிலுள்ள புறச்சூழலானது பிரமிக்கத்தக்க வான வெளி அனுபவங்கள்–சந்திர வெளிச்சம் - இலங்கையின் சூரியோதயக் காட்சி, சூரிய அஸ்தமனம் இரவின் வான வெளிக்காட்சிகளுடன் மேலும் மெருகூட்டப்பட்டிருக்கின்றன. இது பகல்/இரவு நேர உணர்வுகளை அனுபவிக்க உதவும்.

32" அகலத்தினைக் கொண்ட மிகப் பிந்திய வடிவமைப்பினைக் கொண்ட இருக்கை மூலம் விமானத்தில் பொருளாதார வகுப்பிலுள்ள பயணிகளின் இடவசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அனைத்துப் பயணிகளும் இருக்கைகளில் அமர்ந்தவாறே தமது செல்லிடத் தொலைபேசி கருவிகளுக்கு மின்னிணைப்புக்களையும் கணனி யுஎஸ்பியினையும் மின்னேற்றிக் கொள்வதற்குமான வசதிகளைப் பெற்றிருக்கிறார்கள்.

இவற்றிற்கும் மேலதிகமாக, மருத்துவ வசதிகளுக்காக வெளிநாடுகளுக்குத் தொடர்ச்சியாகப் பயணிக்கும் பயணிகளின் மருத்துவ நலன்களைக் கவனிப்பதற்காக எமது புதிய A330-300 விமானம், விமானத்திற்குள் உபாய ரீதியாக அமைக்கப்பட்ட "மெடா பவர்" மையமொன்றையும் கொண்டுள்ளது. இவ்வசதிகள் எமது அனைத்து விமானங்களிலும் பொருத்தப்பட்டுள்ள தன்னியக்க மயப்படுத்தப்பட்ட வெளிப்புற டெலிபிறிலேட்டர்களின் உதவியுடன் இயங்குகின்றன.

யுனஸ்கோவின் பாரம்பரிய அமைவிடத்தின் மலர்ச்செடிகள் மற்றும் கொடிகளின் இயற்கை வனப்பு மிக்க வகைகள் காட்சிகளையும் இலங்கையின் மிக அழகான சிங்கராஜா மழைக்காட்டின் அழகுமிக்க ஒப்பற்ற காட்சிகளையும் தனிப்பட்டவர்கள் அவர்களின் தொடுகை மூலம் கண்டுகளிப்பதற்கான முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமையினையிட்டு நாம் பெருமை கொள்கிறோம்.

**எமது சேவைகள்**

எப்பொழுதும் அதிகரித்து வருகின்ற உணவு வகைகளின் அளவினை அதிகரிப்பதற்காக விமானத்திற்குள் வழங்கப்படும் உணவுப் பண்டங்களின் விபரப்பட்டியலில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ள. வியாபார வகுப்புப் பயணிகள் "ஸ்கை குசைன்" மூலமான வெப்தளத்தினூடாக தமது உணவுத் தெரிவுகளை முன்கூட்டியே ஆடர் செய்து கொள்ளும் வாய்ப்பினைக் கொண்டிருப்பதுடன் அவர்கள் 26 சுவைமிகுந்த உணவுப்பட்டியலிலிருந்து உணவு வகைகளைத் தெரிவு செய்யத்தக்க வசதியும் இருக்கிறது. "வீட்டிலிருந்து வீட்டிற்கு" என்ற உணர்வினைத் தோற்றுவிக்கும் விதத்தில் பயணிகளின் சொந்த நாட்டு உணவு வகைகள் பென்டோ பெட்டிகள் போன்றவற்றில் அசாகி அல்லது கிறின் பியர் தெரிவுக்கேற்ப சீன குசைன் அதேபோன்று எமது பால்சோறு என்பனவற்றை வழங்குவது எமது நோக்காகும்.

**நீங்கள் பறக்கும் பொழுது**

விமானத்திற்குள் 1500 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட பொழுதுபோக்கு அம்சங்களைக் கொண்ட எமது ஓடியோ/வீடியோ நூலகத்தில் பல்வேறு வகையிலான புதிய படங்களும் வீடியோ மற்றும் ஓடியோ தெரிவுகளும் உங்களின் இரசனைக்கேற்ற இசைகளும் 15 மொழிகளில் ஒலிபரப்பப்படுகின்றன.

வீடியோப் படங்கள் வியாபார வகுப்பு மற்றும் பொருளாதார வகுப்பு இரண்டிலும் பெரிய திரைகளில் காட்டப்படுகின்றன.

விமானத்திற்குள்ளேயான பொழுதுபோக்கு அம்சங்களை மேலும் உயர்த்தும் பொருட்டு, "தனித்தனியான முறையில்" பயணிகளுக்கு பொழுதுபோக்கு அம்சங்களை வழங்குகின்ற முறையுடன் கூடிய காதுகளுக்குள் செருகக்கூடிய தலையில் அணியும் சாதனம் இவ்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில் விரும்பியவிடத்து முன்னைய தலைகளில் அணிகின்ற கேட்கும் சாதனங்களும் வழங்கப்பட்டன.

தலையில் அணியும் கேட்கும் சாதன வகைகளுடன் ஒப்பிடுகையில் புதிய கேட்கும் சாதனங்கள் குறைந்த நிறையுடையவையாக இருப்பதனால் எரிபொருள் சேமிப்புக்களை சேமிக்கும் முயற்சிகளுக்கும் இது சாதகமாக இருப்பதனால் எயார்லையின்ஸ் இதிலிருந்தும் நன்மைகளைப் பெறக்கூடியதாக இருக்கின்றது.

வியாபார வகுப்பிலுள்ள அனைத்துப் பயணிகளுக்கும் இரைச்சலற்ற உயர்தர செவிப்புலக் கருவிகள் வழங்கப்படுகின்றன.

கோள்மண்டல சிநேகபூர்வ மூலவளங்களின் பாதுகாப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் எமது பொருளாதார வகுப்புப் பயணிகளுக்கு அச்சிடப்பட்ட உணவு விபரப்பட்டியல் வழங்கப்படுவதனை நிறுத்தும் விதத்தில் அவரவரது தனிப்பட்ட திரைகளில் உணவுப் பட்டியல் விபரங்களைத் தற்பொழுது பெற்றுக்கொள்ள முடியும்.

செல்லிடத் தொலைபேசியூடான இணைப்பு மற்றும் வைபை வசதிகள் விமானத்திற்குள் வழங்கப்படுகின்றன.

எமது தீர்வையற்ற பொருட்களை வழங்கும் சேவையான "செறன்டிப் ரெசர்ரிஸ்" தொடர்ந்தும் விரிவடைந்து வருவதுடன் தற்பொழுது 19 நாணயங்களின் கூடையொன்று ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் அதேநேரக் கொடுகடன் அட்டை செல்லுபடியாக்கல் பணியும் வழங்கப்படுகிறது. இது "விமானப் பயணத்தின் போதே பொருட்களைக் கொள்வனவு செய்யும்" அனுபவத்தினை வழங்குகிறது. பின்னைய இந்நடைமுறையானது எமது எயார்லையினின் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் வடிவமைக்கப்பட்டதாகும்.

எவ்வாறெனினும் நாளின் இறுதியில், அனைத்து விடயங்கள் தொடர்பிலும் பயணிகளுக்கு நாம் எவ்வாறான பணிகளை வழங்கக்கூடியதாக இருந்தோம் என்பது பற்றியும் அவர்களின் உணர்வுபூர்வமான தேவைகள் எவ்வாறு திருப்திகரமாக அமைந்தன என்பது பற்றியும் ஆராயப்படும். இது தொடர்பில் வாடிக்கையாளர்களின் கருத்துக்கள் எமது தொழிற்பாடுகளில் இன்றியமையாததொரு அம்சமாகக் கருதப்படுகின்றன.

வாடிக்கையாளர்களின் கருத்துக்கள் ஒவ்வொரு வாடிக்கையாளரினதும் இலத்திரனியல் ரீதியான தொடுகை மையங்களினை உள்ளடக்கிய 7 வழிப்படுத்துல்களினூடாகவும் அதேபோன்று எழுத்து வடிவத்திலும் பெறப்படுகின்றன. நாங்கள் இத்தொழிற்பாட்டினை ஒவ்வொரு மாதமும் இலவசச் சீட்டிழப்பு முறைமையினூடாகவும் கூட ஊக்குவித்து வருகின்றோம்.

இக்கருத்துக்கள், குறிப்பாக குறைபாடுகள் தொடர்பான விடயங்கள், பணிகளைச் செம்மைப்படுத்திக் கொள்வதற்கு உதவும் விதத்தில் இலத்திரனியில் முறைமையூடாகக் கம்பனிக்கு சுற்றோட்டப்படுத்தப்படுகின்றன.

**அங்கீகாரம்**

சிறிலங்கன் எயார்லையினின் உச்ச விருதான – "ஆசியா மற்றும் அவுத்திரலாசியாவின் பயணிகள் அனுபவத்திற்கான மேன்மைகொள் சாதனை" விருதினையும் அதேபோன்று "மத்திய மற்றும் தென்னாசியாவில் மிகச் சிறந்த முழுமையான பணி வழங்கப்படும் எயார்லையின்" என்ற எதிர்காலப் பயண அனுபவங்கள் விருதினையும் வெற்றி கொண்ட பெருமைமிகு வெற்றியாளராக விளங்குகின்றது.

ஸ்கைறக்ஸ் சிறிலங்கனின் சேவை பற்றிய தரமிடலை 3 நட்சத்திரங்களிலிருந்து 4 நட்சத்திரங்களுக்கு தரமுயர்த்தியிருக்கிறது.

**சிறிலங்கன் கார்கோ**

ஆண்டின் இறுதியில் சிறிதளவு முன்னேற்றத்தினை மாத்திரம் காட்டிய கடுமையான சந்தை நிலைமைகளின் காரணமாக பிராந்தியங்கள் முழுவதற்கும் இது கடுமையானதொரு ஆண்டாகக் காணப்பட்ட போதும், சிறிலங்கன் கார்கோ தொழிற்பாடுகள் இன்று வரையான காலப்பகுதியில் 212,000 மெற்றித் தொன் கொண்ட அசைவினைக் கையாண்டிருப்பதன் மூலம் நிதியாண்டு முழுவதிலும் கையாளலில் 99.95 சதவீதமான நம்பகத்தன்மையினைப் பேணியிருக்கிறது.

ஆய்விற்குரிய நிதியியல் ஆண்டின் இறுதியளவில், கார்கோ தொழிற்பாடுகள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் ஈ-எயர் வழிப்பட்டியல் செயல்முறையினைப் பயன்படுத்தி கொழும்பிற்கு வெளியே அனுப்பப்பட்ட பொருட்களில் 75 சதவீதத்தினை உறுதிப்படுத்துகின்ற ஆரம்ப இலக்கினை பூர்த்திசெய்து கொண்டது. தொழிற்பாட்டின் வினைத்திறன் மட்டத்தினை மேலும் அதிகரிப்பதில் இம்மாற்றல் தன்மை முக்கிய வகிபாகமொன்றினை ஆற்றும்.

சிறிலங்கன் கார்கோ, குத்தகையுடன் கூடிய சரக்கு அனுப்புபவரின் தொழிற்பாட்டு இயலளவின் அதிகரிப்பதனூடாக இயலாற்றல் அதேபோன்று விரிவாக்கல் பணித் தடைகளை தணிக்கக் கூடியதாக இருந்தது. சரக்கு அனுப்புவரின் தொழிற்பாடுகள் பெங்க;ர் மற்றும் மும்பாய் போன்ற இந்தியாவிலுள்ள மையங்களுக்கு சரக்குகளைக் கொண்டு செல்வதற்கு முக்கியமாக உதவின. இதன் மூலம் இத்துறைகளில் காணப்பட்ட இயலளவுத் தடைகள் எதிரீடு செய்யப்பட்டன. லாகூர் மற்றும் டாக்கா என்பனவற்றை இணைக்கின்ற புதிய வழித்தடம் உட்பட விரிவடைந்த சரக்கு அனுப்புனர் வலையமைப்பு நிதியியல் ஆண்டுப் பகுதியில் அதிகரித்தளவிலான வருவாயினை வழங்கியது.

சிறிலங்கன் கார்கோ இரண்டாவது சரக்கு அனுப்புனர் தொழிற்பாட்டினை உள்ளடக்கியதன் மூலம் தற்பொழுது சீனாவிற்கான சரக்கு அனுப்புனர் வலையமைப்பினை மேலும் விரிவாக்குவதனை நோக்கி பணியாற்றத் தொடங்கியது.

மற்றைய விமானப் போக்குவரத்து நிறுவனங்களுடனான சிறப்பு விகிதாசாரப்படுத்தப்பட்ட உடன்படிக்கைகள் இவ்வாண்டுப் பகுதியில் சரக்கு அசைவுகளுக்கு வசதியளிப்பதில் முக்கியான பங்கினை ஆற்றியதன் மூலம் வலையமைப்பு சென்றடையக் கூடிய இடங்களை விரிவுபடுத்தியதுடன் அதேபோன்று கிடைக்கத்தக்க இயலாற்றலையும் உயர்த்தியது.

இவ்வாண்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய வருவாய் முயற்சியாக விளங்கும் மாலே ஊடான வலையமைப்பு மையங்களுக்கான மேலதிக இயலளவினை வழங்கும் பொருட்டு சீனா மற்றும் கொங்கொங்கிற்கு வெளியேயான உயர்ந்த கேள்வியைக் கொண்ட துறைகளுடன் சிறப்பு விகிதாசாரப்படுத்தப்பட்ட உடன்படிக்கைகள் தொடர்பில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

சீனாவிலிருந்தான இ-வர்த்தக நகர்வுகளை வசதிப்படுத்துவது மீது சிறிலங்கன் கார்கோ தீவிரமான கவனத்தினைச் செலுத்தியமையானது ஐ.அ.டொலர் 2.8 மில்லியன் கொண்ட மொத்த அஞ்சல் அலுவலக தபால் வருமானத்திற்குப் பங்களித்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 115 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும்.

உட்கட்டமைப்பு முன்னேற்றத்தின் பக்கத்திலிருந்து நோக்குகையில், எமது சரக்கு ஒதுக்கி வைத்தல் மற்றும் கையாளல் முறைமையுடன் நிறுவைப் பொறியை ஒருங்கிணைத்தமையின் மூலம் எமது சரக்குக் கையாளல் செயன்முறைக்கான தன்னியக்கப்படுத்தப்பட்ட தகவல்களை அனுப்பும் வசதியினை அபிவிருத்தி செய்து ஆரம்பிப்பதற்கு எமது தகவல் தொழில்நுட்பப் பிரிவு எமக்கு உதவியது.

எமது இனிவரும் நிதியியல் ஆண்டும் இன்னமும் பெரிய சவால்களை எதிர்நோக்க வேண்டியிருக்கின்ற அதேவேளையில், அத்தகைய சவால்களை எதிர்கொள்வதற்குத் தேவையான உபாயங்களையும் முன்னெடுப்புக்களையும் அது கொண்டிருக்கின்றது என்பதனையிட்டு எயார்லையின்ஸ் நம்பிக்கை கொண்டிருக்கிறது.

## எமது பிரதான தொழிற்பாட்டு உதவிப் பிரிவுகள்

### எயார்லையினின் தொழிற்பாடுகள் கட்டுப்பாட்டு மையம்

சிறிலங்கன் எயார்லையினின் தொழிற்பாடுகள் கட்டுப்பாட்டு மையம் ஒரு 24/7 பிரிவாக விளங்குவதுடன் அனைத்து தொழிற்பாட்டு வழி அலகுகளின் அனைத்து தொழிற்பாடுகளினதும் முழுமையான பார்வையினையும் கவனத்தில் கொண்டிருக்க வேண்டிய கட்டாய பொறுப்பினைக் கொண்டிருப்பதுடன் ஏதேனும் அவசர சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்கேற்ற விதத்தில் விரைவானதும் ஒத்துழைப்புடன் கூடியதுமான தீர்மானங்களை மேற்கொள்ளும் விதத்தில் ஆளணியினரையும் மூலவளங்களையும் ஆயத்தநிலையில் வைத்திருத்தலும் வேண்டும். அதேவேளையில் உயர்ந்தபட்ச வினைத்திறனையும் உச்சப் பெறுபேறுகளையும் உறுதிப்படுத்துவதுடன் தடங்கல் செலவுகளை பெருமளவிற்குக் குறைத்துக் கொள்ளுதலும் வேண்டும்.

எனவே, எயார்லையின் தொழிற்பாடுகள் கட்டுப்பாட்டு மையம், அனைத்துத் தொடர்பான பங்குடமையாளர்களின் தொடர்புறுத்தலுடன் நாளாந்த தொழிற்பாடுகளை முகாமைப்படுத்தி கண்காணிக்கின்ற மனோதிடம் கொண்ட மையமாக விளங்குகின்றது.

### அவசர காலப் பதிலிறுப்பு மற்றும் தடங்கலற்ற வியாபாரம்

எயார்லையின் கம்பனி அவசரகால பதிலிறுப்புத் திட்டம் மேலதிகத் திட்டமிடல், பயிற்சி மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி என்பன போன்ற நடவடிக்கைகளின் மூலம் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளதுடன் "வழமைக்கு மாறான" எந்தவொரு சந்தர்ப்பத்திற்கும் பதிலிறுத்தும் விதத்தில் சிறிலங்கனில் மிக நுணுக்கம் வாய்ந்த தயார் நிலையினை உயர்த்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இனிவரும் ஆண்டுகளில் சிறிலங்கன் அதன் அவசரகாலப் பதிலிறுப்புத் தொழிற்பாடுகளையும் தடங்கலற்ற வியாபாரத் தொழிற்பாடுகளையும் ஒருங்கிணைத்து தனியொரு வியாபாரத் தாக்குப்பிடிக்கும் மையமாகத் தொழிற்படும்.

## செலவினைச் சேமிப்பதற்கான முன்முயற்சிகள்

2016 யூனில் கம்பனி ரீதியாக நடைமுறைப்படுத்தப்பட்ட மீளமைப்பு நிகழ்ச்சித்திட்டம் அநேக செலவுச் சேமிப்புக்களைத் தோற்றுவித்ததுடன் அந்நடவடிக்கைகளை உச்சப்படுத்துவதற்கான முன்னெடுப்புக்களும் நடைமுறைக்கிடப்பட்டு வருகின்றன.

### விமான எரிபொருளை தாங்கிப்படுத்தல்

எரிபொருட்களை தாங்கிப்படுத்தும் முறைமை நடைமுறைக்கிடப்பட்டமையானது எரிபொருள் மீது கணிசமானளவு சேமிப்புக்களை அடைவதற்கு எயார்லையினுக்கு உதவியுள்ளது. எயார்லைனின் வழித்தட வலையமைப்பிலுள்ள சேரிடங்களிலிருந்தான உயர்த்தப்பட்ட எரிபொருள் வசதிகள் (தாங்கிப்படுத்தல்) அத்தகைய எரிபொருள் சிக்கனத்தினை வழங்குவதுடன் தற்பொழுது இந்நடவடிக்கைகள் நாளாந்தம் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

### விமான எரிபொருள் கண்காணிப்பு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சிறிலங்கா எரிபொருள் சிக்கனத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைப் பதிவுசெய்துள்ளது. சர்வதேச விமானப் போக்கவரத்து அமைப்பின் கருத்துப்படி உலகளாவிய ரீதியில் நாம் இத்தகைய வியாபார மாதிரியினைக் கொண்ட விமான நிறுவனங்களிடையே 14ஆவது இடத்தினைப் பெற்றுள்ளோம்.

## சிறிலங்கன் கேட்டறிங்

சிறிலங்கன் எயார்லையினுக்கு முழுமையாகச் சொந்தமான சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட், ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் செயலாற்றத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டியது. கம்பனியின் வருமானம் அதிகரித்தமைக்கான முக்கிய காரணம் யாதெனில் பறப்பின் போது வழங்கப்பட்ட உணவின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பேயாகும். மொத்தமாக இவ்வாண்டுப் பகுதியில் வழங்கப்பட்ட உணவு 5.89 மில்லியனாகக் காணப்பட்டது.

கம்பனியானது விமானநிலையத்திலுள்ள உணவகங்களையும் பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்திலும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்திலுள்ள மாறிச்செல்லும் பயணிகளுக்கான மண்டபங்களையும் முகாமைப்படுத்தி தொழிற்படுத்தி வருகின்றது. சிறிலங்கன் கேட்டறிங் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தில் அதன் தொழிற்பாடுகளை 2013இல் தொடங்கியது.

இதன் துணை வியாபார நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக கம்பனி செறனிதீவ ரான்சிற்ஹோட்டல், தொழில்முறையிலான சலவை, வனிலா பொட் வூட் விற்பனைமையம் மற்றும் கோட்டை ஒல்லாந்தர் வைத்தியசாலையிலுள்ள சொமன்டு உணவகம் முகாமைப்படுத்தி தொழிற்படுத்தி வருகின்றது.

### வருமானம்

ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் கம்பனியின் வருமானம் இலங்கை ரூ. 6.28 பில்லியனுக்கு 5.4% சதவீதத்தினால் அதிகரித்தது (2014/15: இலங்கை ரூ. 5.96 பில்லியன்) இதற்குப் பறப்பிற்குள்ளேயான உணவு வழங்கலே முக்கியமாகப் பங்களித்தது.

**வருமானம்**
இல. ரூ. மில்லியன்




பறப்பிற்குள்ளேயான உணவு வழங்கலிலிருந்தான மொத்தப் பங்களிப்பு கம்பனியின் மொத்தப் புரள்வில் 79 சதவீதமாகக் காணப்பட்டது. முக்கிய பங்களிப்பாளராக சிறிலங்கன் எயார்லையின்ஸ் காணப்பட்டதுடன் இது ஆண்டிற்கான மொத்த உணவு தயாரிப்பில் ஏறத்தாழ 71 சதவீதத்தினை வாங்கியது. சிறிலங்கன் எயார்லையினிலிருந்தான மொத்தப் பங்களிப்பு, இவ்வாண்டுப் பகுதியில் ஈட்டப்பட்ட மொத்த வருமானத்தில் 56 சதவீதமாகக் காணப்பட்டது.

### உணவுகளின் உள்ளமைப்பு – 2015/16




பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்திலுள்ள உணவகங்கள் மற்றும் மாறிச்செல்லும் பயணிகள் மண்டபத்திலிருந்து கிடைத்த வருமானம் 12 சதவீதத்தினால் இலங்கை ரூ. 983 மில்லியனுக்கு (2014/15: இலங்கை ரூ. 882 மில்லியன் அதிகரித்தது.

#### தொழிற்பாட்டுச் செலவினங்கள்

2015-16ஆம் ஆண்டிற்கான மொத்த தொழிற்பாட்டுச் செலவு இலங்கை ரூ. 2.41 பில்லியனாகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது ஏறத்தாழ 4 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும்.

#### நிதி வருமானம்

ஆய்விற்குரிய காலப்பகுதியில், கம்பனியின் நிதி வருமானம் இலங்கை ரூ. 1.40 பில்லியனுக்கு (2014/15: இலங்கை ரூ. 309.8 மில்லியன்) 353 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கான முக்கிய பங்களிப்பாக இலங்கை ரூ. 1.39 பில்லியன் கொண்ட செலாவணி இலாபம் காணப்பட்டது. இவ்வுயர்விற்கு முன்னைய ஆண்டின் ஐ.அ.டொலருக்கான இலங்கை ரூ. 133.32 உடன் ஒப்பிடுகையில் 2016 மாச்சு 31இல் இலங்கை ரூ. 144.69 இற்கு தேய்வடைந்தமையே காரணமாகும்.

#### நிதிச் செலவு

கம்பனியின் நிதிச் செலவு, முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட இலங்கை ரூ. 309 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இலங்கை ரூ. 189 மில்லியனுக்கு குறைவடைந்தமைக்கு சிறிலங்கன் எயார்லையின்ஸ் முன்னுரிமைப் பங்குகள் மீட்கப்பட்டமையே முக்கிய காரணமாகும்.

#### வரி விதிப்பு

இலங்கை முதலீட்டுச் சபையுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் நியதிகளின்படி கம்பனி 2021 மே 30ஆம் நாள் வரை வரி விடுப்பினை அனுபவிக்கலாம். 2012 சனவரி முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் சர்வதேச போக்குவரத்துக்களை வழங்கும் நோக்கத்திற்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீதான அனைத்து வரிகளும் வரியிலிருந்து விலக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது விமானங்களின் சமயலறை, மாறிச் செல்லும் பயணிகளுக்கான உணவகம் மற்றும் ரான்சிட் ஹோட்டல் என்பனவற்றிலிருந்து பெறப்பட்ட வருமானங்களுக்கும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

பொதுமக்களுக்கான உணவகம், வனிலா பொட் விற்பனை நிலையம், செமொன்டு உணவகம் மற்றும் உள்நாட்டுச் சலவை விற்பனை என்பனவற்றிலிருந்து கிடைத்த வருமானம் முன்னைய வரி வீதத்தில் வரி செலுத்துவதற்கு உட்பட்டதாகும்.

### இலாபத்தன்மை




வரி விதிப்பிற்குப் பின்னரான கம்பனியின் தேறிய இலாபம் இலங்கை ரூ. 3.64 பில்லியனாக (2014/15: இலங்கை ரூ. 2.19 பில்லியன்) காணப்பட்டது. இவ்வாண்டிற்காக அறிவிக்கப்பட்ட செலாவணி இலாபம் இலங்கை ரூ. 1.39 பில்லியனாகக் காணப்பட்டது (2014/15 - இலங்கை ரூ. 297 மில்லியன்). இதன்படி, இவ்வாண்டிற்காக ஈட்டப்பட்ட தேறிய இலாபம் (செலாவணி நன்மைகள் நீங்கலாக) இலங்கை ரூ. 2.24 பில்லியனாகக் காணப்பட்டது (2014/15இல் இலங்கை ரூ. 1.9 பில்லியனாகக் காணப்பட்டது). இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 18 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும்.

#### நிதி நிலைமை அமைப்பு

ஆய்விற்குரிய காலப்பகுதியில், கம்பனியின் மொத்தச் சொத்துக்கள் இலங்கை ரூ. 613 மில்லியனால் இலங்கை ரூ. 9.7 பில்லியனுக்கு (2014/15: இலங்கை ரூ. 9.09 பில்லியன்) அதிகரித்தமைக்குத் தொடர்பான தரப்பினரிடமிருந்து பெறத்தக்கவைகளில் ஏற்பட்ட 13 சதவீதமான அதிகரிப்பே காரணமாகும்.

### மொத்தச் சொத்து எதிர் மொத்தப் பொறுப்புக்கள்




கம்பனியின் தேறிய தொழிற்படும் மூலதனம் 2016 மாச்சு 31இல் இலங்கை ரூ. 6.7 பில்லியனுக்கு அதிகரித்தது (2014/15: இலங்கை ரூ. 5.86 பில்லியன்).

## வருமானப் பிரிவுகள்

| | 2015/16 | 2014/15 |
|---|---|---|
| நடைமுறைச் சொத்துக்கள் | 7,489,352 | 6,549,537 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 768,683 | 689,771 |
| தேறிய நடைமுறைப் பொறுப்புக்கள் | 6,720,669 | 5,859,766 |
| நடைமுறை விகிதம் | 9.74 | 9.50 |
| விரைந்த விகிதம் | 9.43 | 9.03 |
| பொருட்பட்டியல் மொத்தப் புரள்வு விகிதம் | 6.17 | 4.51 |
| கடன் வழங்கியோர் நாட்கள் | 38.51 | 35.46 |

இதன் வலுவான நிதியியல் நிலைமையினை பரிசீலனையில் கொள்கையில், கம்பனியானது அதன் குறுங்கால மற்றும் நடுத்தர கால பொறுப்புக்களையும் பூர்த்தி செய்யத்தக்க வசதியான நிலைமையில் இருப்பதாக நம்பிக்கை கொண்டிருப்பதுடன் மற்றைய கடப்பாடுகளையும் பூர்த்தி செய்யத்தக்கதாக இருக்கின்றது.

### முடுக்கி மற்றும் மூலதன அமைப்பு

இலங்கை ரூ. 9.7 பில்லியன் கொண்ட கம்பனியின் மொத்தச் சொத்துக்களில் உயர்ந்ததொரு விகிதம் பங்குடமையாளர்களின் நிதியினால் நிதியிடப்பட்ட வேளையில் (76 சதவீதம்) எஞ்சிய பங்கு நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் (16 சதவீதம்) மற்றும் வர்த்தகம் மற்றும் ஏனைய கடன் வழங்குநர்களினால் (8 சதவீதம்) இணைந்து நிதியிடப்பட்டது.

### பங்குடமையாளர்களுக்கான வருவாய்

கம்பனிக்கான பங்குரிமை மூலதனத்தின் மீதான வருவாய் 49 சதவீதத்திற்கு (2014/15இல் 37 சதவீதம்) அதிகரித்தது. பங்கொன்றிற்கான வருவாய் 66 சதவீதத்தினால் இலங்கை ரூ. 3.87 இற்கு அதிகரித்தமைக்கு இக்காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட செலாவணி இலாபமே முக்கிய காரணமாகும். மேலும், 2015/16இல் ஈட்டப்பட்ட இலாபத்திலிருந்து கம்பனியின் சாதாரண பங்குடமையாளர்களுக்கு பங்கொன்றிற்கு இலங்கை ரூ. 3.29 கொண்ட முதலாவதும் இறுதியுமானதுமான சாதாரண பங்கிலாபத்தினை வழங்க முன்மொழிந்தது (2014/15 – பங்கொன்றிற்கு முதலாவதும் இறுதியானதுமான சாதாரண பங்கிலாபம் இலங்கை ரூ. 2.23 ஆக இருந்தது).

## சிறிலங்கன் விமானநிலையம் மற்றும் தரையிலான சேவைகள்

விமானநிலையம் மற்றும் தரையிலான சேவைகள் எயார்லையினின் பிரதான உபாய வியாபார அலகுகளில் ஒன்றாக இருப்பதுடன் இது சிறிலங்கன், விமான மற்றும் தரைவழிச் சேவைகளினது ஏக வழங்குநராக இருப்பதுடன் அதேபோன்று பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் தொழிற்படுகின்ற அனைத்து விமான சேவைகளுக்குமான சேவைகளை வழங்கும் ஏக வசதி வழங்குநராகவும் விளங்குகின்றது.

ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில், சிறிலங்கனின் விமானநிலையம் மற்றும் தரைவழிச் சேவைகள் 26,650 சிறிலங்கன் மற்றும் 28,460 வாடிக்கையாளர் விமான நிறுவனங்களின் பறப்பு அலைவரிசனையும் கையாண்டதன் மூலம் எல்லாமாக ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 8.5 மில்லியன் பயணிகளுக்கு பணியாற்றியிருக்கிறது.

இனிவரும் ஆண்டில் விமானங்களின் அசைவு 4 சதவீதத்தினால் அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளமையினால் அதனைக் கையாளும் விதத்தில் இப்பிரிவிற்கான வசதிகளும் வலுப்படுத்தப்பட்டிருக்கிறது.

### பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் கையாளப்பட்ட பறப்புக்கள்




### கையாளப்பட்ட பறப்புக்கள்




### கையாளப்பட்ட பயணிகள்




"விமானநிலைய அனுபவத்தினை" பயணிகள் சிநேகபூர்வமானதாக மாற்றும் எமது முயற்சிகள் சாத்தியமானளவிற்கு தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றன. பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் பயணிகள் தற்பொழுது பல்மொழி வசதிகளைக் கொண்ட சிறிலங்கன் எயார்லையினின் பரிசோதனை சாதனமான "கிஷோக்" இன் ஊடாகப் பயணிகள் தமது சொந்தப் பொதிகளுக்கான சுட்டுத் துண்டுகளை அச்சிடக்கூடிய வசதிகள் இருப்பது இனிமையானதொரு சூழலாகும். அதேபோன்று நாங்கள் தொடர்ந்தும் ஷெஸ்மார்ட் நாடா' ஊடாக கையினால் செய்யப்படும் பரிசோதனை செயன்முறைகளையும் மேற்கொண்டு வருகின்றோம்.

சிறிலங்கனுக்கு மட்டுமன்றி நாம் சேவையாற்றும் அனைத்து வாடிக்கையாளர் விமான நிறுவனங்களுக்கும் குறிப்பிடத்தக்களவிற்கு தரமுயர்த்தப்பட்ட தரமான சேவைகளை வழங்குவதற்காக எயார்லையின் புதிய தரை உதவிக்கான சாதனமொன்றிலும் அதேபோன்று ஏனைய உந்து மயப்படுத்தப்பட்ட மோட்டார் மயப்படுத்தப்படாத சாதனங்கள் மீதும் முதலீடுகளை மேற்கொண்டிருக்கிறது. இப்பொழுது நாம் இவ்வனைத்துச் சாதனங்களையும் அடிப்படை பழுதுபார்த்தல் உட்பட உள்ளக இடங்களிலேயே அவற்றின் பேணலை மேற்கொள்ளக்கூடிய நிலையில் இருக்கின்றோம். இது தொடர்பில் எமது பொறிகள் மற்றும் சாதனங்கள் பிரிவு தற்பொழுது இன்றியமையாத கருவிகளின் அனைத்துத் தொழிற்பாடுகளினதும் பழுதுபார்த்தல்களில் 98.5 சதவீதத்தினைக் கொண்ட அடிப்படை அளவுக் குறியீடொன்றினைப் பெற்றுள்ளன.

வாடிக்கையாளர் சேவை நியதிகளில் ஷஉச்ச' சேவைகளை வழங்குவது மக்களின் - எமது மக்களின் தகைமை மற்றும் தொழில்சார் நிபுணத்துவம் என்பனவற்றில் தங்கியிருக்கிறது. சிறிலங்கன் தொடர்ந்தும் முன்னேற்றம் மற்றும் சேவைகள் சந்தை பயிற்சி என்பனவற்றினூடாக அலுவலகங்களின் அபிவிருத்தி மீது தொடர்ந்தும் முதலீடுகளை மேற்கொள்வதுடன் அனைத்து மட்டங்களிலும் கடுமையான முறையிலும் தற்பொழுது இடம்பெற்றுவரும் நடவடிக்கை மட்டங்களில் மதிப்பீடுகளையும் மேற்கொண்டு வருகின்றது. வினைத்திறன் மற்றும் உபாசார நியதிகளில் அலுவலர்களின் செயலாற்றமானது 2016/17ஆம் நிதியாண்டில் கவனம் செலுத்தப்படும் பிரதான விடயமாக இருக்கும்.

தரைத் தொழிற்பாடுகள் மீள்சான்றுபடுத்தலுக்கான சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கத்தின் பாதுகாப்பு ஆய்வின் கடுமையான கணக்காய்வு செயற்பாட்டின் போது மிகச் சிறந்த பணிக்கான ஆரவாரம் நிறைந்த வெற்றிக்காக, எயார்லையின் பெருமை கொள்கிறது.

### சிறிலங்கன் என்ஜினியறிங்

எயார்லையினின் பிரதான வியாபாரப் பிரிவொன்றான சிறிலங்கன் என்ஜினியறிங் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஒப்புதலைப் பெற்றிருப்பதுடன் ஐரோப்பிய விமானப் போக்குவரத்து பாதுகாப்பு முகவரிடமிருந்து ஈஏஎஸ்ஏ145 சான்றிதழையும் ஏனைய பல தேசிய விமானப் போக்குவரத்து அதிகாரசபைகளின் சான்றிதழ்களையும் பெற்றிருக்கிறது. இது சிறிலங்கனின் விமானத் தொகுதிகள் அதேபோன்று பல வெளிநாட்டு சர்வதேச வாடிக்கையாளர்களுக்குமான அனைத்தையுமுள்ளடக்கிய விமானக் கட்டமைப்பு பேணல் நடவடிக்கைகளை ஆற்றி வருகின்றது.

ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் இப்பிரிவானது பிரதான பல மைல்கற்களை அடைந்துள்ள வேளையில் அனைத்து ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகளினாலும் விதிக்கப்பட்ட கடுமையான பாதுகாப்பு மற்றும் தரநியமங்களைப் பின்பற்றியதுடன் அதன் ஒட்டுமொத்த தொழில்நுட்பப் பணிகளை வழங்குவதில் இவ்வாண்டுப் பகுதியில் 99.19 சதவீதமான நம்பகத்தன்மையினைப் பேணியது.

ஆய்விற்குரிய ஆண்டில், பிரிவானது, சிறிலங்கனுக்கான ஐந்து A330-300 விமானங்களை அறிமுகப்படுத்தும் செயன்முறைகளை நிறைவுசெய்து கொண்டது. சிறிலங்கனின் அடுத்த தலைமுறைக்கான வானூர்திகளை அறிமுகப்படுத்தும் செயன்முறைகள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாண்டுப் பகுதியில் உள்ளகப் பேணல் நடவடிக்கைகள் ஆறு A340 விமானங்கள் மற்றும் ஒரு A330-200 விமானம் என்பனவற்றிற்கான குத்தகைக் கூற்று நடவடிக்கைகள் உள்ளகத்தில் இடம்பெற்ற கூற்றுக்களின் முழுமையான பரிசோதனையுடன் நிறைவடைந்தன. சிறிலங்கனின் நான்கு விமானங்கள் மற்றும் சிறிலங்கனை ஏக பேணல் வசதிகளை வழங்குபவராகக் கொண்டிருக்கும் சகோதர விமான நிறுவனமான மிகின் லங்காவின் மேலும் நான்கு விமானங்களின் உட்புறத்தினை திருத்தியமைத்தல் மற்றும் வெவ்வேறு நடவடிக்கைகளை ஒன்றிணைத்தல் என்பன முற்றுப்பெற்றன. ஆய்விற்குரிய ஆண்டின் முதல் இரண்டு காலாண்டுகளிலும் நான்கு ஒடுங்கிய உடலமைப்பினைக் கொண்ட (A320-200) விமானங்களின் விமான உட்புகுதியின் வியாபார வகுப்புப் பிரிவினை தரமுயர்த்தும் நிகழ்ச்சித்திட்டம் நிறைவடைந்துள்ளது.

இதன் வளர்ச்சி இலக்குகளை வெற்றிகரமாக எய்தும் விதத்தில், ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் இப்பிரிவானது மாலைதீவுகள் மற்றும் துருக்கி எயார்லையினின் வெளிவாரி வாடிக்கையாளர்களுக்கான மற்றைய பேணல் வேலைகளின் செயலாற்றத்திற்குப் புறம்பாக, இந்தியாவின் பாரிய எல்சிசி இன்டிகோ விமானத்தின் மீதான 47சி பரிசோதனைகளை நிறைவு செய்தது.

ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் சிறிலங்கன் என்ஜினியறிங், போயிங் 737 விமானத்தினை தொழில்நுட்ப ரீதியில் கையாள்வதற்கான ஒப்புதலைப் பெறுவதற்கான செயன்முறைகளை சிறிலங்கன் என்ஜினியறிங் முன்னெடுத்துள்ளது. ஒப்புதல் பெறப்பட்டதும் பிரிவானது வெளிநாட்டு வாடிக்கையாளர் வருமானங்களை கொழும்பு மற்றும் மாலே விமானநிலையங்களுக்கு விரிவாக்கக் கூடியதாக இருக்கும்.

எதிர்காலத்தினை நோக்குகையில், பிரிவிற்கான முக்கிய குறிக்கோளாக, போட்டித்தன்மை வாய்ந்த முன்கூட்டியே வடிவமைக்கப்பட்ட சேவைகளை வழங்குகின்ற அனைத்தையுமுள்ளடக்கிய சொத்துப்பட்டியலை வழங்குகின்ற பிராந்தியத்திலுள்ள பிரதான எம்ஆர்ஓ ஆக பணிகளை விரிவாக்குவது காணப்பட்டது.

### சிறிலங்கன் விமானப் போக்குவரத்துக் கல்லூரி

சிறிலங்கன் விமானப் போக்குவரத்துக் கல்லூரி சர்வதேச விமானப் போக்குவரத்து அமைப்பு, யுரோப்பியன் ஏவியேஷன் சேவ்டி ஏஜென்சி மற்றும் சர்வதேச சிவில் ஏவியேஷன் அமைப்பினது ரெயின்எயார் பிளஸ் நிகழ்ச்சித்திட்டம் என்பனவற்றின் அங்கீகாரத்தினைப் பெற்ற ஒரு சில விமானப் போக்குவரத்து பயிற்சி நிறுவனங்களில் ஒன்றாக விளங்குகின்றது. சிறிலங்கன் விமானப் போக்குவரத்துக் கல்லூரி இலங்கை, பாகிஸ்தான், மாலைதீவுகளில் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைகளின் ஒப்புதலைப் பெற்றுள்ளது.

சிறிலங்கன் விமானப் போக்குவரத்துக் கல்லூரி சர்வதேச விமானப் போக்குவரத்துக் கல்லூரி மற்றும் சிறிலங்கன் தொழில்பயிற்சி என்பனவற்றின் பயிற்சித் தொழிற்பாடுகளில் திரண்ட கவனத்தினைச் செலுத்தியது. உயர்வான சீரிய விமானப் பயிற்சி அனுபவங்களின் மூலம் வலுவூட்டப்பட்ட சிறிலங்கன் விமானப் போக்குவரத்துக் கல்லூரி 2014இல் அது தொடங்கப்பட்ட மிகக் குறுகியதொரு காலப்பகுதியிலேயே பெருமளவு வெற்றிகளை பெற்றுக்கொண்டது.

சிறிலங்கன் விமானப் போக்குவரத்து கல்லூரியின் பிரதான பயிற்சி வசதி கட்டுநாயக்காவில் அமைந்துள்ள வேளையில், கல்லூரியானது காலியிலும் (தென் மாகாணம்) அதன் அதிகாரம்பெற்ற தொழிற்பாடுகளினூடாக மாலைதீவின் தலைநகரமான மலேயிலுமுள்ள அதன் வெளிநாட்டுக் கிளைகளிலும் பயிற்சி வசதிகளை வழங்கியது.

2017இன் இரண்டாம் காலாண்டளவில் கல்லூரி இலங்கையின் தென் மாகாணம், வட மாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் மத்திய மாகாணங்களிலுள்ள ஆர்வம் கொண்ட இளைஞர்களின் விமானப் போக்குவரத்து தொழில்சார் நிபுணர்களாக வரவேண்டுமென்ற கனவினை நனவாக்கும் விதத்தில் அவர்களை அடையும் விதத்தில் அதன் கிளை வலையமைப்புக்களை விரிவாக்கத் திட்டமிட்டிருக்கிறது.

சிறிலங்கன் விமானப் போக்குவரத்துக் கல்லூரியின் பயிற்சி சொத்துப்பட்டியல் விமானப் போக்குவரத்துத் தொழில் துறையில் பல்வேறுபட்ட சிறப்பியல்பு வாய்ந்த துறைகளின் நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கியுள்ளது. இத்துறைகள் கல்லூரியின் ஏழு பீடங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன:

- பயணம் மற்றும் சுற்றுலா
- விமானநிலைய சேவைகள்
- சரக்கு மற்றும் அபாயகர பொருட்களின் ஒழுங்குவிதிகள்
- விமானிகள் மற்றும் தோற்ற ஆலோசனைகள்
- அடிப்படை விமானப் பேணல் விமானவியல்
- அடிப்படை விமானப் பேணல் எந்திரவியல்
- விமானப் பேணல் வகைப் பயிற்சி

சிறிலங்கன் விமானப் போக்குவரத்துக் கல்லூரி கம்பனி வாடிக்கையாளர்களுக்கு பயிற்சித் தீர்வுகளை வழங்குவதுடன் அதன் புதிய மொழிகள் பீடத்தினூடாக மொழி மற்றும் தொடர்பூட்டல் தேர்ச்சிகளை வழங்கவும் முயற்சிகளை மேற்கொண்டது. இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாணவர்களுக்கு பயிலுநர் – சிநேகபூர்வ தொழில் துறையினை அடிப்படையாகக் கொண்ட சூழலொன்றில், வகுப்பறைப் பயிற்சி மற்றும் தொடர்பான துறைகளில் வேலை தொடர்பான பயிற்சி என்பனவற்றை இணைத்துப் பயன்படுத்திக் கொள்ளல் ஆகிய வாய்ப்புக்களை மாணவர்களுக்கு வழங்குகின்றது. இது தொலைக் கல்விப் பயிலுநர்களுக்கான நடமாடும் பயில்தல் தள வசதிகளையும் வழங்குகிறது. சிறிலங்கன் விமானப் போக்குவரத்துக் கல்லூரி அநேகக் கம்பனி வாடிக்கையாளர்கள் அவர்களது பயிற்சித் தேவைப்பாடுகளை நிறைவு செய்து அவர்களுடன் நெருக்கமாகப் பணியாற்றிய வேளையில் வெளிநாட்டு விமான நிறுவனங்கள், வெளிநாட்டு விமானத் தொழில்துறையிலுள்ள ஏனைய ஆர்வலர்கள் உள்நாட்டு விமானப் போக்குவரத்து மற்றும் ஏனைய கைத்தொழில் துறைகளிலுள்ள ஆர்வலர்கள் என பரந்துபட்ட வீச்சிலான வலுவான வாடிக்கையாளர் தளமொன்றினைக் கட்டியெழுப்பியிருக்கிறது.

சிறிலங்கன் எயார்லையின் விமானப் போக்குவரத்துக் கல்லூரி வலுவான சமூக சூழல் தன்மைகளுக்கும் குறிப்பிடத்தக்க விதத்தில் பங்களித்திருக்கின்றது. கல்லூரி நிகழ்வுகளை ஒழுங்குசெய்து அவற்றிற்கு அனுசரணைகளை வழங்கியதுடன் நாடு முழுவதிலுமுள்ள பாடசாலைகள் அவற்றிற்கு அனுசரணைகளை வழங்கியதுடன் நாடு முழுவதிலுமுள்ள பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் விமானப் போக்குவரத்து, கல்வி தொடர்பான பதவி வழிகாட்டல் கூட்டங்களையும் செயலமர்வுகளையும் நடத்தியதுடன், விமானப் போக்குவரத்து பற்றிய ஆச்சரியங்கள் தொடர்பில் இளைஞர்களின் கண்களைத் திறக்கும் விதத்தில் உலகளாவிய விமானப் போக்குவரத்து மற்றும் உபசரணைக் கைத்தொழில்களில் வேலை வாய்ப்புக்களை வழங்கியதன் மூலம் விருது வாய்ப்புக்களையும் பெற்றுக்கொடுத்தது.

கல்லூரி இளைஞர்களிடையே விமானப் போக்குவரத்தில் ஆர்வம் மிக்கவர்களை ஒன்றுதிரட்டி அவர்களிடையே இத்தொழில் துறை பற்றிய சிறந்த விளக்கங்களை உருவாக்குவதற்காக நாடெங்கிலுமுள்ள நூற்றிற்கும் மேற்பட்ட பள்ளிக்கூடங்களில் அவர்களாகவே முன்வந்து தமது விமானப் போக்குவரத்துக் கழகங்களை உருவாக்குவதற்கு வழிகாட்டியது.

2014இல் இது தொடங்கப்பட்டதிலிருந்து உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலுமாக ஏறத்தாழ 400 மாணவர்கள் இக்கல்லூரியிலிருந்தும் பட்டம் பெற்றிருக்கிறார்கள்.

ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் கல்லூரியின் திறமை மற்றும் இயலாற்றல்கள் வெளிக்காட்டப்பட்டன. உலகளாவிய நிகழ்வுகளில் “விமானப் போக்குவரத்தில் அடுத்த தலைமுறையினரை ஊக்குவித்தல்” போன்ற காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரைகளினூடாக எமது வெற்றிக் கதைகளை மற்றையவர்களுக்குக் காட்சிப்படுத்த அழைக்கப்பட்டோம். இவை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன:

- பாங்கொங்கில் நடைபெற்ற ஆசிய பசுபிக் எயார்லையின் பயிற்சி மாநாடு (APATS)
- லக்சம்போர்க்கில் நடைபெற்ற யூரோப்பியன் எயார் சேவ்ரி ஏஜென்சியின் வருடாந்த மாநாடு (EASA)
- கம்போர்க்கில் இடம்பெற்ற இன்ரந'னல் எயார் ரான்ஸ்போர்ட் அசோசியே'னுடன் குளோபல் ரேயினிங் பாட்னர் காங்கிரஸ் (IATA)
- புதுடெல்லியில் இடம்பெற்ற ரெயின்எயார் பிளஸ் மாநாடு (ICAO)

கல்லூரியானது, விமானப் போக்குவரத்துப் பயிற்சியின் முன்னோடி, தனிப்பட்ட இளைஞர்களின் அபிலாசைகளை விமானப் போக்குவரத்துத் தொழில்சார் நிபுணத்துவத் துறைக்கு மாற்றியமை போன்ற பெருமைகளை ஈட்டிக் கொண்ட வேளையில் ஆசிய பசுபிக் பிராந்தியம் முழுவதும் வியாபாரம் மற்றும் சுற்றுலாத் தொழில்துறையின் அபிவிருத்திக்கான பிரதான பங்களிப்பாளராகவும் விளங்கி வருகின்றது.

#### கணனியில் வடிவமைக்கப்பட்ட மாதிரி பறப்புக் கூடப் பயிற்சி வசதி

எமது விமானங்களுக்காக A320 மற்றும் A330 விமானங்களில் பறப்பில் விமானிகளுக்கும் பயற்சியளிப்பதற்காக முக்கியமாக உருவாக்கப்பட்ட சிறிலங்கனின் அதிநவீனத்துவம் வாய்ந்த கணனியில் வடிவமைக்கப்பட்ட மாதிரி பறப்புக்கூடப் பயிற்சி வசதி மூன்றாம் தரப்பு வாடிக்கையாளாகளுக்கும் விரிவாக்கப்பட்டதுடன் இதன் மூலம் எயார்லையினுக்கு பெறுமானம் மிக்க வருமானமும் கிடைத்தது.

## எமது மக்கள்

மக்கள் இன்றி ஒன்றும் இயங்காது. மனிதவளப் பிரிவு இப்பெறுமானம் மிக்க வளங்களை சரியான முறையில் வழிப்படுத்துவதற்கும், இதனைக் கவர்ச்சியூட்டி உற்சாகப்படுத்தி, அவற்றிற்குப் பெறுமானம் சேர்த்து, உபாயம் மிக்க விதத்தில் மிகவும் பரஸ்பரம் மிக்க உற்பத்தியாக்கம் மிக்க துறைக்கு வழிப்படுத்தவும் சாத்தியமான விதத்தில் அவற்றை நிறையேற்றவும் பொறுப்பாக இருக்கின்றது. அதேநேரம், இது எயார்லையினின் வசதிகளைக் கவனிக்கும் நிர்வாகத்திற்கும் மக்களையும் சமுகத்தினையும் நோக்கிய முயற்சிகளுக்கும் பொறுப்பாக இருக்கிறது.

ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் பல முக்கிய சாதனைகள் பதிவுசெய்யப்பட்டன.

எயார்லையினின் குறிக்கோள்களை அடைவதனை நோக்கி ஊழியர்களை அணிதிரட்டும் நோக்குடன் மனிதவளப் பிரிவு பல முக்கிய செயற்திட்டங்களை மேற்கொண்டது.

சிறிலங்கனின் பயில்தல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வியாபாரப் பங்காளர் என்பனவற்றிற்குக் கிடைத்த கைத்தொழில் விருதுகளினூடாக சிறிலங்கன் பிராந்திய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

மனிதவளத் துறையில் சரியான திறமைக்கு மூலவளங்களை அளித்தல், உற்பத்தியாக்கத்திற்கு வசதியளித்தல், செயலாற்றத்தினை தூண்டுவதனூடாக நட்டங்கள் ஈடுசெய்யப்படுவதற்கான நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல், விருதுத் திட்டங்கள் மற்றும் ஊழியர்களின் இயலாற்றல்களை அதிகரித்தல் என்பனவற்றின் மீது கவனம் செலுத்தப்பட்டது. தேவைக்கதிகமான பதவிகளை அடையாளம் கண்டு அப்பதவிகளின் எண்ணிக்கையினைக் குறைக்கும் செயன்முறைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் அமைப்பினை ஆளணியினர் குறைந்த மிகத்திறன் வாய்ந்த நிறுவனமாக மாற்றியமைக்கும் முகாமைத்துவத்தின் பணிக்கு உதவும் விதத்தில் வேலைகளை மீளவடிவமைத்து தொடர்பான பிரிவுகளை மேம்படுத்தும் செயன்முறைகள் ஊக்குவிக்கப்பட்டன.

ஊழியர்களுக்கும் முகாமைத்துவத்திற்குமிடையேயான பிணைப்பினை வலுப்படுத்திக் கொள்ளும் விதத்தில் மனிதவளப் பிரிவு தொழில்துறை சமாதானம் மற்றும் சௌகன்யத்தினை உயர்த்துவதனை நோக்கமாகக் கொண்ட “நாங்கள் செவிமடுக்கிறோம்” என்ற பிரச்சாரமொன்றினை மேற்கொண்டது. இம்முயற்சியானது மனிதவளம், தொடர்பான முகாமைத்துவம் மற்றும் ஊழியர் தொழிற்சங்கங்களிடையே ஒன்றையொன்று சார்ந்த சந்திப்பொன்றினை உருவாக்கியது.

“சிவப்பிலிருந்து கறுப்பிற்கான பிரச்சாரம்” சிறிலங்கன் ஊழியர்களின் படைப்பாற்றல் மனோபாவத்தினைத் தட்டியெழுப்புவதனை நோக்கமாகக் கொண்டிருந்தது. இம்முயற்சிகள் முன்னெடுப்புக்கள் மீதான பல்வேறு புதுமைகளையும் சிந்தனைகளையும் பயன்படுத்த உதவியதுடன் இது இழப்புக்களைக் குறைப்பதற்கும் செலவினை சிக்கனப்படுத்துவதற்கும் பங்களித்தது.

பரந்துபட்ட விதத்தில் பல கட்டங்களில் முகாமைத்துவப் பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்த செயன்முறையானது இன்னொரு பிரதான மைல்கல்லாகும். இச்செயன்முறையானது திறன்வாய்ந்த இளைஞர் குழுமத்திற்கு பயற்சி வழங்கியதுடன் பரந்தளவிலான முகாமைத்துவம் தொடர்பான தொடர்ச்சியான நிகழ்ச்சிக;டாக அவர்கள் நேர்த்திப்படுத்தப்பட்டார்கள். வலுவான ஆட்சேர்ப்புச் செயன்முறையானது எதிர்காலத்தில் ஒன்றிணைந்த தலைமைத்துவத்தினை பொறுப்பேற்பதற்குத் தேவையான தேர்ச்சி, சாத்தியமான வளம் மற்றும் திறமை என்பனவற்றை எடுத்துக்காட்டிய அசாதாரண திறமையினைக் கொண்டவர்களை தெரிவுசெய்வதில் கவனத்தினைச் செலுத்தியது.

எமது தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் உதவியுடன் நிறுவனம் முழுவதிலும் வேலைச் செயன்முறைக்கு வசதியளிப்பது பாரிய உத்வேகமொன்றினைப் பெற்றுக் கொடுத்தது. கம்பனியின் புதிய உள்ளக வலைத் தளமான ஷயூலிங்' மற்றும் உயர் அதிகாரிகளின் பாதுகாப்புடன் நிறுவனம் முழுவதற்குமான உயர் அலுவலர் ஈடுபாடு மற்றும் ஒத்துழைப்பு மீது செல்வாக்கு கொண்ட கம்பனி சமூக வலைத் தளமான “ஜம்மர்” போன்ற புதிய தொழில்நுட்பப் புதுமைகளைப் பயன்படுத்தி பல்வழி அலைவரிசைகளினூடாக அதேநேர அலுவலர் ஒத்துழைப்பொன்றினை சிறிலங்கன் அறிமுகப்படுத்தியது.

உள்ளகச் செயன்முறைகள் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்வதன் மூலம் கிட்டும் பயன்களை அதிகரிப்பதற்காக மிகச் சிநேகபூர்வம் வாய்ந்த செல்லிட அப்ஸ்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சிறிலங்கன் அலுவலர்களுக்கான “பிளிஸ்டா” கையில் வைத்துக் கொண்டு பயணிக்கின்ற செல்லிட அப்ஸிற்கு ஒரு உதாரணமாகும். இது அவர்களது பறப்புக்களுக்கான முன்னுரிமை அந்தஸ்துடன் கூடிய அதேநேர பறப்பு நிலைமையினை கண்காணிப்பதனை இயலச்செய்யும்.

அலுவலகப் பணிகள், எங்கே இருந்தும் எந்தவொரு நேரத்திலும் கணனி முறைமையினை அணுகுவதற்கு வசதியளிப்பதற்காக கிளட்டினை அடிப்படையாகக் கொண்ட செய்தி அனுப்புதல் மற்றும் கணிப்பிடலுக்கு பயன்படுத்துவதற்காக உயர் தொழில்நுட்பங்கள் இணைக்கப்பட்ட கிளட் கணனிப்படுத்தல் அதிகரிக்கப்பட்டது.

நேரம் மற்றும் வரவு பதிவு முறையுடன் கூடிய தன்னியக்கப்படுத்தப்பட்ட மேலதிக நேர வேலைக் கணிப்பு, இன்றியமையாத நிருவாக நோக்கங்களுக்கான உற்பத்தித்திறனையும் வினைத்திறனையும் மேம்படுத்தியிருக்கிறது.

மனிதவளத்தின் நிகழ்ச்சிநிரலில் ஊழியர் அபிவிருத்தி முக்கியமானதொரு கூறாகும். ஊழியர்களின் இயலாற்றலை உயர்த்தும் நோக்குடன் மனிதவளப் பிரிவு தொடர்ச்சியாக தொழில்சார் நிபுணத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தியது. இதன் மூலம் ஊழியர்களுக்கு அவர்களின் உயர் கல்வியைத் தொடர நிதியியல் உதவியும் வழங்கப்பட்டது. மனிதவளப் பிரிவு “யூலிங்” என்ற பெயரில் அதேநேர கணனி வழி அறிவுக் களஞ்சியம் மற்றும் அற்ற முகாமைத்துவ முறைமை என்பனவற்றை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. இந்த கணனி வழி அதேநேரத் தளம் சுரங்கமொன்றினை உருவாக்கியதுடன் இதனூடாக ஊழியர்கள் தொழிற்பாட்டின் நேரத்திலான தன்மை தொடர்பில் ஊழியர்கள் தமது அறிவினையும் எண்ணங்களையும் பகிர்ந்து கொள்ளக்கூடியவர்களாக இருந்தனர்.

## சமூக சூழல் பொறுப்பாண்மை

பேரண்டப் பக்கத்திலிருந்து நோக்குகையில், சமூக மற்றும் சூழல் பாதுகாப்பு தொடர்பான விடயம் எயார்லையினின் இதயத்திலிருந்து வெகுதூரத்தில் ஒருபோதும் இருந்ததில்லை. புதிய விமானங்களின் தொடர்ச்சியான அறிமுகப்படுத்தலின் காரணமாக அவை அவற்றில் சிக்கனமான தொழிற்பாட்டினை ஆரம்பித்தமை (அவற்றில் குறைந்த எரிபொருள் நுகர்வு, குறைந்த புகை வெளிவிடும் வீதம் மற்றும் குறைந்த இரைச்சல்), எமது பயிற்சிக் கல்லூரியின் நடவடிக்கைகளினூடாக சிறிலங்கனின் ஆர்வத்திற்கேற்ற விதத்தில் சிந்தனை திறந்துவிடப்பட்டமை, தொழில் வழங்குநர் என்ற ரீதியில் இலங்கையிலிருந்தும் இலங்கைக்கானதுமான நுழைவாயிலை வழங்குமொருவராகவும் இருக்கின்றது. சிறிலங்கன் இவ்வம்சத்தினை தொழில்முயற்சியின் மையத்தில் திடமாக நிலைநிறுத்தியிருக்கிறது.

எயார்லையினின் கம்பனி சமூகப் பொறுப்பாண்மை நம்பிக்கைப் பொறுப்பான சிறிலங்கன் கெயார் எமது சமூக மற்றும் சூழல் நடவடிக்கைக்கான எமது நேரடி வழிப்படுத்தலாகக் காணப்படுவதுடன் இலங்கையில் தேவையுடைய மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துகின்ற விதத்தில் அர்த்தபுஷ்டியுடன் பணியாற்றுவதற்கு இரு முனைகளில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் பல செயற்றிட்டங்கள் உருவாக்கப்பட்டன.

எயார்லையின் பணியில் சிறுவர் நலன்புரி மிக முக்கிய கூறாக விளங்குகின்றது. வடமத்திய மாகாணத்திலுள்ள கிராமிய சமூகத்தினருக்கு ஒஸ்மோசிஸ் நீர் சுத்திகரிப்புச் சாதனமொன்றினை நன்கொடையாக வழங்குவதற்கு சிறிலங்கன் கெயர்ஸ் ஜேர்மனியிலுள்ள ஜிம்னாசியம் இசர்காயென் இணைந்து கொண்டது.

பல்லினத் தன்மைக்கும் சூழலின் நலன்புரிக்கும் அச்சுறுத்தலாக விளங்கும் பிரச்சனைகளை இளைஞர் மனங்கள் அறிந்து கொள்ளும் விதத்தில் அவர்களைச் செதுக்கும் நோக்குடன் சிறிலங்கன் கெயார்ஸ் ஆண்டியம்பலகம மகா வித்தியாலயத்தில் பள்ளிக்கூட பசுமைக் கழகமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு சிறிலங்கன் சூழல் பிரிவுடன் இணைந்து கொண்டது.

“உடல் ஊனமென்பது எதனையும் சாத்தியப்படுத்தக்கூடிய ஒன்றுதான்” என்ற அறக்கொடை நிகழ்ச்சித்திட்டமானது இலங்கையின் மாற்றுத் திறனாளிச் சிறுவர்களின் நலன்புரியையும் நலனோம்புகையையும் உறுதிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கிறது. ரோமிலுள்ள எமது அலுவலகத்தின் பங்களிப்புடன் சிறிலங்கன் கெயார்ஸ் மாவனெல்லையிலுள்ள பிறித்திபுர சிறுவர் இல்லத்திலுள்ள 133 மாற்றுத் திறனாளிச் சிறுவர்களுக்கு காலணிகளை அன்பளிப்புச் செய்தது. வருடாந்த நடனப் போட்டியில் பங்கேற்பதற்காக புதுடெல்லிக்கு பயணிப்பதற்காக விசேட தேவையுடைய ஏழு பிள்ளைகளை உள்ளடக்கிய நடனக்குழுவிற்கு நடன உடைகளை வழங்கி அனுசரணை வழங்கியது.

அறக்கொடை முயற்சியின் இன்னொரு மைல்கல்லை குறிக்கின்ற விதத்தில் சிறிலங்கன் கெயார்ஸ் வோர்சோ 2015 – அலுவலர் திறன் காட்சியில் சேகரிக்கப்பட்ட நிதியினை மாவனல்ல பிறித்திபுர சிறுவர் இல்லத்திற்கு நன்கொடையாக வழங்கியது. சிறிலங்கன் கெயார்ஸ் 22 தாழ்ந்த வருமானம் பெறும் குடும்பங்கள் மருத்துவ உதவிகளைப் பெற வசதியளித்தது. எயார்லையின் இலங்கையில் கிடைக்காத அறுவைச் சிகிச்சையினை வெளிநாட்டில் மேற்கொள்வதற்கு அவசர தேவையுடைய குடும்பங்களில் உறவினர்களுக்கு இலவச பயண வசதிகளை வழங்கியது.

சிறிலங்கன் 2016 மேயில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் உதவியளித்தது. சிறிலங்கன் கெயார்ஸ் ஊழியர்க-ளிடமிருந்து அன்பளிப்புக்களைச் சேகரித்து அவற்றைச் சரியான முறையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உரிய நேரத்தில் வழங்கியது.

சிறிலங்கனின் சூழல் கொள்கையானது கோளக - சிநேகபூர்வ எயார்லையின் ஒன்றினை உருவாக்குவதனை நோக்கி முழுத் தொழிற்படையினையும் ஒருங்கிணைப்பதனை நோக்கமாகக் கொண்டிருந்தது. சிறிலங்கன் அதன் பசுமைப் பணியினை எயார்லையினில் முதற்றடவையாக பசுமையின் “நீடித்துநிலைத்திருக்கும் தன்மை” என்ற தலைப்பில் வழிகாட்டலொன்றிறைத் தொடங்கியது. பூமியின் சூழலைப் பாதுகாப்பதற்காக எயார்லையினின் முயற்சி பல்வேறுபட்ட சர்வதேச தொழில் துறை அரங்கினரால் அங்கீகரிக்கப்பட்டதன் காரணமாக 2015/2016 காலப்பகுதி முக்கியத்துவம் வாய்ந்ததொரு காலப்பகுதியாக விளங்குகிறது. பயணிகளுக்கான எயார்லையினின் தன்னார்வ கார்பன் எதிரீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பசுமையாக பறவுங்கள் எமது கோளகத்தை பாதுகாத்திருங்கள் - ஜெனீவாவில் நடைபெற்ற உலகளாவிய நீடித்துநிலைத்திருக்கக்கூடிய உச்சிமாநாட்டில் முக்கிய விமானப் போக்குவரத்துச் சூழல் தீர்வொன்றாக எயார் ரான்ஸ்போட் நடவடிக்கை குழுமத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

கார்பன் வெளியீடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் எயார்லையினின் பறப்புத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மிகச் சிறந்த முயற்சிகள் ஆசிய பசுபிக் பிராந்தியத்திலுள்ள பெரும் எண்ணிக்கையான ஏனைய விமான நிறுவனங்களிடையே இரண்டாவது இடத்தினைப் பெற வழிவகுத்ததுடன் புகை வெளியிடல் கட்டுப்பாட்டில் உலகில் பதினேழாவது இடத்தைப் பெற்றுக் கொண்டது.

## எதிர்காலத் தோற்றப்பாடு

எதிர்வரும் ஆண்டு சவால் நிறைந்த இன்னொரு ஆண்டாக இருக்கும் என்பது நிச்சயம். தொழிற்பாட்டு மீளாய்வில் குறிப்பிடப்பட்டவாறு, சிறிலங்கன் அதன் பிராந்திய இருப்பினைப் பலப்படுத்துவதிலும் கம்பனியின் கீழ்மட்டத்தினை திரட்சிப்படுத்துவதிலும் கவனம் செலுத்தும். இதனை அடையும் விதத்தில், கொழும்புத் தளத்தில் எயார்லையினுக்கு அணித்தாகவுள்ள சேரிடங்களைச் வலையமைப்பில் இணைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. எயார் பஸ் A320 போன்ற ஒடுங்கிய உடலமைப்பினைக் கொண்ட பிராந்திய விமானத் தொகுதி எயார்லையினின் விமானத் தொகுதிகளின் முதுகெலும்பாக இருக்கும்.

பிராந்தியம் தொடர்பாகச் செலுத்தப்படும் கவனத்தின் ஒரு பகுதியாக, சிறிலங்கன் அயல் நாடுகளின் விமான நிறுவனங்களுடன் உடன்படிக்கைகள் பலவற்றை மேற்கொள்ள எதிர்பார்க்கிறது. பாகிஸ்தான் சர்வதேச விமான நிறுவனத்துடனான நெருங்கிய ஒத்துழைப்பானது, அதன் வலையமைப்பினை விரிவாக்குவது தொடர்பில் அதன் குறியீட்டுப் பகிர்வுத் தொழிற்பாடுகளை அனுமதிக்கும் விதத்தில் அந்நாட்டின் பல நகரங்களுக்கும் சேவையாற்றுவதற்கு சிறிலங்கன் நம்பிக்கை கொண்டுள்ளது.

எயார்லையினின் பிரதான பங்குடமையாளரான இலங்கை அரசாங்கம் எயார்லையினை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக அரச தனியார் பங்குடமைக்குள் நுழைவதற்கு விருப்பமுடைய தரப்பினரிடமிருந்து ஆர்வத்தினை வெளிப்படுத்துமாறு கேட்டுக் கொண்டிருக்கிறது. இச்செயன்முறையில் முகாமைத்துவம் நேரயொக ஈடுபாடு கொள்ளாத அதேவேளை இந்நிதியியல் ஆண்டு முடிவடைவதற்கு அணித்தாக அரச தனியார் பங்குடமை நடவடிக்கை நிறைவடைந்துவிடும் என்பதனை நாம் விளங்கிக் கொள்ளக்கூடியவர்களாக இருக்கின்றோம். இது எயார்லையினுக்கு இன்னொரு “யுகம்” ஆரம்பமாவதற்கான சமிக்ஞையாக இருக்குமென்பதுடன், விரைந்ததொரு குறிக்கோளாக இதனை அடையுமிடத்து அது சிறிலங்கனுக்கு உண்மையில் நீடித்துநிலைத்திருக்கும் ஆற்றல் வாய்ந்ததொன்றாக அமையும்.

# நிதியியல் அறிக்கைகள்


| | |
|---|---|
| பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை | 33 |
| சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 37 |
| பணிப்பாளர்களின் பொறுப்பாண்மைக் கூற்றுக்கள் | 38 |
| சுயாதீனமான கணக்காய்வாளர் அறிக்கை | 39 |
| கணக்காய்வாளர் நாயகத்தின் சுயாதீனமான கணக்காய்வாளர் அறிக்கை | 40 |
| இலாபம் அல்லது நட்டக் கூற்று | 41 |
| அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று | 42 |
| பங்குரிமை மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று | 43 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 44 |
| நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | 45 |

சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் பணிப்பாளர் சபை 2016 மாச்சு 31ஆம் நாள் முடிவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறது.

## பிரதான நடவடிக்கைகளும் வியாபார மீளாய்வும்

கம்பனியின் முக்கியமான வியாபார நடவடிக்கைகள் யாதெனில், இலங்கையின் குறித்துரைக்கப்பட்ட விமானப் போக்குவரத்து துறை என்ற முறையில் பன்னாட்டுத் தொழிற்பாடுகள், பயணிகள், சரக்கு மற்றும் அஞ்சல் என்பனவற்றைக் கொண்டு செல்வதற்காக அட்டவணையிடப்பட்ட/அட்டவணையிடப்படாத விமானப் பணிகளை நடத்துவதேயாகும். கம்பனியின் ஏனைய முக்கிய நடவடிக்கைகளில் பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்திலும் மத்தள ராஜபக்' சர்வதேச விமானநிலையத்திலும் விமான முனைக்கோடிப் பணிகளை வழங்குதல், விமானங்களில் தீர்வையற்ற பொருட்களை விற்பனை செய்தல், நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயுமான விடுமுறைப் பொதிகளைச் சந்தைப்படுத்தல் என்பனவும் உள்ளடக்கியிருந்தன. மூன்றாந்தரப்பு பேணலை வழங்குதல், பறப்புத் தொழிற்பாட்டு பணிகளின் ஏற்பாடு மற்றும் வான் போக்குவரத்து தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் என்பன கம்பனியின் துணை நடவடிக்கைகளில் அடங்கியிருந்தன.

இந்நிதியியல் ஆண்டுப் பகுதியில் கம்பனியின் நடவடிக்கைத் தன்மைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களெதுவும் காணப்படவில்லை.

குழுமமானது கம்பனியினையும் அதற்கு முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனமான சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட் என்பனவற்றை உள்ளடக்கியிருந்ததுடன் இதன் முக்கிய நடவடிக்கையாக இலங்கை கட்டுநாயக்காவிலுள்ள பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தினூடாகவும் மத்தள ராஜபக்' சர்வதேச விமானநிலையத்தினூடாகவும் தொழிற்படுகின்ற விமான நிறுவனங்களுக்கு பறப்புக்களில் உணவுப் பரிமாறல் வசதிகளை வழங்குவதும் காணப்படுகின்றது. ஏனைய துணை நடவடிக்கைகள், பொதுமக்கள் மற்றும் மாறிச் செல்லும் பயணிகளுக்காக உணவகங்களை தொழிற்படுத்தல், சலவைப் பணிகளுக்கான ஏற்பாடுகள் மற்றும் மாறிச் செல்லும் பயணிகளுக்கான சுற்றுலா விடுதிகளை முகாமைப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

## நிதியியல் கூற்றுக்களும் கணக்காய்வாளர் அறிக்கையும்

2016 மாச்சு 31ஆம் நாள் முடிவடைந்த ஆண்டிற்கான குழுமத்தின் முதன்மை நிதி மற்றும் நிருவாக அலுவலரினாலும் இரண்டு பணிப்பாளர்களினாலும் சரியான முறையில் கையொப்பமிடப்பட்ட முழுமையான நிதியியல் கூற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் சுயாதீனமான கணக்காய்வாளர் அறிக்கையும் இவ்வறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளன.

## கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதியியல் கூற்றுக்களைக் தயாரிக்கையில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் 45 இலிருந்து 53 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

## குழுமத்தின் மொத்தப் புரள்வு

குழுமத்தின் மொத்தப் புரள்வு ரூ. 132,198 மில்லியனாகக் (2014/15இல் ரூ. 134,316 மில்லியன்) காணப்பட்டது. குழுமத்தின் மொத்தப் புரள்வு தொடர்பான விபரமானதொரு பகுப்பாய்வு நிதியியல் கூற்றின் குறிப்பு 19இல் தரப்பட்டுள்ளது.

கம்பனிக்கும் அதற்கு முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனமான சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்டிற்குமிடையிலான கொடுக்கல்வாங்கல்கள் நியாயமான சந்தை விலைகளிலேயே மேற்கொள்ளப்பட்டன.

## பெறுபேறுகள்

விமானக் குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்வதற்கு முன்னரான குழுமத்தின் பற்றாக்குறை இல. ரூ. 9,525 மில்லியனாகவும் விமானக் குத்தகை உடன்படிக்கையில் இரத்து தொடர்பான இழப்பீட்டிற்கு இல. ரூ. 2,562 மில்லியன் கொண்ட சீராக்கத்திற்குப் பின்னரும் வரிக்கு முன்னரான, தொகை இல. ரூ. 12,087 மில்லியன் கொண்ட பற்றாக்குறை (2014/15 - குழுமப் பற்றாக்குறை இல. ரூ. 16,255 மில்லியன்) வரிக்கான இல. ரூ. 3 மில்லியன் கொண்ட சீராக்கத்தின் பின்னர் (2014/15 - இல. ரூ. 75 மில்லியன்) ஆண்டிற்கான குழுமப் பெறுபேறு இல. ரூ. 12,084 மில்லியனாகக் காணப்பட்டது (2014/15 - குழுமப் பற்றாக்குறை இல. ரூ. 16,330 மில்லியன்).

ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டக் கூற்று பக்கம் 41இல் தரப்பட்டுள்ளது.

## குழுமத்தின் முதலீடு

சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் மீதான இவ்வாண்டிற்குரிய குழுமத்தின் மூலதனச் செலவினம் ரூ. 1,040 மில்லியனாகக் (2014/15: ரூ. 2,897 மில்லியன்) காணப்பட்டது.

## சொத்து, பொறி மற்றும் சாதனம்

அறிக்கையிடும் திகதியிலுள்ளவாறு குழுமத்தின் சொத்து, பொறி மற்றும் சாதனத்தின் தேறிய ஏட்டுப் பெறுமதி ரூ. 10,753 மில்லியனாகக் (2014/15: ரூ. 12,336 மில்லியன்) காணப்பட்டது. சொத்து, பொறி மற்றும் சாதனம் மற்றும் அவற்றின் அசைவுகளின் விபரங்கள் நிதியியல் கூற்றுக்களின் குறிப்பு 3இல் தரப்பட்டுள்ளது.

## கூறப்பட்ட மூலதனம்

கம்பனியின் கூறப்பட்ட மூலதனம் ரூ. 51,617 மில்லியனாக (2014/15: ரூ. 51,617 மில்லியன்) காணப்பட்டது.

## ஒதுக்குகள்

2016 மாச்சு 31ஆம் திகதியிலுள்ளவாறான குழுமத்தின் மொத்த ஒதுக்குகள் எதிர்க்கணியமான ரூ. 132,065 மில்லியனாக (2014/15: எதிர்க்கணியமான ரூ. 118,910 மில்லியன்) காணப்பட்டது. இது, ரூ. 135,585 மில்லியன் கொண்ட ஒன்றுசேர்ந்த இழப்புக்கள், (2014/15: ரூ. 123,266 மில்லியன்) ரூ. 3,521 மில்லியன் (2014/15: ரூ. 4,355 மில்லியன்) கொண்ட மூலதன ஒதுக்கங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இவ்வொதுக்கங்களின் அசைவுகள் நிதியியல் கூற்றுக்களிலுள்ள பங்குரிமை மூலதனங்களில் காணப்படும் மாற்றங்களினது கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

## கம்பனி நன்கொடைகள்

குழுமம் இவ்வாண்டில் ரூ. 1.38 மில்லியன் (2014/2105: 3.65 மில்லியன்) கொண்ட நன்கொடையினை வழங்கியுள்ளது.

## வரி விதிப்பு

இலங்கை முதலீட்டுச் சபையுடனான உடன்படிக்கையின் நியதிகளின்படி, கம்பனி 2015 மாச்சு 31ஆம் நாள் வரை வரி விடுப்பினை அனுபவித்தது. 2011ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்நாட்டரசிறை (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2021 மாச்சு 31ஆம் நாள் வரை கம்பனி அதன் அனைத்து வியாபார நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்பட்டிருக்கிறது.

தற்பொழுது இரட்டை வரி விதிப்பு உடன்படிக்கைகள் இல்லாத நாடுகளில் கம்பனி மேற்கொள்ளும் கடல் கடந்த தொழிற்பாடுகளின் மீது வரி செலுத்துவதற்கு கம்பனி பொறுப்புடையதாகும்.

முழுமையாகச் சொந்தமான துணைக் கம்பனியான சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்டினைப் பொறுத்தவரை, இலங்கை முதலீட்டுச் சபையுடனான உடன்படிக்கையின் நியதிகளின்படி விமானங்களின் சமயலறை மற்றும் மாறிச் செல்லும் பயணிகளுக்கான உணவகங்களிலிருந்து கிடைத்த வருமானத்திற்கு 2006 யூலை 1ஆம் நாளிலிருந்து வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டது. மற்றைய மூலங்களிலிருந்து கிடைத்த வருமானம் தற்போது நிலவும் வரி வீதங்களில் வரி செலுத்துவதற்குட்பட்டதாகும்.

## பங்குத் தகவல்கள்

2016 மாச்சு 31இல் உள்ளவாறான பங்குத் தகவல்கள் வருமாறு:

| பங்குடமைகள் | பங்குகளின் எண்ணிக்கை | உடமைகளின் வீதம் |
|---|---|---|
| இலங்கை அரசு | 511,574,169 | 99.11 |
| ஊழியர் சேம நிதியம் | 1,863,676 | 0.36 |
| ஏனையவை | 2,736,510 | 0.53 |

## சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கிச் செல்லும் தன்மை

கம்பனியானது ஏற்புடைத்தான சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் எல்லா நேரங்களிலும் இணங்கிச் செல்வதனை உறுதிப்படுத்தியிருக்கிறது. கணக்காய்வுக் குழுவின் தொடர்பான சபைகளின் காலாண்டுக் கூட்டங்களில் முறைப்பாடுகளையும் முறைப்பாடுகள் தொடர்பான அறிக்கைகளையும் சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவ அலுவலர்கள் பொறுப்பாக இருந்தனர்.

## தொடர்பான தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள்

தொடர்பான தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள் நிதியியல் கூற்றுக்களின் குறிப்பு 27இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் மூலதனக் கடப்பாடுகள்

2016 மாச்சு 31ஆம் நாளன்று உள்ளவாறான எதிர்பாராத பொறுப்புக்களும் அந்த நாளன்று உள்ளவாறான மூலதனச் செலவினத்தில் செய்யப்பட்ட கடப்பாடுகளும் நிதியியல் கூற்றுக்களின் குறிப்பு 24இல் தரப்பட்டுள்ளன.

அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் ஏற்படுகின்ற நிகழ்வுகள் நிதியியல் கூற்றுக்களுக்கான 26ஆம் குறிப்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் தவிர, சீராக்கத்தினை அல்லது வெளிப்படுத்துகையினைத் தேவைப்படுத்துகின்ற எந்தவொரு நிகழ்வும் அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் ஏற்படவில்லை.

## மனித வளங்கள்/தொழில்நிலைக் கொள்கைகள்

கம்பனியானது, கம்பனியின் எதிர்கால வெற்றிகளுக்குத் தேவையான தேர்ச்சியையும் அறிவையும் ஊழியர்கள் அபிவிருத்தி செய்திருக்கின்றனர் என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் மனித வளங்களில் தொடர்ந்தும் முதலீடுகளை மேற்கொண்டதுடன் புதிய வியாபார முன்னுரிமைகளுடன் இணைந்து செல்லும் விதத்தில் காத்திரமான தொழிற்பாட்டினையும் நடைமுறைப்படுத்தியது.

தனிப்பட்டவர்களைப் பொறுத்தவரையில் குழுமத்தின் தொழில்நிலைக் கொள்கையானது பால், இனம் அல்லது சமயம் என்பனவற்றைக் கருத்திற்கொள்ளாது சமமான தொழில் வாய்ப்புக்களை வழங்குவதேயாகும். தொழில் ரீதியான சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நியமங்கள் கணிசமானளவு கவனத்தினைப் பெற்றுள்ளன.

ஆண்டின் இறுதியில் கம்பனியில் தொழில்புரிந்த ஆட்களின் எண்ணிக்கை 6,959 ஆகக் காணப்பட்டதுடன் (2014/15 - 6,987) மற்றும் துணை நிறுவனத்தின் தொழில்புரிந்த ஆட்களின் எண்ணிக்கை 902 (2014/15 - 886)

## சட்ட ரீதியான கொடுப்பனவுகள்

பணிப்பாளர்களது சிறந்த அறிவு மற்றும் நம்பிக்கை என்பனவற்றின்படி, ஊழியர்கள் மற்றும் இலங்கை அரசாங்கம் தொடர்பான அனைத்துச் சட்ட ரீதியான கொடுப்பனவுகளும் நாளது வரை சரியான முறையில் செலுத்தப்பட்டிருக்கின்றன என திருப்திபடுகின்றனர்.

## சுற்றாடல் பாதுகாப்பு

குழுமத்தின் வியாபார நடவடிக்கைகள் சுற்றாடலின் மீது நேரடியானதும் மறைமுகமானதுமான தாக்கங்களை கொண்டிருக்க முடியும். சுற்றாடலின் மீதான மோசமான தாக்கத்தினை இயன்றவரை குறைப்பதும் தொடர்பான அதிகாரசபைகளுடனான ஒத்துழைப்பினை ஊக்குவித்து ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி நடப்பதுமே குழுமத்தின் கொள்கையாகவுள்ளது.

## கம்பனி ஆளுகை/உள்ளகக் கட்டுப்பாடு

இன்றைய கம்பனி உலகில் சிறந்த ஆளுகை நடைமுறைகளைப் பின்பற்றுவது மிக இன்றியமையாததொரு தேவைப்பாடாக மாறியிருக்கிறது.

பணிப்பாளர்கள், குழும முறைமையின் உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கான அவர்களின் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். முறைமையானது உத்தரவாதங்களை வழங்குதல், மற்றைய விடயங்கள், சொத்துக்களின் மீதான பாதுகாப்பு, சரியான கணக்கீட்டு பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் தயாரிக்கப்பட்ட நிதியியல் தகவல்களின் நம்பகத்தன்மை என்பனவற்றை வழங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. எனினும், எந்தவொரு முறைமையும் நியாயமான அளவிற்கு மாத்திரமே உத்தரவாதத்தினைக் கொண்டிருக்க முடியுமேயன்றி முழுமையான உத்தரவாதத்தினை கொண்டிருக்க முடியாது. தவறுகளும் ஒழுங்கீனங்களும் நியாயமானதொரு காலப்பகுதிக்குள் தடுக்கப்படுகின்றன அல்லது கண்டுபிடிக்கப்படுகின்றன. சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை இவ்வாண்டறிக்கையின் ஒரு பகுதியாக தரப்பட்டுள்ளது.

நிதியியல் கூற்றுக்கள் கையொப்பமிடப்பட்ட நாளது வரையான காலப்பகுதியில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை காத்திரமான முறையில் தொழிற்பட்டமையையிட்டு சபை திருப்தியடைந்திருக்கிறது.

## தொடர்ந்து செல்லும் கரிசனைகள்

பணிப்பாளர்களின் பொறுப்பாண்மைக் கூற்றில் தெரிவிக்கப்பட்டவாறு, நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது பணிப்பாளர்கள் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு அடிப்படையினைப் பின்பற்றியிருக்கின்றனர்.

## பணிப்பாளர் சபை

கம்பனியின் அமைப்பு அகவிதிகளின் 79ஆவது உறுப்புரைக்கிணங்க, அனைத்துப் பணிப்பாளர்களும் இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டு அறிக்கையிடும் நாளன்று பதவியிலிருந்தனர். இவர்கள் பற்றிய விபரமான குறிப்புக்கள் ஆண்டறிக்கையில் பக்கங்கள் 9 இலிருந்து 10 வரை தரப்பட்டுள்ளன. பணிப்பாளர்கள் எல்லோரும் நிறைவேற்றுத் தரமல்லாப் பணிப்பாளர்களும்.

திரு. அஜித் என். டயஸ், தலைவர்
திரு. ஜே. எம். எஸ். பிறிட்டோ
திரு. ஆர். சானக டி. த சில்வா
திரு. மகிந்த பி. ஹரதாச
திரு. றக்கித்த எஸ். ஜெயவர்த்தன
லெப்டினன் கேர்ணல் சுனில் டி. பீரிஸ்
திரு. ஹரீந்திரா கே. பாலபட்டபெந்தி
திரு. என். ஜே. த சில்வா தேவா ஆதித்யா

கம்பனியின் உள்ளக விதிகளின் உறுப்புரை 86இன் உறுப்புரைகளின் நியதிகளில் திரு. றக்கித்த எஸ். ஜெயவர்த்தன 10.03.2015 இலிருந்து 14.10.2015 வரையான காலப்பகுதிக்கு தற்காலிக முதன்மை நிறைவேற்றுப் பணிப்பாளராக பணியாற்றினார்.

லெப்டினட் கேணல் சுனில் டி. பீரிஸ் 01.05.2015 இலிருந்து 31.10.2015 வரையான காலப்பகுதிக்கு மனிதவள நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

## 70 வயதிற்கு மேற்பட்டவர்களை பணிப்பாளர்களாக நியமித்தல்

பணிப்பாளர் சபையின் விதந்துரைப்பினைத் தொடர்ந்து, 70 வயதிற்கு மேற்பட்ட திரு. ஆர். சானக. டி. த சில்வா ஆண்டு பொதுக்கூட்டம் முடிவடைந்ததிலிருந்து மேலும் ஓராண்டு காலப்பகுதிக்கு மீண்டும் கம்பனியின் பணிப்பாளராக நியமிக்கப்பட வேண்டுமெனவும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 210இல் குறித்துரைக்கப்பட்ட வயது எல்லை ஏற்புடைத்தாக இருக்காது எனவும் விதந்துரைக்கப்படுகிறது.

மேலும், எழுபது வயதிற்கு மேற்பட்ட திரு. கே. எம். எஸ். பிரிட்டோ ஆண்டுப் பொதுக் கூட்டம் முடிவடைந்ததிலிருந்து மேலும் ஓராண்டு காலப்பகுதிக்கு மீண்டும் கம்பனியின் பணிப்பாளராக நியமிக்கப்பட வேண்டுமெனவும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனியின் சட்டத்தின் பிரிவு 210இல் குறித்துரைக்கப்பட்ட வயதெல்லை ஏற்புடைத்தாக இருக்காது எனவும் விதந்துரைக்கப்படுகிறது.

## மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு

ஊதியக் குழுவின் முக்கிய குறிக்கோள் யாதெனில் ஊதியக் கொள்கையினை விருத்தி செய்யும் விதத்திலும் ஊதிய அமைப்பொன்றினை உருவாக்கும் விதத்திலும் முறையானதும் வெளிப்படையானதுமான நடைமுறையொன்றினை உருவாக்க வழிவகுப்பதேயாகும்.

ஊதியக் கொள்கையானது சந்தை மற்றும் தொழில்துறைக் காரணிகள் மற்றும் அனைத்துக் குழுமக் கம்பனிகளிலும் தனிப்பட்ட செயலாற்றங்களின் அடிப்படையிலும் உருவாக்கப்பட்டிருக்கிறது.

ஊதியக் குழு ஒவ்வொரு காலாண்டுகளிலும் கூடுகிறது.

கம்பனியின் மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது.

லெப்டினன் கேர்ணல் சுனில் டி. பீரிஸ்/தலைவர்

திரு. ஜே. எம். எஸ். பிறிட்டோ
திரு. ஆர். சி. டி. த சில்வா
திரு. மகிந்த பி. ஹரதாச
திரு. றக்கித்த எஸ். ஜெயவர்த்தன

## கணக்காய்வுக் குழு உறுப்பினர்கள்

கம்பனியின் கணக்காய்வுக் குழு பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது.

திரு. ஜே. எம். எஸ். பிறிட்டோ, தலைவர்
திரு. ஆர். சி. டி. த சில்வா
திரு. மகிந்த பி. ஹரதாச
திரு. றக்கித்த எஸ். ஜெயவர்த்தன
லெப்டினன் கேர்ணல் சுனில் டி. பீரிஸ்

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை இவ்வாண்டறிக்கையின் 37 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

## கூட்டங்களுக்கு பணிப்பாளர்களின் வருகை

இந்நிதியியல் ஆண்டில் 11 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் கூட்டப்பட்டதுடன் அதில் கலந்து கொண்ட பணிப்பாளர்களின் வருகை பின்வருமாறு:

| பணிப்பாளர் | கலந்து கொண்ட கூட்டங்கள் (11இல்) |
|---|---|
| திரு. அஜித் என் டயஸ் | 11 |
| திரு. ஜே. எம். எஸ். பிறிட்டோ | 09 |
| திரு. ஆர். சி. டி. த சில்வா | 10 |
| திரு. மகிந்த பி. ஹரதாச | 08 |
| திரு. றக்கித்த எஸ். ஜெயவர்த்தன | 11 |
| லெப்டினன் கேர்ணல் சுனில் டி. பீரிஸ் | 09 |
| திரு. என். ஜே. த சில்வா தேவா ஆதித்யா | 09 |
| திரு. ஹரீந்திரா கே. பாலபட்டபெந்தி | 06 |

## பணிப்பாளர் சபை - சிறிலங்கன் கேட்டறிங்

சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்டின் பணிப்பாளர் சபை வருமாறு:

திரு. அஜித் என் டயஸ் - தலைவர்
திரு. ஜே. எம். எஸ். பிறிட்டோ - பணிப்பாளர்
திரு. ஆர். சி. டி. த சில்வா - பணிப்பாளர்
திரு. மகிந்த பி. ஹரதாச - பணிப்பாளர்
திரு. றக்கித்த எஸ். ஜெயவர்த்தன - பணிப்பாளர்
லெப்டினன் கேர்ணல் சுனில் டி. பீரிஸ் - பணிப்பாளர்

## பணிப்பாளர்களின் ஊதியம்

கம்பனியின் நிறைவேற்றுத் தரமல்லாப் பணிப்பாளர்களுக்குச் செலுத்தப்பட்ட ஊதியம் நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்பு 27இல் பக்கம் 75 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## பணிப்பாளர்களின் பங்குடமைகள்

அலுவலக அதிகாரங்களின்படி இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் திரு. ஜே. எம். எஸ். பிறிட்டோ உட்பட இரண்டு பணிப்பாளர்கள் கம்பனியின் 03 சாதாரண பங்குகளை வைத்திருக்கின்றனர்.

### நலவுரித்துக்களின் பதிவேடு

2007ஆம் ஆணடின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளை உறுதிப்படுத்தும் விதத்தில் கம்பனி, நலவுரித்துக்களின் பதிவேட்டினைப் பேணியது. கம்பனியின் அனைத்துப் பணிப்பாளர்களும் மற்றைய கம்பனிகளில் அவர்களுக்குள்ள நலவுரித்துக்களை பணிப்பாளர் சபைக்கு வெளிப்படுத்தியதுடன் அத்தகைய நலவுரித்துக்கள் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவுகள் 192(1) மற்றும் 192(2) என்பனவற்றை உறுதிப்படுத்தும் விதத்தில் பணிப்பாளர்களின் நலவுரித்துக்களின் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டது.

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு நலவுரித்துப் பதிவேடு பரிசோதனைக்குக் கிடைக்கத்தக்கதாக இருக்கும்.

### ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் நலவுரித்துக்கள்

பணிப்பாளர்கள் கம்பனியுடனான வேறு ஏதேனும் ஒப்பந்தங்களிலோ அல்லது முன்மொழியப்பட்டுள்ள ஒப்பந்தங்களிலோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எவ்வித நலவுரித்துக்களையும் கொண்டிருக்கவில்லை.

### ஆண்டுப் பொதுக்கூட்டம்

கம்பனியின் 38ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் இலங்கை பௌத்தலோக மாவத்தை, கொழும்பு 7இல் அமைந்துள்ள பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் “மிகிலக மேதுர” இல் 2017 பெப்புருவரி 09ஆம் நாள் புதன்கிழமை நடைபெறும்.

ஆண்டுப் பொதுக்கூட்டத்தின் அறிவித்தல் ஆண்டறிக்கையின் 86 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

### கணக்காய்வாளர்கள்

அரசியல் யாப்பிற்குச் செய்யப்பட்ட பத்தொன்பதாவது திருத்தத்தின் 36ஆவது திருத்தத்திற்கிணங்க கணக்காய்வாளர் நாயகம் இத்தால் கம்பனியின் கணக்காய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கணக்காய்வுக் கட்டணம் பற்றிய விபரங்கள் நிதியியல் கூற்றுக்கான குறிப்பு 21இல் தரப்பட்டுள்ளது. கணக்காய்வாளர்கள் (ஒரு கணக்காய்வாளர் தவிர) கம்பனியுடனோ அல்லது துணைக் கம்பனியுடனோ எவ்வித தொடர்புகளையும் கொண்டிருக்கவில்லை.

சபையின் சார்பில் கையொப்பமிடப்பட்டது,

**அஜித் என். டயஸ்**
பணிப்பாளர்

**ஜே. எம். எஸ். பிறிட்டோ**
பணிப்பாளர்
சபையின் சார்பில் கையொப்பமிடப்பட்டது

**தல்றின் திருக்குமார்**
கம்பனி செயலாளர்/கம்பனி செயலாளர் சேவைகளின் தலைவர்

2016 திசெம்பர் 22
கொழும்பு

### வகிபாகமும் பொறுப்புக்களும்

சிறிலங்கன் எயார்லையின்ஸ்சின் சபைக் கணக்காய்வுக் குழுவின் செயற்பரப்பும் பொறுப்புக்களும் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட சபைக் கணக்காய்வுப் பட்டயத்தின் மூலம் ஆளப்படுகின்றது. சபைக் கணக்காய்வுக் குழுவின் முக்கிய வகிபாகம் யாதெனில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் சுயாதீனமான மீளாய்வு, நிதியியல் அறிக்கையிடல் முறைமை, வியாபார இடர்நேர்வுகளை முகாமைப்படுத்தல், சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கிச் செல்வதனைக் கண்காணிப்பதற்கான கம்பனியின் செயன்முறை குழும உத்தரவாதம், மதியுரைப் பணிகளினது தொழிற்பாடுகளின் முகாமைத்துவம் மற்றும் வெளிவாரிக் கணக்காய்வாளர்களின் சுயாதீனம் என்பனவற்றை வழங்குவதன் மூலம் பணிப்பாளர் சபை அதன் கடமைகளை நிறைவேற்றுவதற்கு உதவுவதாகும்.

### அமைப்பும் கூட்டங்களும்

சபைக் கணக்காய்வுக் குழு நான்கு (5) உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்தது. 2016 மாச்சு 31இல் உள்ளவாறு சபையின் கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்களாக திரு. ஜே.எம்.எஸ். பிறிட்டோ (தலைவர்), திரு.ஆர்.சி.டி. த சில்வா (உறுப்பினர்), திரு. எம். ஹரதாச (உறுப்பினர்) மற்றும் லெப்டினன் கேர்ணல் சுனில் பீரிஸ் (உறுப்பினர்), திரு. ஆர். ஜெயவர்த்தன (உறுப்பினர்) ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

2016 மாச்சு 31இல் முடிவடைந்த நிதியியல் ஆண்டுப் பகுதியில் சபை கணக்காய்வுக் குழு மூன்று (3) கூட்டங்களை நடத்தியது. முகாமைத்துவ உறுப்பினர்கள், அழைப்பின் பேரில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக சபைக் கணக்காய்வுக் குழுவிற்கு விளக்கமளிப்பதற்காக கலந்து கொண்டனர். மேலும், சபைக் கணக்காய்வுக் குழு வெளிவாரிக் கணக்காய்வின் தன்மை, செயற்பரப்பு, அணுகுமுறை என்பன பற்றி தெரிந்து கொள்வதற்காகவும் நிதியியல் கூற்றுக்கள் மற்றும் முகாமைத்துவ அறிக்கைகள் பற்றி மீளாய்வு செய்வதற்காகவும் வெளிவாரிக் கணக்காய்வாளர்களான எர்னஸ்ட் அன்ட் யங்குடன் கூட்டங்களை நடத்தியது.

### குழும உத்தரவாதம் மற்றும் மதியுரைப் பணிகள்

சிறிலங்கன் எயார்லையின்ஸ்ஸின் குழும உத்தரவாதம் மற்றும் மதியுரைப் பணிகள் தொழிற்பாடு, சபைக் கணக்காய்வுக் குழுவிற்கு நேரடியாக அறிக்கையளிக்கிறது. குழும உத்தரவாதம் மற்றும் மதியுரைப் பணிகள், தகவல் முறைமை/தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாடுகள் உட்பட உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதுமானதன்மை, வினைத்திறன் மற்றும் காத்திரமான தன்மை என்பன பற்றி சயாதீனமானதும் குறிக்கோள் கொண்டதுமான மதிப்பீடுகளை வழங்கியதுடன் தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துவதற்கும் வசதியளித்தது. குழும உத்தரவாதம் மற்றும் மதியுரைப் பணிகள், தடங்கலற்ற வியாபார முகாமைத்துவ முறைமை தொடர்பிலும் முகாமைத்துவத்திற்கு மதியுரைப் பணிகளை வழங்கியது.

### நிதியியல் ஆண்டில் சபைக் கணக்காய்வுக் குழுவின் முக்கிய நடவடிக்கைகள்

- தகவல் முறைமை/தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாட்டு முறைமை வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் உட்பட கண்டறியப்பட்ட கணக்காய்வு விடயங்களையும் கணக்காய்வு விதந்துரைப்புக்களின் நிலை என்பனவற்றையும் மீளாய்வு செய்தது.
- வியாபார இடர்நேர்வுகளின் தாக்கத்தினைத் தணிப்பதற்காக முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட முக்கிய கம்பனி மட்ட இடர்நேர்வுகள் மற்றும் நடைமுறைகளை மீளாய்வு செய்தது.
- அனைத்துத் தொடர்பான சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் இணங்கியொழுகப்பட்டனவா என்பதனை தீர்மானிப்பதற்காக கம்பனியின் முறையீட்டுத் தகவல்கள் காலாண்டு அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டன.
- தொழில்துறை அலுவல்கள் திணைக்களம் மற்றும் நிதிப் பிரிவில் கட்டுப்பாடுகள் சிறந்த முறையில் பேணப்படும் நோக்கத்திற்காக பொது சேவைகள் நிருவாக கைநூல், பன்னாட்டுத் தொடர்புகள் கைநூல், உள்ளகத் தொடர்பு கைநூல், வர்த்தக ஊக்குவிப்பு கைநூல் மற்றும் நிதியியல் கணக்கீட்டு கைநூல் என்பனவற்றின் ஒப்புதலுக்காக மீளாய்வு செய்யப்பட்டு விதந்துரைக்கப்பட்டது.
- தடங்கலற்ற வியாபாரத் திட்டத்தின் நிலைமை மீளாய்வு செய்யப்பட்டதுடன், வியாபாரத் தடங்கல்கள்/அனர்த்தங்களிலிருந்து எழும் இடர்நேர்வுத் தாக்கங்களைக் குறைக்கும் பொருட்டு நன்கமைக்கப்பட்ட கட்டமைப்பொன்று ISO 22301 நியமங்களுக்கிணங்க சிறிலங்கன் எயார்லையின்ஸ்ஸில் நிறுவப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.
- உள்ளகக் கணக்காய்வின் சுயாதீனம் மற்றும் அதன் அறிக்கையிடுகின்ற கடப்பாடுகள் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்கள் உள்ளிட்ட, உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் மீளாய்வு செய்யப்பட்டன.
- வெளிவாரிக் கணக்காய்வு அறிக்கையின் பெறுபேறுகளும் எடுத்துக்காட்டப்பட்டுள்ள பிரச்சனைகளுக்கான முகாமைத்துவத்தின் பதிலிறுப்பும் மீளாய்வு செய்யப்பட்டன.



**ஜே. எம். எஸ். பிறிட்டோ**
தலைவர் - சபைக் கணக்காய்வுக் குழு

2016 திசெம்பர் 22
கொழும்பு

# பணிப்பாளர்களின் பொறுப்பாண்மைக் கூற்றுக்கள்

கம்பனியினதும் குழுமத்தினதும் நிதியியல் கூற்றுக்கள் தொடர்பான பணிப்பாளர்களின் பொறுப்பாண்மைகள், பக்கம் 39இல் காணப்படும் கணக்காய்வாளர்களின் பொறுப்புக்களிலிருந்தும் வேறுபடுகின்றன.

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் நிதியியல் ஆண்டின் முடிவிலுள்ளவாறு கம்பனியினதும் குழுமத்தினதும் விவகாரங்கள் தொடர்பான நோக்கில் உண்மையானதும் நியாயமானதுமான அம்சங்களை ஒவ்வொரு நிதியாண்டும் வழங்குகின்ற விதத்தில் நிதியியல் கூற்றுக்களையும் நிதியாண்டிற்கான கம்பனியினதும் குழுமத்தினதும் இலாப அல்லது நட்டக் கணக்கினைத் தயாரிக்க வேண்டும் என தேவைப்படுத்துகின்றது. நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் தெரிவு செய்யப்பட்டு தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்படுவதுடன் நியாயமானதும் முன்மதியுடையதுமான தீர்ப்புக்களும் மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்படுவதுடன் ஏற்புடைத்தான கணக்கீட்டு நியமங்களும் பின்பற்றப்பட்டிருக்கின்றன.

நிதியியல் கூற்றுக்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கவும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் தகவல்களை வழங்கும் விதத்திலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்துவதற்காக கம்பனியினதும் குழுமத்தினதும் நிதியியல் நிலைமையினை நியாயமான துல்லியத்துடன் வெளிப்படுத்தக்கூடிய விதத்தில் கம்பனியும் அதன் துணை நிறுவனமும் போதுமான கணக்கீட்டு பதிவேடுகளைப் பேணுகின்றமையை உறுதிப்படுத்துவது பணிப்பாளர்களின் பொறுப்பாக இருக்கின்றது. குழுமத்தின் சொத்துக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நியாயமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அத்தகைய கருத்திற்கிணங்க மோசடி மற்றும் ஏனைய ஒழுங்கீனங்களை தடைசெய்தல் மற்றும் கண்டுபிடிக்கும் நோக்குடன் உள்ளகக் கட்டுப்பாடுகளில் பொருத்தமான முறைமைகளை நிறுவுவது தொடர்பாக பொருத்தமான தன்மைகளைப் பேணுவதற்கும் அவர்கள் பொறுப்பாக இருக்கின்றனர்.

நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது பணிப்பாளர்கள் தொடர்ந்து செல்லும் கரிசனை அடிப்படையினைத் தொடர்ந்தும் பின்பற்றி வருகின்றனர். அரச தனியார் பங்குடமை வடிவில் கம்பனிக்காக முதலீட்டாளர்/கூட்டுப் பங்குடமையொன்றினைக் கவர்வதற்காக முன்மொழிவிற்கான கோரிக்கையை எடுத்துக்காட்டும் செயன்முறையினை ஆரம்பித்திருப்பதுடன் இலங்கை அரசாங்கம் 2016 திசெம்பர் 20ஆம் நாளிடப்பட்ட அமைச்சரவைப் ஒப்புதலின் மூலம், இலங்கை அரசாங்கம் 'தொடர்ந்து செல்லும் கரிசனை' அடிப்படையில் கம்பனி அதன் தொழிற்பாடுகளைத் தொடங்குவதற்கு நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்பு 2.1.2 இன் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு உத்தேச மீளமைத்தல் செயன்முறை முடியும் வரை தேவையான நிதியியல் ஆதரவு வழங்கப்படுமென்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பதனை பரிசீலனையில் கொண்டதன் பின்னர், பணிப்பளார்கள், தொழிற்பாடுகளைத் தொடங்குவதற்குப் போதுமான மூலவளங்களைக் குழுமம் கொண்டிருப்பதாகக் கருதினர்.

கணக்காய்வாளர்கள் நிதியியல் கூற்றுக்கள் பற்றிய அவர்களது கருத்தினை உருவாக்குவதற்கு இயலச்செய்வதற்கு எவை பொருத்தமானது என அவர்கள் கருதினார்களோ அவை எதுவாக இருப்பினும் அவற்றைப் பரிசோதனை செய்வதற்கு அனைத்து வாய்ப்புக்களும் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பணிப்பாளர்கள் மேற்கொண்டிருந்தனர்.

பணிப்பாளர்கள் அவர்களது சிறந்த அறிவுக்கெட்டிய வரையில், அறிக்கையிடும் திகதியிலுள்ளவாறு கம்பனியினதும் அதன் துணை நிறுவனத்தினதும் அனைத்து வரிகள், தீர்வைகள் மற்றும் நிதியியல் கடப்பாடுகள் அனைத்தும் நிதியியல் கூற்றுக்களின் பொருட்டு போதுமான விதத்தில் செலுத்தப்பட்டிருக்கின்றன என்பதனை உறுதிப்படுத்துகின்றனர்.

சபையின் கட்டளைப்படி



**தல்றின் திருக்குமார்**
கம்பனி செயலாளர்/கம்பனி செயலாளர் சேவைகளின் தலைவர்

2016 திசெம்பர் 22
கொழும்பு

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT


මගේ අංකය / எனது இல. / My No. ஏபீஏ/சீ/எஸ்எல்ஏஎல்/06/16/27 ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2016 திசெம்பர் 28

வ/ப ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் கம்பனியின் பங்குதாரர்களிற்கு

**வ/ப ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் கம்பனியின் 2016 மார்சு 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

வ/ப ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் கம்பனியினதும் கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2016 மாச்சு 31இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்ளிகதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யட்டன. இந்த கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமொன்று எனக்கு உதவியது.

**நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

**கணக்காய்வாளர் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குபோதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**அபிப்பிராயம்**

2016 மாச்சு 31இல் உள்ளவாறான தொகுதியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இலங்கை ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**வலியுறுத்தப்படுகின்ற விடயம்**

நடைமுறையாண்டில் கம்பனியானது ரூபா 141,080 மில்லியன் திரண்ட நட்டத்துடன் ரூபா 12,622 மில்லியன் நட்டமொன்றை பதிவுசெய்திருந்தது. மேலும், கம்பனியின் நடைமுறைப் பொறுப்புக்கள் அதன் நடைமுறைச் சொத்துக்களை ரூ. 73,433 மில்லியனால் விஞ்சியிருந்ததுடன் அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறு கம்பனியின் மொத்த உரிமைத்துவம், பாதகமான நிதி நிலைமை இருப்பதனை காண்பித்து ரூபா 87,781 மில்லியன் மறைப்பெறுமதிக்கு குறைவடைந்திருந்தது. இந்த நிலைமையின் முகாமைத்துவ மதிப்பீடு மற்றும் அதனை அணிக்கின்ற காரணிகள் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 2.1.2 இல் விளக்கப்படுகின்றன. இந்த விடயம் காரணமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படவில்லை.

**ஏனைய சட்ட மற்றும் பிரமான ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

அ. கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேலே குறிப்பிடப்பட்டவாறாகும்.

ஆ. எனது அபிப்பிராயமாவது:

- கணக்காய்வுக்குத் தேவைப்படுத்தப்பட்ட அனைத்துத் தகவல்களையும் விளக்கமளிப்புக்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளதுடன் எனது பரிசோதனைகளிலிருந்து இதுவரை கண்டறியப்பட்டவாறு, கம்பனியினால் பொருத்தமான கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தன,
- 2016 மாச்சு 31இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் காசுப்பாய்ச்சலும் இலங்கை கனக்கீடு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன, அத்துடன்
- கம்பனியினதும் தொகுதியினதும் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 151 மற்றும் 153 ஆம் பிரிவுகளின் தேவைப்பாடுகளுடன் இணங்குகின்றன.

**வலியுறுத்தப்படுகின்ற விடயம் - கம்பனி**

நடைமுறையாண்டில் கம்பனியானது ரூபா 141,080 மில்லியன் திரண்ட நட்டத்துடன் ரூபா 12,622 மில்லியன் நட்டமொன்றை பதிவுசெய்திருந்தது. மேலும், கம்பனியின் நடைமுறைப் பொறுப்புக்கள் அதன் நடைமுறைச் சொத்துக்களை ரூபா 73,433 மில்லியனால் விஞ்சியிந்ததுடன் அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறு கம்பனியின் மொத்த உரிமைத்துவம், பாதகமான நிதி நிலைமை இருப்பதனை காண்பித்து ரூபா 87,781 மில்லியன் மறைப்பெறுமதிக்கு குறைவடைந்திருந்தது. இந்த நிலைமையின் முகாமைத்துவ மதிப்பீடு மற்றும் அதனை தணிக்கின்ற காரணிகள் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 2.1.2 இல் விளக்கப்படுகின்றன. இந்த விடயம் காரணமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படவில்லை.

**பாராளுமன்றத்திற்கான அறிக்கை**

அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்திற்கான என்னுடைய அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும்.

**எச்.எம். காமினி விஜேசிங்ஹ**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி


අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

# நிதியியல் நிலைமைக்கூற்று

| 2016 மார்ச்சு 31இல் உள்ளவாறு | குறிப்பு | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| | | 2016 | 2015 | 2016 | 2015 |
| | | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். |
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | | |
| சொத்து, பொறி மற்றும் சாதனம் | 3 | 10,753.23 | 12,336.15 | 8,546.30 | 9,809.97 |
| விமானங்களின் வழங்கலுக்கு முன்னரான கொடுப்பனவு | 4 | 2,420.08 | 2,267.93 | 2,420.08 | 2,267.93 |
| விமானப் பேணல் ஒதுக்கு | 5 | 6,585.21 | 6,069.40 | 6,585.21 | 6,069.40 |
| விமானம் மற்றும் உதிரி எந்திர வைப்புக்கள் | | 4,973.99 | 3,366.81 | 4,973.99 | 3,366.81 |
| அருவச் சொத்து | 6 | 984.59 | 1,285.07 | 979.99 | 1,280.23 |
| முதலீடுகள் | 7 | 0.40 | 0.40 | 42.44 | 42.44 |
| | | 25,717.50 | 25,325.76 | 23,548.01 | 22,836.78 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| இருப்புக்கள் | 8 | 4,940.29 | 5,397.87 | 4,703.11 | 5,078.20 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவை | 9 | 14,292.69 | 32,818.75 | 13,221.65 | 32,114.66 |
| விமானப் பேணல் ஒதுக்கு | 5 | 3,612.16 | 6,209.96 | 3,612.16 | 6,209.96 |
| விமானம் மற்றும் உதிரி எந்திர வைப்புக்கள் | | 1,245.76 | 1,559.26 | 1,245.76 | 1,559.26 |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 10 | 4,270.59 | 4,846.70 | 4,045.61 | 4,759.41 |
| | | 28,361.49 | 50,832.54 | 26,828.29 | 49,721.49 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 54,078.99 | 76,158.30 | 50,376.30 | 72,558.27 |
| **பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | | | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்குகள்** | | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 11 | 51,617.44 | 51,617.44 | 51,617.44 | 51,617.44 |
| ஒதுக்குகள் | 12 | 3,520.86 | 4,355.27 | 1,680.97 | 2,514.89 |
| ஒன்றுசேர்ந்த இழப்பு | | (135,585.41) | (123,265.57) | (141,079.67) | (128,238.23) |
| **மொத்தப் பங்கு மூலதனம்** | | (80,447.11) | (67,292.86) | (87,781.26) | (74,105.90) |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | | | | |
| முன்னுரிமைப் பங்குகள் | 13 | 1,000.00 | 1,000.00 | – | – |
| வட்டியையுடைய பொறுப்புக்கள் | 14 | 27,904.67 | 35,707.81 | 27,904.67 | 35,692.91 |
| ஏனைய நீண்ட காலப் பொறுப்புக்கள் | 15 | 10,546.95 | 8,084.01 | 9,991.18 | 7,556.95 |
| | | 39,451.62 | 44,791.82 | 37,895.85 | 43,249.86 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| வண்டிகளின் முன்கூட்டிய விற்பனைகள் | 16 | 17,533.47 | 18,166.28 | 17,533.47 | 18,166.28 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவை | 17 | 37,659.40 | 39,922.28 | 42,859.15 | 44,699.86 |
| செலுத்தத்தக்க வருமான வரி | | 186.02 | 189.13 | 175.45 | 175.45 |
| வட்டியையுடைய பொறுப்புக்கள் | 14 | 39,695.59 | 40,381.65 | 39,693.64 | 40,372.72 |
| | | 95,074.48 | 98,659.34 | 100,261.71 | 103,414.31 |
| **மொத்தப் பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | | 54,078.99 | 76,158.30 | 50,376.30 | 72,558.27 |

இந்நிதியியல் கூற்றுக்கள் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

**லலித் விதான**
குழும பிரதான நிதி மற்றும் நிருவாக அலுவலர்

இந்நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்கும் பணிப்பாளர் சபையே பொறுப்பாக இருக்கின்றது. சபைக்காவும் சபையின் சார்பாகவும் பின்வருவோரினால் ஒப்பிடமிடப்படுகின்றது.:

**அஜித் என். டயஸ்**
பணிப்பாளர்

**ஜே. எம். எஸ். பிறிட்டோ**
பணிப்பாளர்

45 தொடக்கம் 80 வரையிலான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய பகுதிகளாக விளங்குகின்றன.

2016 திசெம்பர் 22
கொழும்பு

# இலாபம் அல்லது நட்டக் கூற்று

| 2016 மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டு | | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| | | 2016 | 2015 | 2016 | 2015 |
| | குறிப்பு | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். |
| **வருமானம்** | 19 | 132,198.31 | 134,316.22 | 129,480.41 | 131,922.13 |
| **செலவு** | | | | | |
| விமான எரிபொருள் செலவு | | (33,198.90) | (53,451.02) | (33,198.90) | (53,451.02) |
| ஊழியர் செலவு | | (11,790.83) | (10,186.63) | (10,693.32) | (9,213.90) |
| விமானம், பாதை மற்றும் பயணிகள் செலவுகள் | | (20,170.97) | (20,296.55) | (22,271.90) | (22,419.15) |
| குத்தகை விமானம் மீதான வாடகை | | (20,129.91) | (16,315.67) | (20,129.91) | (16,315.67) |
| விமானப் பேணல் மற்றும் பழுதுபார்த்தல் செலவு | | (14,515.22) | (11,932.41) | (14,515.22) | (11,987.94) |
| தேய்மானம்/பதிவழிப்பு | | (2,989.44) | (2,555.60) | (2,683.91) | (2,275.98) |
| விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரச் செலவு | | (11,314.97) | (11,828.85) | (11,314.97) | (11,773.32) |
| விமான ஓட்டிகளின் செலவு | | (11,538.80) | (10,643.54) | (11,538.80) | (10,643.54) |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவினங்கள் | | (10,462.96) | (8,683.22) | (10,848.25) | (7,902.84) |
| **தொழிற்பாட்டு இழப்பு** | 21 | (3,913.69) | (11,577.27) | (7,714.77) | (14,061.22) |
| ஏனைய வருமானம் மற்றும் நன்மைகள் | 20 | 364.86 | 292.47 | 3,505.98 | 2,525.59 |
| நிதி வருமானம் | 22.1 | 75.76 | 124.95 | 65.90 | 112.06 |
| நிதிச் செலவு | 22.2 | (6,051.93) | (5,094.68) | (5,917.25) | (5,009.46) |
| விமானக் குத்தகை உடன்படிக்கையினை இரத்துச் செய்வதற்கான இழப்பீடு | 17.1 | (2,561.55) | – | (2,561.55) | – |
| **வரி விதிப்பிற்கு முன்னைய இழப்பு** | | (12,086.55) | (16,254.53) | (12,621.69) | (16,433.03) |
| வருமான வரிச் செலவு | 23 | 2.93 | (75.37) | – | (61.63) |
| **ஆண்டிற்கான இழப்பு** | | (12,083.62) | (16,329.90) | (12,621.69) | (16,494.66) |

45 தொடக்கம் 80 வரையிலான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய பகுதிகளாக விளங்குகின்றன.

# அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று

| 2016 மார்ச்சு 31இல் முடிவடைந்த ஆண்டு | குறிப்பு | குழுமம் 2016 ரூ. மில். | குழுமம் 2015 ரூ. மில். | கம்பனி 2016 ரூ. மில். | கம்பனி 2015 ரூ. மில். |
|---|---|---|---|---|---|
| **ஆண்டிற்கான இழப்பு** | | (12,083.62) | (16,329.90) | (12,621.69) | (16,494.66) |
| **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/(இழப்பு)** | | | | | |
| **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/(இழப்பு) அடுத்துவந்த காலப்பகுதியில் இலாபம் அல்லது இழப்பிற்காக மீளவகைப்படுத்தப்பட்டவை (வரி நீங்கலாக)** | | | | | |
| ஓய்வூகால நன்மைக் கடப்பாடுகள் மீதான கணிக்கப்பட்ட இலாபம்/(இழப்பு) | 15.2 | (243.16) | (1,116.89) | (235.63) | (1,054.24) |
| சொத்து, பொறி மற்றும் கருவிகளின் மீள்மதிப்பீடு | | – | 1,906.85 | – | 663.95 |
| மீளவகைப்படுத்தப்பட்ட சொத்துக்களின் மீதான பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு | | – | (74.23) | – | – |
| | | (243.16) | 715.73 | (235.63) | (390.29) |
| **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/(இழப்பு) இலாபம் அல்லது அடுத்துவரும் காலப்பகுதியில் இழப்பிற்காக மீள்வகைப்படுத்தப்பட்டவை (வரி நீங்கலாக)** | | | | | |
| காசுப்பாய்ச்சல் பாதுகாப்பு மீதான தேறிய அசைவு | | (818.04) | – | (818.04) | – |
| | | (818.04) | – | (818.04) | – |
| **வரி நீங்கலாக, ஆண்டிற்கான மொத்த ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/(இழப்பு)** | | (1,061.20) | 715.73 | (1,053.67) | (390.29) |
| **வரி நீங்கலாக, ஆண்டிற்கான மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/(இழப்பு)** | | (13,144.82) | (15,614.17) | (13,675.36) | (16,884.95) |

45 தொடக்கம் 80 வரையிலான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய பகுதிகளாக விளங்குகின்றன.

| | குழுமம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | கூறப்பட்ட மூலதனம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கு | விற்பனை ஒதுக்குகளுக்காக கிடைக்கத் தக்கவை | வருமான ஒதுக்கு | பொது ஒதுக்கு | ஒன்றுசேர்ந்த இழப்புக்கள் | மொத்தம் |
| | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். |
| **2014 ஏப்பிறல் 1இல் உள்ளவாறான மீதி** | 51,617.44 | 2,522.65 | 0.63 | 53.44 | – | (105,872.85) | (51,678.69) |
| மாற்றல் செய்யப்பட்ட ஒதுக்குகள் | – | – | (0.63) | (53.44) | – | 54.07 | – |
| ஆண்டிற்கான இழப்பு | – | – | – | – | – | (16,329.90) | (16,329.90) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/(இழப்பு) | – | 1,832.62 | – | – | – | (1,116.89) | 715.73 |
| மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/(இழப்பு) | – | 1,832.62 | – | – | – | (17,446.79) | (15,614.17) |
| **2015 மாச்சு 31இல் உள்ளவாறான மீதி** | 51,617.44 | 4,355.27 | – | – | – | (123,265.57) | (67,292.86) |
| உயர் இலாப வரி மீதான சீராக்கம் (குறிப்பு 23.3) | – | – | – | – | – | (9.43) | (9.43) |
| ஆண்டிற்கான இழப்பு | – | – | – | – | – | (12,083.62) | (12,083.62) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/(இழப்பு) | – | – | – | – | (818.04) | (243.16) | (1,061.20) |
| மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/(இழப்பு) | – | – | – | – | (818.04) | (12,326.78) | (13,144.82) |
| இவ்வாண்டுப் பகுதியில் அகற்றல் காரணமாக மீள்மதிப்பீடு மீதான மாற்றல் | – | (16.37) | – | – | – | 16.37 | – |
| **2016 மாச்சு 31இல் உள்ளவாறு மீதி** | 51,617.44 | 4,338.90 | – | – | (818.04) | (135,585.41) | (80,447.11) |

| | கம்பனி | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | கூறப்பட்ட மூலதனம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கு | விற்பனை ஒதுக்குகளுக்காக கிடைக்கத் தக்கவை | வருமான ஒதுக்கு | பொது ஒதுக்கு | ஒன்றுசேர்ந்த இழப்புக்கள் | மொத்தம் |
| | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். |
| **2014 ஏப்பிறல் 1இல் உள்ளவாறான மீதி** | 51,617.44 | 1,850.94 | 0.63 | 53.44 | – | (110,743.40) | (57,220.95) |
| மாற்றல் செய்யப்பட்ட ஒதுக்குகள் | – | – | (0.63) | (53.44) | – | 54.07 | – |
| ஆண்டிற்கான இழப்பு | – | – | – | – | – | (16,494.66) | (16,494.66) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/(இழப்பு) | – | 663.95 | – | – | – | (1,054.24) | (390.29) |
| மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/(இழப்பு) | – | 663.95 | – | – | – | (17,548.90) | (16,884.95) |
| **2015 மாச்சு 31இல் உள்ளவாறான மீதி** | 51,617.44 | 2,514.89 | – | – | – | (128,238.23) | (74,105.90) |
| ஆண்டிற்கான இழப்பு | – | – | – | – | – | (12,621.69) | (12,621.69) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/(இழப்பு) | – | – | – | – | (818.04) | (235.63) | (1,053.67) |
| மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/(இழப்பு) | – | – | – | – | (818.04) | (12,857.32) | (13,657.36) |
| இவ்வாண்டுப் பகுதியில் அகற்றல் காரணமாக மீள்மதிப்பீடு மீதான மாற்றல் | – | (15.88) | – | – | – | 15.88 | – |
| **2016 மாச்சு 31இல் உள்ளவாறு மீதி** | 51,617.44 | 2,499.01 | – | – | (818.04) | (141,079.67) | (87,781.26) |

45 தொடக்கம் 80 வரையிலான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய பகுதிகளாக விளங்குகின்றன.

# காசுப்பாய்ச்சல் கூற்று

| 2016 மார்ச்சு 31இல் முடிவடைந்த ஆண்டு | | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| | | 2016 | 2015 | 2016 | 2015 |
| | குறிப்பு | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்தப்பட்ட) காசுப்பாய்ச்சல்** | | | | | |
| வருமான வரிச் செலவுகளுக்கு முன்னான இழப்பு | | (12,086.55) | (16,254.53) | (12,621.69) | (16,433.03) |
| பின்வருவனவற்றிற்கான சீராக்கங்கள் | | | | | |
| தேய்மானம்/பதிவழிப்பு/பெறுமதி இழப்பு | | 3,011.94 | 2,521.76 | 2,683.91 | 2,238.82 |
| நிதிச் செலவு | 22.2 | 6,051.93 | 5,094.68 | 5,917.25 | 5,009.46 |
| சொத்து, பொறி மற்றும் சாதனங்களின் விற்பனை மீதான இலாபம் மற்றும் அருவச் சொத்துக்கள் மீதான இழப்பு | | (6.71) | (5.08) | (7.04) | (2.47) |
| நிதி வருமானம் | 20 | – | – | (1,000.00) | – |
| பெறத்தக்க பெறுமதிக் குறைப்பிற்கான ஏற்பாடு | 22.1 | (75.76) | (124.95) | (65.90) | (112.06) |
| மெதுவாக அசையும் இருப்பிற்கான ஏற்பாடு | | 12.80 | 230.32 | 11.81 | 225.55 |
| பேணல் ஒதுக்குகளின் பெறுமதி குறைப்பிற்கான ஏற்பாடு | 8.1 | 549.42 | 279.85 | 544.73 | 264.83 |
| தேறல் செய்யப்படாத செலாவணி (இலாபம்)/இழப்பு மீதான தாக்கம் | 5.2 | 3,631.23 | 4,024.42 | 3,631.23 | 4,024.42 |
| முன்கூட்டிய விற்பனைகளின் மீள்பதிவு | | 1,385.35 | 503.24 | 2,666.83 | 753.48 |
| முன்கூட்டிய மீண்டும் விற்பதற்கான உத்தரவாதம் | | (2,379.83) | (2,755.58) | (2,379.83) | (2,755.58) |
| பணிக் கொடைக்கான ஏற்பாடு | 15.2 | 792.49 | 591.36 | 718.69 | 528.54 |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னான தொழிற்பாட்டு இழப்பு** | | 886.31 | (5,894.51) | 99.99 | (6,258.05) |
| இருப்புக்களின் அதிகரிப்பு/(வீழ்ச்சி) | | (91.85) | (637.50) | (169.64) | (593.29) |
| ஊர்திகளின் முன்கூட்டிய விற்பனையில் ஏற்பட்ட அதிகரிப்பு | | 1,747.02 | 3,884.36 | 1,747.02 | 3,884.36 |
| வியாபாரம் மற்றும் ஏனைய பெறத்தத்தக்கவைகளில் (அதிகரிப்பு)/வீழ்ச்சி | | 2,965.38 | (3,390.28) | 3,326.03 | (3,813.59) |
| வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளில் அதிகரிப்பு/(வீழ்ச்சி) | | (3,188.00) | (1,461.62) | (4,049.95) | 43.91 |
| பேணல் ஒதுக்குகளில் (அதிகரிப்பு)/வீழ்ச்சி | | 2,062.01 | (4,498.15) | 2,062.01 | (4,498.15) |
| விமானப் பிணைய வைப்புக்களில் அதிகரிப்பு | | (1,259.02) | (1,155.50) | (1,259.02) | (1,155.50) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்தப்பட்ட) உருவாக்கப்பட்ட காசு** | | 3,121.85 | (13,153.20) | 1,756.44 | (12,390.31) |
| செலுத்தப்பட்ட நிதிச் செலவு | | (6,293.48) | (4,512.68) | (6,148.88) | (4,427.45) |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | 15.2 | (291.64) | (231.50) | (239.02) | (201.69) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | | (9.62) | (18.09) | – | – |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில்/பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்** | | (3,472.89) | (17,915.47) | (4,631.46) | (17,019.45) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில்/பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்** | | | | | |
| பெறப்பட்ட வட்டி | | 75.76 | 124.95 | 65.90 | 112.06 |
| சொத்து, பொறி மற்றும் சாதனங்களின் கொள்வனவு | | (1,129.04) | (1,977.32) | (1,102.69) | (1,893.30) |
| விமானங்களின் வழங்கலுக்கு முன்னரான கொடுப்பனவுகளிலிருந்தான தேறிய பெறுகைகள் | | 17,172.94 | 2,035.12 | 17,172.94 | 2,035.12 |
| அருவச் சொத்துக்களின் கையேற்பு | | (48.59) | (273.68) | (47.12) | (273.26) |
| சொத்து, பொறி மற்றும் சாதனங்களின் விற்பனையிலிருந்து கிடைத்த பெறுகைகள் | | 38.83 | 13.44 | 19.87 | 7.12 |
| முன்னுரிமைப் பங்குகளிலிருந்து மீட்டுக் கொள்ளப்பட்ட பெறுகைகள் | | – | – | 1,000.00 | – |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | | 16,109.90 | (77.49) | 17,108.90 | (12.26) |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்தப்பட்ட) காசுப்பாய்ச்சல்** | | | | | |
| வட்டி உழைக்கின்ற பொறுப்புக்களின் மீள்கொடுப்பனவு | | (32,560.79) | (24,032.91) | (32,538.91) | (24,983.43) |
| வட்டி உழைக்கும் கடன்கள் மற்றும் கடன்பாடுகளிலிருந்தான பெறுகைகள் | | 23,058.30 | 40,926.58 | 23,058.30 | 40,977.85 |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | | (9,502.49) | 16,893.65 | (9,480.61) | 15,994.42 |
| **காசு மற்றும் காசிற்கு சமமானவைகளில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/(வீழ்ச்சி)** | | 3,134.52 | (1,099.31) | 2,996.83 | (1,037.29) |
| **ஆண்டின் தொடக்கத்தில் காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்** | 10 | (3,518.42) | (2,419.11) | (3,605.71) | (2,568.42) |
| **ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்** | 10 | (383.90) | (3,518.42) | (608.88) | (3,605.71) |

45 தொடக்கம் 80 வரையிலான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய பகுதிகளாக விளங்குகின்றன.

## 1. கம்பனித் தகவல்கள்

### 1.1 பொது

**கம்பனி**

சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட் (கம்பனி) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு இலங்கையில் தொழிற்படும் கம்பனியாகும். கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் பிரதான வியாபாரத் தலமும் எயார்லையின்ஸ் நிலையம், பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கா, இலங்கை என்ற முகவரியில் அமைந்துள்ளது.

### 1.2 பிரதான நடவடிக்கைகளும் தொழிற்பாட்டின் தன்மையும்

**கம்பனி**

கம்பனியின் பிரதான நடவடிக்கைகள் பயணிகளின் போக்குவரத்திற்காக சர்வதேச ரீதியாக அட்டவணையிடப்பட்ட, அட்டவணையிடப்படாத வான் பணிகளைத் தொழிற்படுத்துதல், இலங்கைக்கான குறித்துரைக்கப்பட்ட போக்குவரத்து நிறுவனமாக சரக்கு மற்றும் அஞ்சல் பணிகளை மேற்கொள்ளுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது. பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்திலும் மத்தள ராஜபக்‘ சர்வதேச விமானநிலையத்திலும் வான் முனைக் கோடிப் பணிகளை வழங்குதல், விமானத்தில் தீர்வையற்ற பொருட்களின் விற்பனை, விடுமுறைக்கால உள்நாட்டு, வெளிநாட்டு பயண வசதிப் பொதிகளைச் சந்தைப்படுத்தல் என்பன ஏனைய முக்கிய பணிகளுக்குள் உள்ளடங்குகின்றன. மூன்றாம் தரப்பினருக்கு பராமரிப்புப் பணிகளை வழங்குதல், பறப்புத் தொழிற்பாட்டு பணிகள் மற்றும் விமானப் போக்குவரத்து தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் என்பன கம்பனியின் துணை நடவடிக்கைகளுள் அடங்குகின்றன.

**துணை நிறுவனம் - சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்**

சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்டின் பிரதான நடவடிக்கை யாதெனில் (“துணை நிறுவனம்”) பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தினூடாகவும் மத்தள ராஜபக்‘ சர்வதேச விமானநிலையத்தினூடாகவும் தொழிற்படுகின்ற விமான நிறுவனங்களுக்கு பறப்புக்களுக்குள்ளேயான உணவு வசதிகளை வழங்குவதாகும். மற்றைய துணை நடவடிக்கைகள் பொதுமக்கள் மற்றும் மாறிச் செல்லும் பயணிகளுக்காக உணவகங்களை நடத்துதல், சலவைப் பணிகளுக்கான ஏற்பாடுகள் மற்றும் மாறிச்செல்லும் பயணிகளுக்கான சுற்றுலாவிடுதியை முகாமைப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

### 1.3 வெளியிடுவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட திகதி

2016 மாச்சு 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்களை 2016 திசெம்பர் 22ஆம் திகதியில் இடம்பெற்ற பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கிணங்க வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டது.

## 2. பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 2.1 தயாரிப்பிற்கான அடிப்படை

சந்தைப் பெறுமதியில் மதிப்பிடப்பட்டிருக்கும் காணி, கட்டடம், விமான சமையலறைச் சாதனங்கள் தவிர்ந்த கம்பனியினதும் குழுமத்தினதும் நிதியியல் கூற்றுக்கள் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் வரலாற்று அடிப்படையிலான செலவில் தயாரிக்கப்பட்டுள்ளன.

வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டாலன்றி ஒன்றுதிரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளதுடன் அனைத்துப் பெறுமதிகளும் மில்லியன் ரூபாவிற்கு அணித்தான முழு எண்ணிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

#### 2.1.1 இணங்குவிப்பு கூற்று

கம்பனியினதும் குழுமத்தினதும் நிதியியல் கூற்றுக்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்டன. இந்நிதியங்களின் தயாரிப்பும் சமர்ப்பிப்பும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கும் இணங்க மேற்கொள்ளப்பட்டன.

#### 2.1.2 தொடர்ந்து செல்லும் கரிசனை

நடப்பாண்டு காலப்பகுதியில் கம்பனி ரூ. 12,621.69 மில்லியன் இழப்பினை (2015 - ரூ. 16,494.66 மில்லியன்) பதிவு செய்ததன் காரணமாக ரூ. 141,079.67 மில்லியன் (2015 - ரூ. 128,238.23 மில்லியன்) கொண்ட ஒன்றுசேர்ந்த இழப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. மேலும், கம்பனியின் நடைமுறைப் பொறுப்புக்கள் இதன் நடைமுறைச் சொத்துக்களை ரூ. 73,433.42 மில்லியனால் (2015 - ரூ. 53,692.82 மில்லியன்) விஞ்சியதுடன் அறிக்கையிடும் நாளன்று உள்ளவாறான கம்பனியின் மொத்தப் பங்குரிமை மூலதனம் ரூ. 87,781.26 மில்லியன் (2015 எதிர்க்கணியப் பெறுமதி ரூ. 74,105.90 மில்லியன்) கொண்ட எதிர்க்கணியப் பெறுமதிக்கு வீழ்ச்சியடைந்தது.

கம்பனியின் தேறிய இழப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016இல் 23 சதவீதத்தினாலும் 2015இல் 49 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக கடந்த இரண்டாண்டு காலப்பகுதியில் கம்பனியின் செயலாற்றம் குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பாடடைந்தது. ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் உலகளாவிய எரிபொருள் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி இம்மேம்பட்ட செயலாற்றத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு உதவியிருக்கின்றது. முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட உபாய முன்னெடுப்புக்கள் தொடர்ச்சியாக தாழ்ந்த எரிபொருள் விலைகளுடன் சேர்ந்து கம்பனியின் செயலாற்றத்தினை மேலும் மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், தொடர்ந்தும் இழப்புக்களை ஏற்படுத்திவரும் நிலைமை மற்றும் கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்காக நிதி தேவைப்படுகின்றமை என்பனவற்றின் காரணமாக இவ்வாண்டுப் பகுதியில் வங்கிப் படுகடனுக்கு பிணையிடும் பொருட்டு வசதிக் கடிதங்களின் ஏற்பாட்டினூடாக நிதியியல் ஆதரவிற்காக முக்கிய பங்குடமையாளரான இலங்கை அரசாங்கத்தின் ஆதரவில் தொடர்ந்தும் தங்கியிருக்க வேண்டியிருந்தது.

கம்பனியின் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் வலுப்படுத்தும் பொருட்டு இலங்கை அரசாங்கம் கம்பனிக்கான முதலீட்டாளர்/ கூட்டு பங்காளர்களைக் கவர்வதற்காக முன்மொழிவிற்கான கோரிக்கைகளினை எடுத்துக்காட்டும் செயன்முறையொன்றினை ஆரம்பித்திருப்பதுடன் கம்பனியின் பங்குரிமை மூலதனங்களையும் அரச தனியார் பங்குடமை வடிவத்தில் கம்பனியின் முகாமைத்துவத்தினைக் கட்டுப்படுத்தும் முறைகளையும் முன்வைத்திருக்கிறது. கம்பனியின் வலுவானதன்மை மற்றும் நன்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள வர்த்தக நாமம், இலங்கையின் தேசிய விமானப் போக்குவரத்தாளர் என்ற ரீதியில் தற்பொழுதுள்ள இருபுடை விமானச் சேவை உடன்படிக்கைகளைப் பயன்படுத்துவதற்கான இயலாற்றல் என்பன வெளிநாட்டு விமானநிலையங்களில் தரை இறக்குவதற்கு அதற்குள்ள உரிமை என்பனவற்றுடன் சேர்ந்து உபாயம் மிக்க முதலீட்டாளர்களுக்கு குறிப்பிடத்தக்க பெறுமானத்தினை உருவாக்கியிருக்கிறது. இலங்கை அரசாங்கம் 2016 திசெம்பர் 20ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை ஒப்புதலின் மூலமாக இலங்கை அரசாங்கம் முன்மொழியப்பட்ட மீளமைத்தல் செயன்முறை நிறைவடையும் வரை “தொடர்ந்து செல்லும் கரிசனை” ஒன்றாக கம்பனி அதன் தொழிற்பாடுகளைத் தொடர்வதற்குத் தேவையான நிதியியல் ஆதரவினை வழங்கும் என்பதனை உறுதிப்படுத்தியிருக்கிறது.

மேலும், முன்னைய நிதியியல் ஆண்டில் தொடங்கப்பட்ட உள்ளக வழிமுறைகள் தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அகன்ற உடலமைப்பினைக் கொண்ட விமானங்களைத் தேவைப்படுத்துவதும் இழப்புக்களை ஏற்படுத்துகின்றதுமான நீண்ட தூர வழித்தடம்களிலிருந்து வெளியேறுகின்றமை மற்றும் ஒடுங்கிய உடலமைப்பினைக் கொண்ட விமானங்களைப் பயன்படுத்துகின்ற குறுகிய தூர வழித்தடங்களின் மீது கூடியளவு கவனத்தினைச் செலுத்துதல் என்பனவற்றை உள்ளடக்கியதான வழித்தடம்களை ஒழுங்குமுறைப்படுத்தும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றுடன் சேர்த்து ஏனைய விமான நிறுவனங்களுக்கு மேலதிகமாகவுள்ள அகன்ற உடலமைப்பினைக் கொண்ட விமானங்களைக் குத்தகைக்குவிடுவதனை உள்ளடக்கிய புதிய வழித்தட அமைப்பிற்குப் பொருத்தமான விதத்தில் விமானத் தொகுதி மீளமைக்கப்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட செலவுக் குறைப்பு நிகழ்ச்சித்திட்டமும் திட்டமிடப்பட்டவாறு நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் அத்தகைய வழிமுறைகளின் நேர்க்கணிய நிதியியல் தாக்கத்தின் நன்மைகளும் தற்பொழுது கிடைக்கப் பெற்று வருகின்றன.

மேற்குறிப்பிட்ட மீளமைத்தல் முன்னெடுப்புக்களையும் இதன் தொழிற்பாடுகளைத் தொடரும் விதத்தில் நிதியியல் உதவிகளைத் தொடர்ந்தும் வழங்குவதற்கான இலங்கை அரசாங்கத்தின் உறுதியையும் பரிசீலனையில் கொண்ட பணிப்பாளர் சபையானது கம்பனி அதன் நிதியியல் நிலைமையினை முன்னேற்றித் தொடர்ந்து செல்லும் கரிசனைகளின் அடிப்படையைத் தொடர்ந்தும் தொழிற்படுத்தும் என்ற நம்பிக்கையினைக் கொண்டிருக்கிறது.

**2.1.3 ஒப்பீட்டு ரீதியான தகவல்கள்**

குழுமத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளும் மதிப்பீடுகளும் முன்னைய நிதியியல் ஆண்டுகளின் அத்தகைய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் மதிப்பீடுகளுடன் ஒத்துச்செல்வனவாகக் காணப்பட்டன.

நடப்பு ஆண்டின் சமர்ப்பித்தலை உறுதிப்படுத்தும் தேவை காணப்பட்ட போதெல்லாம் முன்னைய ஆண்டின் எண் தொகைகளும் கோட்பாடுகளும் மீளஒழுங்குபடுத்தப்பட்டன.

**2.2 ஒன்றுதிரட்டலுக்கான அடிப்படை**

ஒன்றுதிரட்டிய நிதியியல் கூற்றுக்கள், 2016 மாச்சு 31இல் உள்ளவாறு கம்பனியினதும் அதன் துணை நிறுவனத்தினதும் நிதியியல் கூற்றுக்களை உள்ளடக்கியுள்ளன. குழுமமானது வெளிக்காட்டப்படும் பொழுது அல்லது முதலீட்டினை மேற்கொண்டவரிடம் தொடர்பானவற்றிலிருந்தான வேறுபட்ட வருமானங்கள் மற்றும் முதலீட்டினைக் கொண்டவரிடமிருந்து அதன் அதிகாரத்தினூடாக அவ்வருமானத்தினைப் பெறக்கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கும் பொழுது அது உரிமையைக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, கம்பனியானது பின்வருவனவற்றை கொண்டிருந்தால் மட்டுமே முதலீட்டினை மேற்கொண்டவரைக் கட்டுப்படுத்த முடியும்.

- முதலீட்டைப் பெற்றவரைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் (அதாவது முதலீட்டைப் பெற்றவர் தொடர்பான நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதனை தற்பொழுது இயலச்செய்வதாக இருக்கும் ஏற்கனவேயுள்ள உரிமைகள்)
- முதலீட்டினைப் பெற்றவர்களுடன் இதற்குள்ள தொடர்பானவற்றிலிருந்து கிடைக்கின்ற பல்வேறு வருவாய்களுக்கான வெளிப்படுத்துகை அல்லது உரிமைகள்
- இதன் வருவாய்களினைப் பெறுவதற்காக முதலீட்டினைப் பெற்றவர்களை அதிகாரம் செய்யக்கூடிய விதத்தில் அதன் அதிகாரங்களைப் பயன்படுத்துல்

மூன்று அம்சங்களில் ஒன்றில் அல்லது கூடுதலானவற்றிற்கு மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான உண்மையான தன்மை அல்லது சூழ்நிலை ஏற்படுமிடத்து முதலீட்டினைப் பெற்றவரை கட்டுப்படுத்துவதா இல்லையா என்பது பற்றி மீளமதிப்பீடு செய்யும். துணை நிறுவனத்தினை குழுமம் கட்டுப்படுத்தும் போது துணை நிறுவனத்தின் திரட்சிப்படுத்தல் ஆரம்பமாவதுடன் துணை நிறுவனத்தின் கட்டுப்பாடுகளைக் கம்பனி இழக்கும் பொழுது அது நிறுத்தப்படுகிறது.

இலாபம் அல்லது நட்டம் மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் ஒவ்வொரு கூறும் கம்பனியின் பங்குரிமை மூலதன உடமையாளர்களுக்குரியதாகும். அவசியமான பொழுது துணை நிறுவனத்தின் நிதியியல் கூற்றுக்களை குழுமத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கிக் கொண்டு வருவதற்காக அதன் கணக்கீட்டுக் கொள்கைகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்து உள்ளகக் குழுமத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பங்குரிமை மூலதனம் செலவுகள் மற்றும் குழுமத்தின் உறுப்பினர்களிடையேயான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான காசுப்பாய்ச்சல்கள் என்பன திரட்சிப்படுத்தல் தொடர்பில் முழுமையாக நீக்கப்பட்டுள்ளன.

கட்டுப்பாடு இழக்கப்படாமல் துணை நிறுவனத்தின் சொத்துடமை ஈடுபாடுகளில் ஏற்படும் மாற்றமானது பங்குரிமை மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் போது கணக்கில் கொள்ளப்படுகிறது.

குழுமம் துணை நிறுவனத்தின் மீதான கட்டுப்பாட்டினை இழந்துவிடின், இது தொடர்பான சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் பங்குரிமையின் ஏனைய முக்கிய கூறுகளினை அங்கீகரிக்காமல் செய்யும் அதேவேளையில் ஏதேனும் தோன்றுகின்ற இலாபங்கள் அல்லது இழப்புக்கள் இலாபத்தில் அல்லது இழப்பில் அங்கீகரிக்கப்படுகின்றன. வைத்திருக்கப்படும் ஏதேனும் முதலீடு சந்தைப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன.

**2.3 குறிப்பிடத்தக்க கணக்கீட்டு மதிப்பீடுகளும் கருதுகோள்களும் தீர்வுகளும்**

குழுமத்தின் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு, அறிக்கையிடும் திகதியன்றுள்ள அறிவிக்கப்பட்ட சொத்துக்களின் தொகை, பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவு மற்றும் வெளிப்படுத்துகை என்பனவற்றைப் பாதிக்கும் தீர்ப்பு, மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்கள் என்பனவற்றை முகாமைத்துவம் பேணுவதனைத் தேவைப்படுத்துகின்றது. முக்கியமான தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் இணைந்த கருதுகோள்கள் தற்போதைய அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுவதுடன் சூழ்நிலைகளின் கீழ் நியாயமானது என நம்பப்படும் எதிர்பார்க்கப்படும் எதிர்காலச் சம்பவங்கள் உட்பட வரலாற்று ரீதியான அனுபவங்களையும் மற்றைய காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டிருந்தன.

விடயம் சார்ந்த மற்றைய விடயங்களிடையே பின்வரும் முக்கிய தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்கள் என்பன நிதியியல் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகைகளின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டுள்ளன.

**(அ) தீர்ப்புக்கள்**

**(i) தொடர்ந்து செல்லும் கரிசனை**

குறிப்பு 2.1.2 இல் வெளிப்படுத்தப்பட்டவாறு இந்நிதியியல் கூற்றுக்கள் தொடர்ந்து வரும் கரிசனைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**(ii) எதிர்பாராத பொறுப்புக்கள் - வழக்காடல்கள்**

நடப்பு நிதி ஆண்டின் முடிவில் குழுமம் குறிப்பு 24.3இல் வெளிப்படுத்தப்பட்டவாறு பல்வேறு தரப்பினருடனுமான பல்வேறுபட்ட வழக்குகளை நிலுவையில் வைத்திருந்தது. பணிப்பாளர் சபை கம்பனியின் சொலிசிஸ்டர்களுடன் மேற்கொண்ட தகுந்த ஆலோசனைகளின் பின்னர், ஒவ்வொரு வழக்கினதும் தகுதியினை மதிப்பிட்டு, எதிர்காலத்தில் மூலவளங்களின் வெளிப்பாய்ச்சலொன்று ஏற்படக்கூடிய சாத்தியமிருக்கும் என தீர்மானித்த பொழுது தேவையான ஒதுக்கங்களை மேற்கொண்டது.

**(iii) நிதி மற்றும் தொழிற்படுகின்ற குத்தகைகள்**

சொத்துடமையின் அனைத்து இடர்நேர்வுகளும் வெகுமதிகளும் கணிசமானளவிற்கு மாற்றல் செய்யப்படுகின்ற பொழுது குத்தகையொன்று நிதிக் குத்தகையென வகைப்படுத்தப்படுகிறது. பொருத்தமான வகைப்படுத்தலை தீர்மானிக்கையில், அதன் வடிவத்தினைவிட கொடுக்கல்வாங்கல்களின் அளவு பரிசீலனையில் கொள்ளப்படுகிறது. பரிசீலிக்கப்பட்ட காரணிகள் உள்ளடக்கப்பட்டனவெனினும் அவை பின்வருவனவற்றிற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. குத்தகைக் காலம் முடிவடைகையில் சொத்தின் உடமை குத்தகைத்தாரருக்கு மாற்றல் செய்யப்படுமாயின், அது நிறைவேற்றப்படும் நாளன்று உள்ள சந்தைப் பெறுமதியிலும் பார்க்கப் பெருமளவிற்குக் குறைவான விலையில் அச்சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் தேர்வினை குத்தகைக்காரர் கொண்டிருப்பார். குத்தகைக் காலம் சொத்தின் பொருளாதார ஆயுள் காலத்தில் பெரும்பகுதியைக் கொண்டதாக இருந்து உறுதி மாற்றல் செய்யப்படாதிருப்பினும் கூட, குத்தகையின் தொடக்கத்தில் குறைந்தபட்ச குத்தகைக் கொடுப்பனவின் தற்போதைய பெறுமதி குத்தகைக்குவிட்ட சொத்துக்களின் சந்தைப் பெறுமதியினைவிட கணிசமானளவு குறைவாகவே இருக்கும்.

**(ஆ) மதிப்பீடுகள்**

**(i) சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் மற்றும் அருவச் சொத்துக்கள் என்பனவற்றின் தேய்மானம்/பதிவழிப்பு**

சொத்துக்களின் எதிர்பார்க்கப்படும் பயன்பாடு மற்றும் அச்சொத்துக்கள் பொருளாதார ரீதியாக பயன்படும் காலம் என்பனவற்றின் அடிப்படையில் முகாமைத்துவம், சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் பயன்படக்கூடிய காலம் மற்றும் மீதிப் பெறுமதி என்பனவற்றை வழங்குகின்றது. ஒவ்வொரு ஐந்தொகை நாளன்றும் முகாமைத்துவம் எஞ்சிய பெறுமதிகள், பயன்மிக்க வாழ்நாள் காலம் மற்றும் தேய்மான முறை என்பனவற்றை மீளாய்வு செய்து முன்னைய மதிப்பீடுகள் மற்றும் இச்சொத்துக்களின் விடயங்களை செயன்முறைப்படுத்துகின்ற முன்னைய மதிப்பீடுகள் மற்றும் பொருளாதார நன்மைகளின் நுகர்வு மாதிரி என்பனவற்றுடன் ஒத்துச்செல்வதனையும் உறுதிப்படுத்தியது. பயனுள்ள வாழ்நாள் காலம் மற்றும் இச்சொத்துக்களின் மீதிப் பெறுமதி என்பனவற்றின் மாற்றங்கள் எதிர்கால தேய்மானத்தின் விதிப்புக்களில் மாற்றங்களை ஏற்படுத்தலாம். (கொள்கை 2.4.3 (ஆ) 2.4.4 இனைப் பார்க்கவும்).

**(ii) அடிக்கடிப் பறக்கும் பிளையர் நிகழ்ச்சித்திட்டம்**

வெகுமதி விருதுகள் வருமானக் கூற்றில் தனியாக அடையாளம் காணப்படுபவைகளாகவுள்ளன. வெகுமதி விருதுகளுக்கான தொகைகள் அவர்களது சந்தைப் பெறுமதியின் அடிப்படையாகக்

கொண்டிருந்ததுடன் நிதியியல் நிலைமையின் திரட்டப்பட்ட கூற்றில் பொறுப்பொன்றாக (பிற்போடப்பட்ட வருமானம்) கணக்கிடப்பட்டிருக்கின்றன.

மதிப்பீட்டு நுணுக்கங்கள், மைல்களின் வெகுமதிகளின் சந்தைப் பெறுமதியினைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதுடன் இது பல்வேறு காரணிகளின் அதாவது, துறையொன்றிற்கான கட்டணம், பறப்புக்களை தரமுயர்த்தல், பங்காளர்களின் வெகுமதி போன்றவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியினையும் பிரதிபலிக்கிறது. வரலாற்றியல் போக்கு சந்தைப் பெறுமதிக் கணிப்பிற்கான அடிப்படையாகப் பயன்படுத்தப்பட்டது.

மைல்களின் சந்தைப் பெறுமதிக்கான சீராக்கங்கள் உறுப்பினர்களினால் மீட்டுக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படாதவற்றிற்கும் காலாவதியான மைல்களுக்குமாகவும் மேற்கொள்ளப்பட்டன.

மைல்களின் சந்தைப் பெறுமதியினை நிர்ணயிப்பதற்கு பல்லின உள்ளீடுகள் பயன்படுத்தப்படுவதன் காரணமாக அவற்றைத் தீர்மானிக்கின்ற அளவொன்று முகாமைத்துவத்தினால் பின்பற்றப்படுகிறது.

**(iii) பராமரிப்பு ஒதுக்கு**

பராமரிப்புத் தொடர்பான இணங்கப்பட்ட நியதிகளின் அடிப்படையில், தொழிற்படுகின்ற குத்தகைகளின் கீழுள்ள பல்வேறு விமானங்கள் மற்றும் எந்திரங்களின் பேரில் கம்பனியானது குத்தகைக்காரர்களுக்கு கொடுப்பனவினைச் செய்கிறது. இம்மாதாந்த கொடுப்பனவுகள் பறக்கும் மணித்தியாலங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அறவிடத்தக்க தொகை தொடர்பான சிறந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் முகாமைத்துவம் அறவிடத்தக்க அத்தகைய கொடுப்பனவுகளை காலத்திற்குக் காலம் மதிப்பீடு செய்கிறது. சொத்தொன்றின் ஏட்டுப் பெறுமதித் தொகை அளவிடத்தக்க தொகையினைவிட விஞ்சும் பொழுது சொத்தின் பெறுமதி இழப்புக் கூடியது எனக் கருதப்படுவதுடன் அதன் அளவிடத்தக்க தொகைக்குப் பதிவழிப்பு செய்யப்படுகிறது. (குறிப்பு 5 இனைப் பார்க்கவும்)

**(iv) விமானங்களின் பேணல் மற்றும் பழுதுபார்த்தல் செலவுகளுக்கான ஏற்பாடு**

பேணல் தொடர்பாக இணங்கப்பட்ட நியதிகளின் அடிப்படையில் தொழிற்பாட்டு குத்தகைகளின் கீழுள்ள விமானத்தின் உடற்பாகம், எந்திரங்கள் மற்றும் தரையிறக்கங்கள் சாதனங்களை பாரிய பேணல் நடவடிக்கைகளுக்குட்படுத்தி பரிசோதிப்பது கம்பனியின் பாரிய கடப்பாடாகும். பாரிய பேணல் செலவிற்கான ஏற்பாடுகள் பறப்புக்களின் மணித்தியாலங்கள் அல்லது சுற்றுக்களின் எண்ணிக்கையினது அடிப்படையில் நிதியியல் கூற்றுக்களில் படிப்படியாக மேற்கொள்ளப்படுகின்றன. ஏற்பாடுகளை மேற்கொள்கின்ற பொழுது; பரீட்சிப்புக்களை மேற்கொள்கின்ற நேரத்தில் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட நிலையில் ஏற்படக்கூடிய பொருட்களினதும் பழுதுபார்த்தலினதும் செலவு, பரீட்சிப்புக்களை மேற்கொள்ளக்கூடிய நேரம் என்பன அனுமானத்தில் கொள்ளப்படுகின்றன. இந்த அனுமானங்கள் கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன் உண்மைக்கு அணித்தான தன்மைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கிரமமாக மீளாய்வு செய்து கொள்ளப்படுகின்றன. ஏற்பாடுகளின் மீது குறிப்பிடத்தக தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் அனுமானங்களிலும் மதிப்பீடுகளிலும் செய்யப்படும் ஏதேனும் திருத்தங்கள் நிதியியல் கூற்றுக்களில் சாத்தியமானளவிற்குச் சரியாக சீராக்கப்படும்.

**(V) நேரடித் தொழிற்பாட்டுச் செலவுகளுடன் தொடர்புபட்ட விமானப் போக்குவரத்துப் பணிகளுக்கான ஏற்பாடுகள்**

விமானப் போக்குவரத்துப் பணிகளின் தொழிற்பாடுகள் எரிபொருள், தரைக் கையாளல் கட்டணங்கள், தரையிறக்கல் மற்றும் தரிப்பிடக் கட்டணங்கள், பறப்புக்களுக்குள்ளேயான உணவு, ஆசன ஒதுக்கீட்டு முறைமைகளின் கட்டணம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான செலவினங்கள் போன்ற நேரடிச் செலவுகள் மீதான பல்வேறு ஏற்பாடுகளினைச் செய்வதுடன் தொடர்புபட்டனவாக இருப்பது தவிர்க்க முடியாததொன்றாகும். மதிப்பீடுகளும் அவற்றுடன் இணைந்த அனுமானங்களும் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் நியாயமானவையனெ நம்பப்படும் பல்வேறு காரணிகளின் அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் அவற்றின் பெறுபேறுகள் அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலுள்ளவாறு பொறுப்புக்களின் கொண்டு செல்லும் பெறுமதிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கான அடிப்படையினை உருவாக்குகின்றன.

**(vi) இருப்புக்கள்**

கம்பனி பூர்வாங்க இருப்புக் கணக்கெடுத்தல் அடிப்படையில் கம்பனி இருப்புக்களின் நிலைபேற்றுத்தன்மை மற்றும் பயன்படுத்தக்கூடிய தன்மை என்பனவற்றை மீளாய்வு செய்கிறது. பழைய இருப்பு அத்துடன்/அல்லது அறவிடத்தக்க பெறுமதியின் மதிப்பிடத்தக்க குறைப்பு பற்றி முகாமைத்துவம் தீர்மானிக்கும் பொழுது ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(vii) நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி இழக்கும் தன்மை**

குழுமமானது ஏதேனும் சொத்துக்கள் பெறுமதியிழக்கக்கூடிய அறிகுறிகள் எதனையாவது கொண்டிருக்கின்றனவா என்பதனை ஒவ்வொரு அறிக்கையிடும் நாளன்றும் மதிப்பீடு செய்கின்றது. அத்தகைய பெறுமதி இழப்பினை மதிப்பிடுவதற்கு முகாமைத்துவம் வெளிநின்ற காலப்பகுதியை பரிசீலனையில் கொள்வதுடன் ஏனைய ஏதேனும் காரணிகள் என்பது முகாமைத்துவ அறவிடல்களிலுள்ள நிச்சயமற்றதன்மையினை எடுத்துக்காட்டும்.

**(viii) நிதிச் சொத்துக்களின் பெறுமதி இழக்கும் தன்மை**

குழுமமானது ஏதேனும் சொத்துக்கள் அல்லது நிதிச் சொத்துக்களின் தொகுதி பெறுமதி இழக்கக்கூடியதாகவுள்ளது என்பதற்கு ஏதேனும் சான்று பொருட்கள் உள்ளனவா என்பது பற்றி ஒவ்வொரு அறிக்கையிடும் நாளன்றும் மதிப்பீடு செய்கிறது. முகாமைத்துவமானது அத்தகைய பெறுமதி இழப்புக்களை மதிப்பிடுவதற்கு அவை வெளிநின்ற காலப்பகுதியினையும் அறவிடல்கள் ஐயத்திற்குரியவை என்பதனை எடுத்துக்காட்டும் ஏனைய காரணிகளையும் பரிசீலனையில் கொண்டு அவற்றைப் பயன்படுத்துகிறது.

**(இ) கருதுகோள்கள்**

**(i) வரைவிலக்கணம் செய்யப்பட்ட நன்மைகள் திட்டம்**

இலங்கையிலுள்ள அலுவலர்களின் ஓய்வுகால நன்மைகள் திட்டத்தின் செலவு உண்மையான மதிப்பீட்டினைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. உண்மையான பெறுமதியானது வட்டி வீதம், சம்பள அதிகரிப்பு வீதம், சிறப்பு இலாபக் கட்டணம், ஓய்வு பெறும் வயது மற்றும் தற்பொழுது நடைபெற்று வரும் கம்பனியின் தொழிற்பாடு என்பனவற்றைக் கருத்திற் கொண்ட கருதுகோள்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. திட்டத்தின் நீண்டகாலத் தன்மை காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்களவு நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டனவாகவுள்ளன. (குறிப்பு 2.4.15 இனைப் பார்க்கவும்)

**(ii) சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் மீள்மதிப்பீடு**

சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள், சுதந்திரமான தகுதி வாய்ந்த மதிப்பிட்டாளரொருவரின் பணியினைப் பயன்படுத்தி மீள்மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் அறவிடப்படுகின்றன. அத்தகைய மதிப்பீட்டாளர் சந்தைப் பெறுமதியினைத் தீர்மானிப்பதற்கு கருதுகோள்களையும் மதிப்பீட்டு தொழில்நுட்பங்களையும் பயன்படுத்துகின்றார். மதிப்பீட்டிற்கான அடிப்படைக் குறிப்பு 3இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 2.4 குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் தொகுப்பு

### 2.4.1 வெளிநாட்டு நாணய மாற்று

நிதியியல் கூற்றுக்கள் கம்பனியின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயமான இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன. வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல்வாங்கல்கள், ஆரம்பத்தில் கொடுக்கல்வாங்கல் திகதியிலுள்ளவாறான தொழிற்பாட்டு நாணய வீதத்தில் பதிவு செய்யப்படுகின்றன. வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட நாணயச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஐந்தொகை நாளில் நிலவும் செலாவணியின் தொழிற்பாட்டு நாணய வீதத்தில் மீளமாற்றப்படுகின்றன. அதன் மூலம் தோன்றிய வெளிநாட்டுச் செலாவணி இலாபம் மற்றும் இழப்புக்கள் வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்று ரீதியான செலவின் நியதிகளில் அறவிடப்பட்ட நாணயமல்லா விடயங்கள் ஆரம்ப கொடுக்கல்வாங்கல் திகதியிலுள்ளவாறான செலாவணி வீதத்தினைப் பயன்படுத்தி மாற்றல் செய்யப்பட்டன.

**2.4.2 வரி விதிப்பு**

(i) நடைமுறை வருமான வரி

**கம்பனி**

**(அ) உள்ளூர் வரி விதிப்பு**

2011ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் மூலம் திருத்தப்பட்டவாறான 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கம்பனி அதன் வியாபார நடவடிக்கைகள் அனைத்திற்கும் 2011 ஏப்பிறல் 1இலிருந்து 2021 மாச்சு 31 வரையான 10 ஆண்டு காலப்பகுதிக்கு வரி விலக்கிற்கு உரித்துடையதாகும்.

**(ஆ) வெளிநாட்டு வரி விதிப்பு**

கம்பனி இரட்டை வரி விதிப்பு உடன்படிக்கைகள் இல்லாத நாடுகளில் மேற்கொள்கின்ற அதன் வெளிநாட்டுத் தொழிற்பாடுகளுக்கு வரி செலுத்துவதற்குப் பொறுப்புடையதாகும். எனினும், கம்பனிக்கு வரி இழப்புக்களை முன்கொண்டு செல்லத்தக்க வசதி கிடைக்கத்தக்கதாக இருப்பதனால் நடப்பாண்டில் வரி செலுத்தும் பொறுப்பு எதுவுமில்லை.

**துணை நிறுவனம் - சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்**

வருமான வரிச் செலவினம் நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரி இரண்டினையும் உள்ளடக்குகிறது. வருமான வரிச் செலவினம் என்பது பங்கு மூலதனத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பானவற்றின் அளவு வரையானவை தவிர்ந்த இலாபம் அல்லது இழப்பில் அங்கீகரிக்கப்படுகிறது. இவ்விடயத்தினைப் பொறுத்தவரை இது பங்கு மூலதனத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

நடைமுறை வரி என்பது ஆக்கப்பட்ட வரி வீதங்கள் அல்லது பின்னர் அறிக்கையிடும் திகதியில் ஆக்கப்பட்டவைகள் மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக செலுத்தப்படத்தக்க வரிக்கு செய்யப்பட்ட ஏதேனும் சீராக்கங்களைப் பயன்படுத்தி இவ்வாண்டிற்காக வரி விதிக்கத்தக்க வருமானத்தின் மீது செலுத்தப்பட வேண்டிய வரியாகும்.

முதலீட்டுச் சபையுடனான உடன்படிக்கையின்படி வானூர்திகளின் சமயலறை மற்றும் மாறிச்செல்லும் பயணிகளுக்கான உணவகம் என்பனவற்றிலிருந்தான வருமானங்களுக்கு 2021 மே 31ஆம் நாள் வரை விலக்களிக்கப்பட்டுள்ளது. ஏனைய மூலங்களிலிருந்தான வருமானம் வழமையான வரி வீதத்திற்கு உட்பட்டனவாகும்.

(ii) பிற்போடப்பட்ட வருமான வரி

பிற்போடப்பட்ட வருமான வரியானது, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரித்தளங்கள் மற்றும் நிதியியல் அறிக்கையிடல் நோக்கங்களுக்காக அவற்றின் ஏட்டுப் பெறுமதி என்பனவற்றிற்கிடையில் அறிக்கையிடும் திகதியன்று காணப்படும் தற்காலிக வேறுபாடுகளின் மீதான பொறுப்பு முறைகளைப் பயன்படுத்தி ஏற்பாடு செய்யப்படுகின்றது.

**2.4.3 சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள்**

(அ) கிரயம் மற்றும் மதிப்பீடு

சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் என்பன ஆரம்பத்தில் கிரயத்தில் பதிவு செய்யப்படுகின்றன. கிரயத்தினை உள்ளடக்கிய செலவினம் கொள்வனவில் உடனடியாக சேர்க்கப்படுகின்றன. சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்படுகையில் அத்தகைய மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் பின்னர் அவற்றின் மீது இடம்பெற்ற தேய்மானங்கள் மற்றும் பழுதுறும்தன்மை ஏதுமிருப்பின் அதனைக் கழித்து மீள்மதிப்பீட்டுத் தொகைக்கு கொண்டு செல்லப்படுகிறது. மற்றைய அனைத்துச் சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் தேய்மானங்கள் ஏதுமிருப்பின் அதனைக் கழித்த வரலாற்றுக் கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன.

ஒரு சொத்து மீள்மதிப்பிடப்படும் பொழுது, ஏதாவது மீள்மதிப்பு மிகையானது ஏனைய ஒன்றுசேர்ந்த வருமானத்தில் இனங்காணப்படுவதோடு, சொத்து மீள்மதிப்பு ஒதுக்கில் உரிமை மூலதனத்துடன் ஒன்றுசேர்க்கப்படும். எனினும், அதே சொத்தானது வருமானக் கூற்றில் முன்னர் இனங்காணப்பட்ட மீள்மதிப்பீட்டு குறைவை நேர மாற்றீடு செய்யும் சந்தர்ப்பத்தில், அதிகரிப்பானது வருமானக் கூற்றில் இனங்காணப்படும். மீள்மதிப்பு பற்றாக்குறையானது, இது சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கிலுள்ள அதே சொத்தின் ஏற்கனவேயிருக்கும் மிகையை எதிரீடு செய்யும் சந்தர்ப்பத்தைத் தவிர, மற்றைய சந்தர்ப்பங்களில் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் நியாயப் பெறுமதி ஏட்டுப் பெறுமதித் தொகையிலிருந்தும் பெருமளவிற்கு வேறுபடவில்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக மதிப்பீடுகள் போதுமானளவிற்கு அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றன. அதன் பின்னர் ஏற்படும் கிரயங்கள் இவ்விடயங்களுடன் இணைந்த எதிர்காலப் பொருளாதாரப் பயன்கள் கம்பனிக்கு பாய்வதற்கும் கிரயத்தினை நம்பகரமான முறையில் அறவிடத்தக்கதாகவும் இருக்கும் சாத்தியத்தில் மட்டும் பொருத்தமான விதத்தில் சொத்துக்களின் கொண்டு செல்லப்படும் தொகையில் அல்லது தனியானதொரு சொத்தாக உள்ளடக்கப்படுகின்றன.

பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்புச் செலவுகள் அவை உறப்பட்ட காலப்பகுதிக்குரிய வருமானக்கூற்றில் விதிக்கப்படுகின்றன.

சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் மற்றைய பல விடயங்களுடன் பின்வருவனவற்றையும் உள்ளடக்குகின்றன:

**(i) மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய விமான உதிரிப்பாகங்கள்**

உருவச் சொத்துக்களாக கருதப்படுகின்ற மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய விமான உதிரிப்பாகங்கள் ஆரம்பத்தில் கிரயத்தில் பதிவு செய்யப்படுவதுடன் மதிப்பிடப்பட்ட அதன் பயன்பாட்டு ஆயுள் காலப்பகுதியில் தேய்வடைகின்றது. இவ்விடயம் "விமானம் தொடர்பான சாதனங்கள்" என்ற தொகுதியின் கீழ் உள்ளடக்கப்படுகிறது.

**(ii) செயற்பாட்டிலுள்ள தொழிற்படு மூலதனம்**

செயற்பாட்டிலுள்ள தொழிற்படு மூலதனம் கிரயத்தில் காட்டப்படுவதுடன் இது கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்து அது ஆரம்பிக்கப்படும் நாள் வரையில் ஏற்பட்ட அனைத்துச் செலவுகளையும் உள்ளடக்குகிறது. தொழிற்படும் பொழுது, செயற்பாட்டிலுள்ள தொழிற்படு மூலதனம் சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் கீழ் பொருத்தமான வகைக்கு மாற்றல் செய்யப்படுவதுடன் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுள் காலப்பகுதிக்கு தேய்மானம் செய்யப்படுகிறது.

(ஆ) தேய்மானம்

தேய்மானத்திற்கான ஏற்பாடுகள் இறையிலி நிலம் தவிர்ந்த அனைத்துச் சொத்துக்கள் பொறிகள் மற்றும் சாதனங்களின் கிரயம் அல்லது மதிப்பீட்டின் மீது நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்தி கணிக்கப்படுகின்றன. சமமான தவணைகளின் மூலம் பின்வரும் மதிப்பிடப்பட்ட பயன்மிக்க ஆயுள் காலப்பகுதியில் அத்தகைய தொகையினைப் பதிவழிப்பதற்காக இவை மேற்கொள்ளப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| விமானத்துடன் தொடர்புபட்ட சாதனங்கள் | - | 8 ஆண்டுகளுக்குக் குறைவாக அல்லது குத்தகைக் காலப்பகுதி |
| பொறி மற்றும் சாதனங்கள் | - | சாதனங்களினது வகையின் அடிப்படையில் 3 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகள் வீச்சினைக் கொண்ட காலப்பகுதி |
| கட்டிடங்கள் | - | எதிர்பார்க்கப்படும் பயன்மிக்க காலப்பகுதி 15 ஆண்டுகளிலிருந்து 50 ஆண்டுகள் வரை |
| தொழிற்பாட்டுக் குத்தகை தொடர்பான விமானங்களுக்கான மேம்பாடுகள் | - | 10 ஆண்டுகளுக்கான குறைவான காலம் அல்லது குத்தகைக் காலம் |

எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்மிக்க ஆயுள்காலத் தேய்மான முறையானது ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமானவிடத்து மீளாய்வு செய்யப்பட்டு சீராக்கப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்ட தேய்மான வீதங்கள் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்துக் காலங்களுக்கும் ஏற்புடைத்தாகும்.

### (இ) அங்கீகரிக்கப்படாதவை

சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் விடயமொன்று அகற்றப்படும் பொழுது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றலிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படாத பொழுது, அது அங்கீகரிக்கப்படாமல் போகிறது. சொத்துக்கள் அங்கீகரிக்கப்படாதமையின் காரணமாக ஏற்படுகின்ற ஏதேனும் இழப்பு அல்லது இலாபம் (தேறிய அகற்றல் பெறுகைகளுக்கும் சொத்துக்களின் ஏட்டுப் பெறுமதித் தொகைக்குமிடையிலான வேறுபாடாகக் கணிக்கப்படுகிறது) சொத்துக்கள் அங்கீகரிக்கப்படாது ஆண்டிற்கான நிதியியல்கூற்றில் உள்ளடக்கப்படுகிறது.

#### 2.4.4 அருவச் சொத்துக்கள்

அருவச் சொத்துக்கள், அச்சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்கால பொருளியல் நன்மைகள் நிறுவனத்திற்கு ஏற்படக்கூடிய சாத்தியம் இருப்பதுடன், அச்சொத்துக்களின் கிரயம் நம்பகமாக அளவிடக் கூடியதாக இருக்கும் போது மட்டுமே அருவச் சொத்துக்களாக வெளிப்படுத்தப்படுகின்றன. இதன்படி, இச்சொத்துக்கள், கிரயத்திலிருந்து ஒன்று சேர்ந்த பதிவழிப்பு மற்றும் ஒன்றுசேர்ந்த பழுதுறக்கூடிய இழப்புக்கள் ஏதுமிருப்பின் அவற்றைக் கழித்து வரும் பெறுமதியில் நிதியியல் நிலைமைக்கூற்றில் காட்டப்படும்.

தொடர்புடைய கணனி வன்பொருளிலிருந்து வேறாக்கக் கூடிய கணனி மென்பொருளின் கொள்வனவு அல்லது அபிவிருத்திச் செலவானது வேறாக மூலதனப்படுத்தப்படுவதுடன் 5 ஆண்டுகளுக்கு விஞ்சாத வகையில் நேர்கோட்டு முறையில் பதிவழிக்கப்படுகின்றன. பதிவழிப்புக் காலம் மற்றும் பதிவழிப்பு முறை என்பன ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன. நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளின் மாற்றங்கள் தேறிய பெறுமதி மீளப்பெறப்பட முடியாது என்பதை எடுத்துக்காட்டினால் இச்சொத்துக்களின் தேறிய பெறுமதி பதிவழிப்புக்காக காலாந்தரம் மீளாய்வு செய்யப்படும்.

#### 2.4.5 குத்தகைகள்

### (அ) தொழிற்படுகின்ற குத்தகைகள்

குத்தகைக்கு விட்டவர் குத்தகைக்கான நியதிகள் மீதான அனைத்து இடர்நேர்வுகளையும் மற்றும் சொத்துரிமை தொடர்பான நன்மைகளையும் கணிசமானளவில் பயனுள்ள விதத்தில் பிடித்து வைத்திருக்கின்றவிடத்து குத்தகையானது தொழிற்படுகின்ற குத்தகை எனக் கருதப்படுகிறது. இன்னொரு முறையியல் சார்ந்த அடிப்படை பயன்படுத்துநரின் நன்மைகளிலிருந்து நேர மாதிரியினை கூடியளவிற்கு பிரசன்னப்படுத்தினாலொழிய, தொழிற்படுகின்ற குத்தகைக் கொடுப்பனவுகள் நேர்கோட்டு அடிப்படையில் வருமானக் கூற்றில் தொழிற்பாட்டுச் செலவினமொன்றாக அங்கீகரிக்கப்படுகிறது.

தொழிற்பாட்டு குத்தகைகளின் கீழ் சொத்துக்களின் மீள்வடிவமைப்பு தொடர்பாக ஏற்பட்ட செலவுகள் மூலதனமாக்கப்பட்டு பயனுள்ள ஆயுள் பகுதிக்குள்ளும் குத்தகைக் காலப்பகுதிக்குள்ளும் பதிவழிப்பு செய்யப்படுகின்றன. கணக்கீட்டுக் கொள்கை 2.4.3 இனைப் பார்க்கவும்.

### (ஆ) நிதிக் குத்தகைகள்

இடர்நேர்வுகளும் நன்மைகளும் குத்தகைக்கு விடப்பட்ட விடயங்களின் சொத்துரிமைகளுக்கு ஏற்படுமிடத்து பயனுள்ள முறையில் கம்பனிக்கு மாற்றப்படுகின்ற குத்தகைகள் ஆரம்பத்தில் குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களின் சந்தைப் பெறுமதியில் அல்லது குறைவாக இருக்குமிடத்து குறைந்தபட்ச குத்தகைக் கொடுப்பனவின் தற்போதைய பெறுமதியில் மூலதனமாக்கப்படுகின்றது. பொறுப்பின் எஞ்சியுள்ள மீதியின் மீது நிலையான வட்டி வீதத்தினைப் பெறும் நிமித்தம் நிதிக் கட்டணங்கள் மற்றும் குத்தகைப் பொறுப்பின் குறைப்புக்களுக்குமிடையில் குத்தகைக் கொடுப்பனவுகள் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. நிதிக் கட்டணங்கள் வருமானக் கூற்றுக்களில் நிதிச் செலவாக அங்கீகரிக்கப்படுகின்றன.

மூலதனமாக்கப்பட்ட குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் என வெளிப்படுத்தப்பட்டு குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களிலிருந்து கம்பனி பலனை எதிர்பார்க்கும் காலப்பகுதி வரை தேய்மானம் செய்யப்படுகின்றன. கணக்கீட்டுக் கொள்கை 2.4.3 இனைப் பார்க்கவும்.

### (இ) விற்பனையும் மீள்குத்தகையும்

தொழிற்பாட்டுக் குத்தகைகளில் தோன்றுகின்ற விற்பனை மற்றும் மீள்குத்தகைக் கொடுக்கல்வாங்கல்களின் மீதான இலாபங்கள், குறிப்பிட்ட சொத்துக்களின் சந்தைப் பெறுமதியினை விற்பனைப் பெறுகைகள் விஞ்சாததொரு அளவிற்கு வருமானக்கூற்றில் உடனடியாக அங்கீகரிக்கப்படுகின்றன.

#### 2.4.6 இருப்புக்கள்

பயன்படுத்த முடியாத பழைய மற்றும் மெதுவாக அசைகின்ற விடயங்களுக்காக உரிய ஏற்பாடுகளைச் செய்த பின்னர் கிரயம் மற்றும் தேறிய கைத்தேறத்தக்க பெறுமதியில் எது குறைவானதோ அதன் அடிப்படையில் இருப்புக்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. அனைத்து இருப்புக்களும் நிறையேற்றப்பட்ட சராசரி செலவின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளன.

#### 2.4.7 நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி இழப்பு

கம்பனியானது, ஏதேனும் சொத்தின் பெறுமதி இழக்கக்கூடிய தன்மையினைக் காட்டுகின்றதா என்பது பற்றி ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலிருந்தும் மதிப்பிட்டுக் கொள்கிறது. அத்தகைய அடையாளங்கள் ஏதும் காணப்படுமிடத்து அல்லது அத்தகைய சொத்திற்கு வருடாந்த பெறுமதி இழப்புத்தன்மை பற்றிய பரீட்சிப்புத் தேவைப்படுமிடத்து, கம்பனியானது சொத்தின் அறவிடக்கூடிய தொகை பற்றி மதிப்பீடு செய்கிறது. சொத்தொன்றின் ஏட்டுப் பெறுமதி அறவிடத்தக்க தொகையினை விஞ்சுமிடத்து அச்சொத்து பெறுமதி இழந்ததாகக் கருதப்பட்டு அறவிடத்தக்க தொகை பதிவழிக்கப்படுகின்றது.

#### 2.4.8 சந்தைப் பெறுமதியினை அளவிடுதல்

குழுமமானது அதன் காணி, கட்டடங்கள் மற்றும் விமானங்களுக்குள்ளேயான சமையலறைச் சாதனங்கள் என்பனவற்றைச் சந்தைப் பெறுமதியில் அளவிடுகின்றது. சந்தைப் பெறுமதி தொடர்பான வெளிப்படுத்தல்கள் குறிப்பு 3இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

சந்தைப் பெறுமதி என்பது சொத்தொன்றை விற்பதற்காக அல்லது சந்தைப் பங்கேற்பாளர்களிடையே ஒழுங்கான முறையில் பொறுப்பொன்றினை மாற்றல் செய்வதற்காக அளவிடப்படுகின்ற நாளன்று பெறப்படுகின்ற அல்லது கொடுப்பனவு செய்யப்படுகின்ற விலையாகும். சந்தைப் பெறுமதி அளவீடு, ஒன்றில், சொத்துக்களினை விற்றல் அல்லது பொறுப்புக்களை மாற்றல் செய்தல் பற்றிய கொடுக்கல்வாங்கல்களின் கணிப்பினை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான முதன்மைச் சந்தையில்/அல்லது
- முதன்மைச் சந்தை இல்லாதவிடத்து, சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான மிக அநுகூலமான சந்தையில்

முதன்மை அல்லது மிக அநுகூலமான சந்தைக் குழுமத்தினால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை விலையிடும் பொழுது சந்தைப் பங்கேற்பாளர்கள் தமது பொருளாதார நலன்களை மிகக் கவனத்தில் கொண்டே தொழிற்படுவர் என்ற அனுமானத்தின் அடிப்படையில் சந்தைப் பங்கேற்பாளர்களின் அனுமானத்தினைப் பயன்படுத்தி அத்தகைய சொத்துக்களின் சந்தைப் பெறுமதி அளவிடப்படுகிறது.

நிதியல்லாச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி அளவீடானது அத்தகைய சொத்துக்களை உயர்ந்த மற்றும் சிறந்த முறையில் பயன்படுத்துவதன் மூலம் பொருளாதார நன்மைகளை உருவாக்கிக் கொள்ளக்கூடிய சந்தைப் பங்கேற்பாளரின் இயலாற்றலை அல்லது இன்னொரு சந்தைப் பங்கேற்பாளர்களுக்கு விற்பதன் மூலம் அது உயர்ந்த மற்றும் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளப்படுவதனைக் கணக்கில் எடுத்துக் கொள்கிறது.

குழுமமானது குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான மதிப்பீட்டு நுணுக்கங்களைப் பயன்படுத்துவதுடன் சந்தைப் பெறுமதியினை மதிப்பிடுவதற்குப் போதுமான தரவுகளைக் கொண்டிருப்பதன் மூலம் தொடர்பான அவதானிக்கத்தக்க உள்ளீடுகளை உயர்ந்தளவில் பயன்படுத்திக் கொள்வதுடன் அவதானிக்க முடியாத உள்ளீடுகளை பயன்படுத்துவதனை மிகக் குறைத்துக் கொள்கிறது.

சந்தைப் பெறுமதியில் அளவீடு செய்யப்பட்ட அனைத்துச் சொத்துக்களும் சந்தைப் பெறுமதி அளவுகளில் வகைப்படுத்தப்பட்டு, பொதுவாக சந்தைப் பெறுமதி அளவீட்டில் குறிப்பிடத்தக்களவானதாகக் காணப்பட்ட குறைந்தமட்ட உள்ளீடுகளின் அடிப்படையில் பின்வருமாறு விபரிக்கப்படுகிறது.

- மட்டம் 1 - ஒரேவிதமான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான தீவிரமான சந்தைகளில் குறிப்பீடு செய்யப்பட்ட (சீராக்கப்படாத) சந்தை விலைகள்
- மட்டம் 2 - சந்தைப் பெறுமதி அளவீட்டில் குறிப்பிடத்தக்களவிலானதாகக் காணப்பட்ட குறைந்த மட்ட உள்ளீடுகளுக்கான மதிப்பீட்டு நுணுக்கம் நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக்கப்படத்தக்கவை
- மட்டம் 3 - சந்தைப் பெறுமதி அளவீட்டில் குறிப்பிடத்தக்களவினதாகக் காணப்பட்ட குறைந்த மட்ட உள்ளீடுகளுக்கான மதிப்பீட்டு நுணுக்கம் அவதானிக்கப்படத்தக்கதாக இருக்கவில்லை.

மீண்டெழும் அடிப்படையில், நிதியியல் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைப் பொறுத்தவரை, குழுமமானது ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் முழுவதிலும் மாற்றல்களினது மீள்மதிப்பீட்டு வகைப்படுத்தலின்படி (பொதுவாக சந்தைப் பெறுமதி மதிப்பீட்டில் குறிப்பிடத்தக்களவினதாகக் காணப்பட்ட குறைந்த மட்ட உள்ளீடுகளின் அடிப்படையில்) படிமுறை மட்டங்களுக்கிடையில் இடம்பெறுகின்றதா என்பதனை தீர்மானிக்கிறது.

வெளிவாரி மதிப்பீட்டாளர்கள் சொத்து, பொறி மற்றும் சாதனங்கள் போன்ற குறிப்பிடத்தக்க சொத்துக்களின் மதிப்பீட்டில் ஈடுபடுகின்றனர். வெளிவாரி மதிப்பீட்டாளர்களுக்கான தேர்வுப் பிரமாணங்கள் சந்தை அறிவு, கீர்த்தி, சுயாதீனம் மற்றும் தொழில்சார் நியமங்கள் பேணப்படுகின்றனவா என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது. வெளிவாரி மதிப்பீட்டாளர்களுக்கான கலந்துரையாடல்களின் பின்னர், குழுமமானது ஒவ்வொரு விடயங்களுக்கும் பயன்படுத்துவதற்கான மதிப்பீட்டு நுணுக்கங்கள் மற்றும் உள்ளீடுகள் பற்றி தீர்மானிக்கிறது.

சந்தைப் பெறுமதி வெளிப்படுத்தல்களுக்காக, குழுமமானது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் தன்மை, பண்புகள் மற்றும் இடர்நேர்வு மற்றும் மேலே விபரிக்கப்பட்டவாறான சந்தைப் பெறுமதி படிமுறையின் மட்டம் என்பனவற்றின் அடிப்படையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வகுப்புக்களைத் தீர்மானிக்கின்றது.

#### 2.4.9 நிதியியல் சாதனங்கள் - ஆரம்ப அங்கீகரித்தல் மற்றும் பின்னரான அளவீடு

#### 2.4.9.1 நிதியியல் சொத்துக்கள்

நிதியியல் சாதனங்களின் ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பினராக குழுமம் மாறுகின்ற பொழுது நிதியியல் சொத்துக்கள், நிதியியல் நிலைமைகளின் கூற்றுக்களின் மீது அங்கீகரிக்கப்படுகின்றன. நிதியியல் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டமூடான சந்தைப் பெறுமதி, கடன்கள் மற்றும் பெறத்தக்கவை, முதிர்ச்சி முதலீடுகளுக்காக வைத்திருக்கப்படுபவை அல்லது விற்பனைக்காக கிடைக்கத்தக்கவை என பொருத்தமான விதத்தில் வகைப்படுத்தப்படுகின்றன. முகாமைத்துவமானது ஆரம்ப அங்கீகரிப்பில் அதன் நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தலை தீர்மானிப்பதுடன் வகைப்படுத்தல் சொத்துக்களின் தன்மை மற்றும் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டதன் நோக்கம் என்பனவற்றில் தங்கியிருக்கிறது.

அனைத்து நிதியியல் சொத்துக்களும் ஆரம்பத்தில் சந்தைப் பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டன.

கம்பனியின் நிதியியல் சொத்துக்கள் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் மற்றும் விற்பனைக்குக் கிடைக்கத்தக்கவை என வகைப்படுத்தப்பட்ட முதலீடுகள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன. அங்கீகரிப்பு, ஆரம்ப மற்றும் பின்னரான அளவிடல்கள், பெறுமதி இழப்பு மற்றும் அங்கீகரிக்கப்படாமை என்பன மீதான குழுக் கொள்கை பற்றிய விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள்**

கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் என்பது தீவிர சந்தையில் விலைக்குறிப்பீடு செய்யப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கத்தக்க கொடுப்பனவுகளுடன் கூடிய பெறுமதிகளல்லாத நிதியியல் சொத்துக்களாகும். ஆரம்ப அளவிடல்களின் பின்னர் அத்தகைய நிதிச் சொத்துக்கள் குறைந்தளவில் பழுதுறக்கூடிய பயனுறு வட்டி வீதங்களைப் பயன்படுத்தி தேய்மானச் செலவில் அளவிடப்படுகின்றன. பயனுறு வட்டி வீத முறையில் மிக முக்கியமானதொரு பகுதியாக விளங்கும் கையேற்பு மற்றும் கட்டணம் அல்லது செலவுகள் மீதான ஏதேனும் கழிவிடல் அல்லது கட்டணத்தினை கணக்கிலெடுப்பதன் மூலம் தேய்மானச் செலவு கணிக்கப்படுகின்றது.

**(ஆ) அங்கீகரிக்கப்படாதவை**

பின்வரும் நேரங்களில் நிதியியல் சொத்தொன்று அங்கீகரிக்கப்படுவதில்லை:

- சொத்திலிருந்து காசுப்பாய்ச்சல்களைப் பெறுவதற்கான உரிமைகள் காலாவதியாகியிருக்கும் பொழுது
- சொத்துக்களிலிருந்து காசுப்பாய்ச்சலைப் பெறுவதற்கான அதன் உரிமைகளை உரிமமானது மாற்றல் செய்திருக்கும் பொழுது அல்லது "மாற்றங்கள் மீது சுமத்தும்" ஒழுங்குகளின் கீழ் பெறப்பட்ட காசுப்பாய்ச்சல்களை பெருமளவு தாமதங்கள் இல்லாமல் மூன்றாம் தரப்பினருக்குச் செலுத்துவதற்கான கடப்பாடொன்றினை அனுமானித்தல் மற்றும் ஒன்றில் (அ) குழுமம் கணிசமான அனைத்து இடர்நேர்வுகளையும் சொத்துக்களின் விருதுகளையும் மாற்றல் செய்திருத்தல் அல்லது (ஆ) குழுமம் ஒன்றில் கணிசமான அனைத்து இடர்நேர்வுகளையும் சொத்துக்களின் விருதுகளையும் மாற்றல் செய்யாமல் அல்லது பிடித்துவைத்திருக்காமல் இருக்கின்ற போதும் சொத்துக்கள் மீதான கட்டுப்பாடுகளை மாற்றல் செய்திருத்தல்.

**(இ) நிதிச் சொத்துக்களின் பெறுமதி இழப்பு**

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் நிதியியல் சொத்துக்கள் அல்லது நிதியியல் சொத்துக்களின் தொகுதியின் பெறுமதி இழக்கப்பட்டிருக்கின்றதா என்பதற்கு ஏதேனும் குறிப்பிடத்தக்க சான்றுகள் காணப்படுகின்றதாக என்பதனைக் கண்டறிவதற்காக குழுமம் மதிப்பீடுகளை மேற்கொள்கின்றது. நிதியியல் சொத்தொன்றில் அல்லது நிதியியல் சொத்துத் தொகுதியொன்றில், சொத்துக்களின் ஆரம்ப அங்கீகரிப்பொன்று (ஏற்பட்ட இழப்பு நிகழ்வு) ஏற்பட்டதன் பின்னர் நிகழ்ந்த ஒன்று அல்லது அதற்கும் கூடுதலான நிகழ்வுகளின் விளைவாக பெறுமதி இழப்பு ஏற்படுவதற்கான சான்றுகள் காணப்படுமிடத்தும், அந்த இழப்புச் சம்பவம் நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிச் சொத்துக்களின் தொகுதியின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் மீது தாக்கத்தினைக் கொண்டிருப்பின் அதனை நம்பகமான முறையில் மதிப்பீடு செய்யலாம்.

பெறுமதி இழப்புத் தொடர்பான சான்றுகள் கடன்பட்டவர்கள் அல்லது கடன்பட்ட குழுவினர் குறிப்பிடத்தக்க நிதியியல் இடர்ப்பாடுகளை, கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறியமை, அவர்கள் வங்குரோத்து நிலையொன்றினை அடைந்துள்ளமைக்கான சாத்தியமானதன்மை அல்லது மற்றைய நிதியியல் நிறுவனத்தில் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சலில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டமையினை அவதானிக்கத்தக்க தரவுகள் எடுத்துக்காட்டுகின்றமையினை உள்ளடக்கியிருக்கும்.

**(i) தேய்மானச் செலவில் கொண்டு செல்லப்பட்ட நிதிச் சொத்துக்கள்**

பெறுமதி இழப்புத் தொடர்பான இழப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதற்குத் தெளிவான சான்றுகள் காணப்படுமிடத்து, இழப்புத் தொகையானது கொண்டு செல்லப்பட்ட சொத்தின் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் தற்போதைய

பெறுமதிக்குமிடையிலான வேறுபாடொன்றாக அளவிடப்படுகின்றது. மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சலின் தற்போதைய பெறுமதி, நிதியியல் சொத்துக்களின் மூல பயனுறு வட்டி வீதத்தில் கழிவிடப்படுகின்றது.

சொத்தின் கொண்டு செல்லப்படும் தொகையானது படிக்கணக்கினை பயன்படுத்துவதனூடாக குறைக்கப்படுவதுடன் இழப்புத் தொகை வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

அடுத்துவரும் ஆண்டில், பெறுமதி இழப்பு நிகழ்ந்தமைக்குப் பின்னர் ஏற்படுகின்ற நிகழ்வொன்றின் காரணமாக ஏற்படுகின்ற அதிகரிப்புக்கள் அல்லது இழப்புக்களினால் ஏற்படும் மதிப்பிடப்பட்ட பழுதுறும் இழப்புக்களின் தொகை அங்கீகரிக்கப்படுமிடத்து, முன்னர் அங்கீகரிக்கப்பட்ட பழுதுறும் தன்மை தொடர்பான இழப்பு படிக்கணக்கினை சீராக்குவதன் மூலம் அதிகரிக்கப்படுகிறது அல்லது குறைக்கப்படுகிறது. பதிவழிப்பொன்று பின்னர் அறவிடப்படுமிடத்து, அறவிடப்பட்ட தொகை, வருமானக் கூற்றில் நிதிச் செலவாக வரவு வைக்கப்படுகின்றது.

#### 2.4.9.2 நிதியியல் பொறுப்புக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 39இன் செயற்பரப்பிற்குள் காணப்படும் நிதியியல் பொறுப்புக்கள் இலாபம் அல்லது நட்டம் அல்லது கடன்கள் மற்றும் கடன்பாடுகள் எனப் பொருத்தமான ஒன்றினூடாக சந்தைப் பெறுமதியில் நிதியியல் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. குழுமம் அதன் நிதியியல் பொறுப்புக்களின் வகைப்படுத்தலை ஆரம்ப அங்கீகரித்தலின் போது தீர்மானிக்கிறது.

அனைத்து நிதியியல் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் சந்தைப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுவதுடன் கடன்கள் மற்றும் கடன்பாடுகளைப் பொறுத்தவரை கொடுக்கல்வாங்கல் செலவில் நேரடியாகச் சேர்க்கப்படுகின்றது.

குழுமத்தின் நிதியியல் பொறுப்புக்கள் வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுபடத்தக்கவை, வங்கி மேலதிகப் பற்றுக்கள், கடன்கள் மற்றும் கடன்பாடுகள் மற்றும் நிதியியல் உத்தரவாத உடன்படிக்கைகள் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

நிதியியல் பொறுப்புக்களின் பின்னைய அளவீடுகள் கீழே விபரிக்கப்பட்டவாறான அவற்றின் வகைப்படுத்தலின் மீது தங்கியிருக்கிறது.

**(அ) பின்னரான அளவுமுறை**

ஆரம்ப அங்கீகரித்தலின் பின்னர், வட்டி உழைக்கும் கடன்கள் மற்றும் கடன்பாடுகள் பின்னர் பயனுறு வட்டி வீதங்களைப் பயன்படுத்தி தேய்மானச் செலவில் அளவிடப்படுகின்றன. பொறுப்புக்கள் அங்கீகரிக்கப்படாத போதும் அதேபோன்று பயனுறு வட்டி வீத கடன் தீர்ப்பனவு செயன்முறையினூடாக இலாபங்களும் இழப்புக்களும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

தேய்மானச் செலவுகள், கையேற்புக்கள் மீதான ஏதேனும் கழிவிடலின் அல்லது கட்டணங்கள் மற்றும் பயனுறு வட்டி வீதத்தின் இன்றியமையாத பகுதியாக விளங்கும் கட்டணங்கள் அல்லது கிரயங்களைக் கணக்கில் கொண்டு கணிக்கப்படுகின்றன. பயனுறு வட்டி வீதத் தேய்வுகள் வருமானக் கூற்றிலுள்ள நிதிச் செலவுகளில் உள்ளடக்கப்படுகின்றன.

**(ஆ) அங்கீகரிக்கப்படாதவை**

பொறுப்பு மீதான கடப்பாடுகள் நீக்கப்படும் போது அல்லது இரத்துச் செய்யப்படும் பொழுது அல்லது காலாவதியாகும் பொழுது நிதியியல் பொறுப்புக்கள் அங்கீகரிக்காமல் விடப்படுகின்றன.

ஏற்கனவேயுள்ள நிதியியல் பொறுப்பொன்று, கணிசமாக வேறுபட்ட நியதிகள் அல்லது கணிசமானளவில் மாற்றியமைக்கப்பட்ட ஏற்கனவேயுள்ள பொறுப்பொன்றில் நியதிகளின் மீதான அதே கடன்பாட்டாளரிடமிருந்தான இன்னொன்றின் மூலம் நீக்கப்படும் வேளையில் அத்தகைய பரிமாற்றங்கள் அல்லது மாற்றியமைப்பு ஆரம்பப் பொறுப்புக்களின் அங்கீகரியாமையாகவும் புதிய பொறுப்பின் அங்கீகரியாமையாகவும் கருதப்படுகின்றன. தொடர்பான கொண்டு செல்லும் தொகையில் காணப்படும் வேறுபாடுகள் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

**(இ) நிதியியல் சாதனங்களை எதிரீடு செய்தல்**

நிதியியல் சொத்துக்களும் நிதியியல் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுவதுடன் தேறிய தொகை பின்வரும் விதத்தில் இருக்குமிடத்து, நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்படுகின்றன.

- அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை எதிரீடு செய்வதற்கான சட்ட ரீதியான உரிமைகளை தற்பொழுது நடைமுறைப்படுத்தத்தக்கதாக இருத்தல்
- தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கான உண்மையான எண்ணம் இருத்தல் அல்லது சொத்துக்களை விடுவித்தல் மற்றும் சமகாலத்தில் பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்தல்

#### 2.4.10 விமானப் பராமரிப்பு ஒதுக்கு

விமானப் பராமரிப்பு ஒதுக்கு, தொழிற்படுகின்ற குத்தகை உடன்படிக்கையின் நியதிகளில் எந்திரங்கள், விமானக் கலங்கள் மற்றும் விமானக் கூறுகள் என்பனவற்றின் எதிர்கால பழுதுபார்த்தலுக்காக மாதாந்த அடிப்படையில் குத்தகைக்கு விடுபவருக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளை உள்ளடக்கியுள்ளது. கம்பனியானது எந்திரங்கள், விமானக் கலம்கள், விமானக் கலக்கூறுகள் (ஒதுக்கிற்கு ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகை வரையில்) என்பனவற்றின் பழுதுபார்ப்பு மீது ஏற்பட்ட செலவுகளை, பராமரிப்பு வேலைகள் முடிவடைந்ததும் அத்தகைய ஒதுக்குகளுக்கெதிராக குத்தகைக்கு விடுபவரிடமிருந்து அறவிட்டுக் கொள்கிறது.

தன்மைகளின் அடிப்படையில் விமானப் பேணல் ஒதுக்கு கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் நிதியியல் சொத்துக்களின் இவ்வகைக்கான தொடர்பான கணக்கீட்டுக் கொள்கைகள் மேலேயுள்ள 2.4.9.1 (அ) குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

#### 2.4.11 வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள்

வைப்புக்கள் மற்றும் ஏனைய கடன்பாட்டாளர்களை (வைப்புக்களின் மீது வகைப்படுத்தப்பட்ட நிதியல்லாச் சொத்துக்கள் மற்றும் கிரயத்தில் அளவிடப்பட்ட ஏனைய பெறத்தக்கவைகள் நீங்கலாக) உள்ளடக்கிய வர்த்தகக் கடன்பாடுகள் வகைப்படுத்தப்பட்டு கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளாகக் கணக்கிடப்படுகின்றன. இத்தன்மையினை அடிப்படையாகக் கொண்டு நிதியியல் சொத்துக்களின் இவ்வகை தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை மேலேயுள்ள குறிப்பு 2.4.9.1 (அ)இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

#### 2.4.12 முதலீடுகள்

##### (i) துணைக் கம்பனி முதலீடு

கம்பனியின் நிதியியல்கூற்றுக்களில், துணைக் கம்பனியில் காணப்படும் முதலீடு, பெறுமதியில் ஏற்படக்கூடிய தற்காலிக குறைவு தவிர்ந்த வேறு ஏதேனும் ஒதுக்கங்கள் நீங்கலாக கிரயத்தில் கணக்கிடப்பட்டது.

#### 2.4.13 காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்

காசு மற்றும் காசிற்குச் சமமானவையும் வங்கியிலும் கையிலுமுள்ள காசு, அழைப்பு வைப்புக்கள் மற்றும் பெறுமதியில் மாற்றுவதில் குறிப்பிடத்தக்களவிற்கு இடர்நேர்வற்றவை என்ற நிபந்தனைக்குட்பட்டு தெரிந்த காசுத் தொகைக்கு மாற்றுவதற்கு ஆயத்தமாகவுள்ள உயர்ந்த திரவத்தன்மை கொண்ட குறுங்கால முதலீடுகள் என வரைவிலக்கணம் செய்யப்படுகின்றன.

காசுப்பாய்ச்சல் கூற்றின் நோக்கங்களுக்காக, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் வங்கியிலுள்ள காசு, கையிலுள்ள காசு மற்றும் வெளிநின்ற வங்கி மேலதிகப் பற்றுக்கள் நீங்கலான வங்கியிலுள்ள அழைப்பு வைப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. குறுங்கால முதிர்ச்சிகளைக் கொண்ட முதலீடுகளும் (அதாவது கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைவானவை) காசிற்குச் சமமானவைகள் எனக் கருதப்படுகின்றன. வங்கி மேலதிகப் பற்றுக்கள் நிதியியல் நிலைமைக் கூற்றில், வட்டி உழைக்கும் பொறுப்புக்களின் கீழ் வெளிப்படுத்தப்படுகின்றன.

**2.4.14 ஏற்பாடுகள்**

(i) பொது

கடந்த கால நிகழ்வுகளின் பெறுபேறாக, கம்பனி தற்பொழுது கடப்பாடுகளை (சட்ட ரீதியான அல்லது அதன் அர்த்தம்) கொண்டிருக்கும் பொழுது அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கங்கள் வெளிப்பாய்கின்ற மூலவளங்கள் பொருளாதார நன்மைகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியங்கள் காணப்படுமிடத்து கடப்பாடுகளை தீர்ப்பனவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன் கடப்பாட்டுத் தொகையினையும் நம்பகமாக மதிப்பீடு செய்து கொள்ள முடியும். ஓரளவு ஏற்பாடு அல்லது முழு ஏற்பாடும் மீளளிக்கப்பட வேண்டுமென கம்பனி எதிர்பார்க்கும் பொழுது, மீளளிப்பு உறுதிப்படுத்தப்படும் வேளையில் மாத்திரம் இம்மீளாய்வு தனியானதொரு சொத்தாக அங்கீகரிக்கப்படுகிறது. ஏதேனும் ஏற்பாட்டு செலவு தொடர்பாக மீளச்செலுத்தல்கள் இருப்பின் அதனைக் கழித்து வருமானக் கூற்றில் காட்டப்படுகின்றன. ஏதேனும் ஏற்பாடுகள் தொடர்பிலான செலவுகள் ஏதேனும் மீள்வழங்கல்களைக் கழித்த வருமானக் கூற்றில் காட்டப்படுகின்றன.

(ii) விமானப் பேணல் மற்றும் பழுதுபார்த்தல் செலவுகள்

உறப்பட்ட அடிப்படையொன்றின் மீது, குழுமமானது, விமானப் பேணல் மற்றும் பழுதுபார்த்தல் செலவுகளை (விமானங்களின் பாரிய பேணல் நீங்கலாக எந்திர பழுதுபார்த்தல் மற்றும் தரையிறக்கல் சாதனத்தின் பழுதுபார்த்தல் செலவுகள்) அங்கீகரிக்கின்றது. விமானங்களின் பாரிய பேணல், எந்திரங்களின் பழுதுபார்த்தல் மற்றும் தரையிறங்கல் சாதனங்களின் செலவுகள் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன. விமானங்களின் பாரிய பேணல், எந்திரங்கள் பழுதுபார்த்தல், தரையிறங்கல் சாதனங்களின் பழுதுபார்த்தல் செலவுகள், பயன்பாட்டின் அடிப்படையில் அல்லது பழுதுபார்த்தலின் தன்மையின் அடிப்படையான நேரம் என்பனவற்றின் அடிப்படையில் நிதியியல் கூற்றுக்களில் படிப்படியாக செய்யப்படுகின்றன. எந்திரங்களின் பழுதுபார்த்தல் செலவுகள் மூன்றாந்தரப்புப் பேணல் உடன்படிக்கைகளின் “மணித்தியாலங்களின் படியான வலு” இனால் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் செலவுகள் உடன்படிக்கை காலப்பகுதியில் மணித்தியாலமொன்றிற்காக இணங்கப்பட்ட நிலையான வீதமொன்றில் எதிரீடு செய்யப்படுகின்றன.

**2.4.15 ஓய்வுகால நன்மைகள் தொடர்பான கடப்பாடுகள்**

(அ) வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நன்மைகள் திட்டம் - பணிக்கொடை

பணிக்கொடை ஒரு கட்டாய நன்மைகள் திட்டமாகும். இதனைக் கம்பனியும் அதன் துணை நிறுவனமும் தொடர்பான சட்டத்தின் நியதிகளின்படி செலுத்துவதற்கு பொறுப்பானவையாகும். எறிவு செய்யப்பட்ட அலகு வரவு முறையொன்றினைப் பயன்படுத்தி ஒவ்வொரு ஆண்டிற்குமான கணிப்பின் மதியுரைப்படி கம்பனியானது கட்டாய நன்மைகள் திட்டத்தின் தற்போதைய பெறுமதியினை அளவிடுகின்றது.

குழுமமானது கட்டாய நன்மைகள் திட்டங்களுடன் தொடர்பான ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் மற்றும் செலவினத்தில் கட்டாய நன்மைத் திட்டத்திலிருந்து உருவாகின்ற ஒன்றுசேர்ந்த இலாப/நட்டங்களை இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கின்றது.

பணிக்கொடை பொறுப்புக்களுக்கு வெளியிலிருந்து நிதியிடப்படமாட்டாது. இவ்விடயம், ஐந்தொகையில் “ஏனைய பிற்போடப்பட்ட பொறுப்புக்கள்” என்ற தொகுதியின் கீழ் காட்டப்படுகின்றன. வெளிநாடுகளைத் தளமாகக் கொண்ட ஊழியர்கள் அவர்களது சொந்த நாடுகளுக்குப் பொருந்தத்தக்க சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் உள்ளடக்கப்படுகின்றனர்.

(ஆ) வரைவிலக்கணம் செய்யப்பட்ட உதவுதொகைத் திட்டங்கள் - ஊழியர் சேம நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

இலங்கையிலுள்ள ஊழியர்கள், தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க ஊழியர் சேம நிதிய உதவுதொகைகளுக்கும் ஊழியர் நம்பிக்கை நிதிய உதவுதொகைகளுக்கும் உரித்துடையவராவர். ஊழியர்களின் மொத்த ஊதியத்தில் கம்பனி, ஊழியர் சேம நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் 15 சதவீதத்தினையும் 3 சதவீதத்தினையும் பங்களித்த வேளையில் துணை நிறுவனம் 12 சதவீதத்தினையும் 3 சதவீதத்தினையும் பங்களித்தது.

**2.4.16 அடிக்கடி பறப்பவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம்**

ஒன்றுசேர்ந்த மைல்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நிகழ்ச்சித்திட்டத்திலுள்ள உறுப்பினர்களுக்குப் பயண வெகுமதிகளை வழங்குகின்ற “பிளை ஸ்மைல்” என்ற அடிக்கடி பறப்பவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டமொன்றினைக் கம்பனி தொழிற்படுத்துகின்றது. அடிக்கடி பறப்பவர்களுக்கான நன்மைகளுக்குப் பயணிகள் வருமானத்தில் ஒரு பங்கு வழங்கப்படுவதுடன் அவை பயன்படுத்தப்படும் வரை பிற்போடப்படுகின்றன. வருமானத்தின் அளவு மீட்டுக்கொள்ளும் வரலாற்று ரீதியான போக்கின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுவதுடன் அதன் பின்னர் இது இந்நன்மைகளின் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டினை எறிவு செய்யப் பயன்படுத்தப்பட்டது. வழங்கப்பட்ட வெகுமதியின் சந்தைப் பெறுமதி பணிகளின் நிறையேற்றப்பட்ட சராசரிப் பெறுமதியின் தொடர்பான அளவினால் மதிப்பிடப்பட்டதுடன் இதன் மூலம் வெகுமதித் தொகை மீட்கப்பட முடியும். இம்மதிப்பீடுகள் ஒவ்வொரு அறிக்கையிடும் நாளன்றும் மீளாய்வு செய்யப்பட்டதுடன் பொறுப்பும் அதற்கேற்ப சீராக்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டப் பங்குடமையாளர்களின் பணிகளைப் பயன்படுத்தியதனூடாக ஒன்றுசேர்ந்த மைல்களும் பங்கேற்கின்ற பங்குடமையாளர்களினால் செலுத்தப்பட்டவையும் கூட அவை பயன்படுத்தப்படும் வரை பிற்போடப்பட்ட வருமானமாக கணக்கிடப்படுகின்றன. காலாவதியாகும் என எதிர்பார்க்கப்படும் மைல்களுக்கான பொறுப்பு அங்கீகரிக்கப்படமாட்டாது.

**2.4.17 வருமானத்தினை அங்கீகரித்தல்**

வருமானமானது குழுமத்திற்குப் பாயக்கூடிய பொருளாதார நன்மைகளின் சாத்தியமானளவிற்கு அங்கீகரிக்கப்படுவதுடன், வருமானமானது அது எப்பொழுது கொடுப்பனவு செய்யப்பட்டது என்பதனைக் கருத்திற்கொள்ளாது நம்பகமாக அளவிடப்படுகிறது. வருமானமானது பெறப்பட்ட பரிசீலனையின் சந்தைப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது. குழுமத்திற்கான வருமானம் கம்பனிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களை நீக்குகிறது.

(அ) எயார்லையின்ஸ்சின் வருமானம்

வருமானம் முக்கியமாக, பயணிகளைக் கொண்டு செல்லுதல், சரக்கு மற்றும் அஞ்சல், விமானங்களுக்கு முனைக்கோடிப் பணிகளை வழங்குதல், பொறியியல் பணிகள், வான் ஒப்பந்தப் பறப்புக்கள் மற்றும் அவற்றுடன் தொடர்பான நடவடிக்கைகள் என்பனவற்றிலிருந்து உருவாக்கப்படுகின்றது.

(i) போக்குவரத்துப் பணிகள் வழங்கப்படும் பொழுது பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து விற்பனைகள் தொழிற்பாட்டு வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றன.

(ii) பயன்படுத்தப்படாத பயணச்சீட்டுக்களினதும் வான்வழி பற்றுச்சீட்டுக்களினதும் பெறுமதி, முன்கூட்டிய பயணச்சீட்டு விற்பனைகளாக நடப்புப் பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பயன்படுத்தப்படாத பயணச்சீட்டுக்களினதும் வான்வழி பற்றுச்சீட்டுக்களினதும் பெறுமதி ஓராண்டிற்குப் பின்னும் பயன்படுத்தப்படாது செல்லுபடியற்றதாக இருக்குமாயின் வருமானமாக அங்கீகரிக்கப்படும்.

(iii) விமான நிலைய முனைக்கோடிப் பணிகளின் வழங்கல்களிலிருந்தான வருமானம், பணிகள் வழங்கப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றன.

(iv) மூன்றாந்தரப்பினருக்கான பராமரிப்புப் பணிகளை வழங்குவதிலிருந்து கிடைக்கும் வருமானம் அத்தகைய அம்சங்கள் பூர்த்தி செய்யப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றன.

(v) பறப்பு தொழிற்பாட்டுப் பணிகளை வழங்குவதிலிருந்தான வருமானம் அப்பணிகள் வழங்கப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றன.

(ஆ) எயார்லையின் கேட்டறிங் சேர்விஸஸிலிருந்தான வருமானம்

**பொருட்களின் விற்பனை**

சொத்துடமையின் குறிப்பிடத்தக்க இடர்நேர்வுகளும் நன்மைகளும் வாங்குநருக்கு மாற்றல் செய்யப்படும் வேளையில் வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது. வருமானம் பெறுமதிசேர் விற்பனை வரியினை நீக்குவதுடன் வர்த்தகக் கழிவுகளைக் கழித்ததன் பின்னர் இது பெறப்படுகின்றது. வரவேண்டிய அறவிடல்கள்,

அவற்றுடன் இணைந்த செலவுகள் அல்லது பொருட்கள் திரும்பக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றமை மற்றும் பொருட்களுடன் முகாமைத்துவ தலையீடுகள் காணப்படுகின்றமை என்பன தொடர்பாக குறிப்பிடத்தக்களவு நிச்சயமற்ற தன்மைகள் காணப்படுகின்றவிடத்து வருமானம் அங்கீகரிக்கப்படமாட்டாது.

### (இ) பங்கிலாப வருமானம்

பங்குடமையாளர் உரிமைகள் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு அங்கீகரிக்கப்படும் பொழுது பங்கிலாபங்கள் கணக்கிடப்படுகின்றன.

### (ஈ) வாடகை வருமானம்

வாடகை வருமானம் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகிறது.

### (உ) வட்டி வருமானம்

அனைத்து நிதிச் சாதனங்களும் தேய்மானச் செலவில் அளவிடப்பட்டதுடன் வட்டி உழைக்கும் நிதிச் சொத்துக்கள் விற்பனைக்கு கிடைக்கத்தக்கவை என வரைவிலக்கணம் செய்யப்பட்டதுடன் பயனுறு வட்டி வீதங்களைப் பயன்படுத்தி வட்டி வருமானம் அல்லது செலவினம் பதிவு செய்யப்படுகிறது.

### (ஊ) ஏனைய வருமானம்

ஏனைய வருமானம் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 2.4.18 செலவினை அங்கீகரித்தல்

உறப்பட்ட செலவு மற்றும் குறிப்பிட்ட சில விடயங்களின் வருமான உழைப்பு என்பனவற்றிற்கிடையிலான நேரடித் தொடர்புகளின் அடிப்படையில் செலவுகள் வருமானக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன. வியாபரத்தினை தொழிற்படுத்தியமை மற்றும் வினைத்திறன் பொருட்டு சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் பேணல் என்பனவற்றின் பொருட்டு உறப்பட்ட அனைத்துச் செலவினங்களும் வருமானக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன. வருமானக்கூற்றினைக் காட்டுகின்ற நோக்கங்களுக்காக, கம்பனியின் மூலங்களையும் குழுமத்தின் செயலாற்றத்தினையும் நியாயமான முறையில் காட்டும் அடிப்படையில் “தொழிற்பாட்டுச் செலவினங்கள்” என்ற முறை பின்பற்றப்பட்டிருக்கிறது.

### 2.4.19 கடன்பாட்டுச் செலவுகள்

கடன்பாட்டுச் செலவுகள் பயன்படுத்தும் அல்லது விற்பனை செய்யும் நோக்குடன் கணிசமான காலப்பகுதிக்கு தயாராக வைத்திருக்கப்படும் சொத்துக்களின் கையேற்பு, கட்டுமானம் அல்லது உற்பத்திக்கு நேரடியாக சேர்க்கப்படுகின்ற காலப்பகுதி நீங்கலாக அவை உறப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட செலவினங்களாக அங்கீகரிக்கப்பட்டு சொத்துக்களின் ஒரு பகுதியாக மூலதனமயப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.4.20 பிரிவு அறிக்கையிடல்

ஒரு பிரிவு என்பது, மற்றைய பிரிவுகளிலிருந்து வேறுபட்டு, இடர்நேர்வுகளுக்கும் நன்மைகளுக்கும் உட்பட்டு குறிப்பிட்டதொரு பொருளாதார சூழலில் பணிகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள குழுமமொன்றின் தனித்தன்மை வாய்ந்ததொரு கூறு எனக் கருதப்படுகிறது.

கம்பனி பல்வேறுபட்ட நாடுகளில் தொழிற்படுகின்றமையின் காரணமாக அதன் இடர்நேர்வுகளும் வருமான வீதங்களும் பாதிக்கப்படுவதால் புவியியல் ரீதியாக பரந்திருக்கும் அதன் தொழிற்பாடுகளின் அடிப்படையில் முக்கியமான பிரிவுகள், நிர்ணயிக்கப்படுகின்றன. ஆரம்ப விற்பனைகளின் மூலமான மொத்தப் புரள்வின் பகுப்பாய்வுகள் விற்பனை மேற்கொள்ளப்பட்ட பிரதேசத்திற்கான வருமானத்தினை ஒதுக்குவதன் மூலம் பெறப்படுகின்றது. குறிப்பிட்ட பிரிவிற்கான நேரடியாக அடையாளம் காணப்படாத செவுகள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு வெளிப்படுத்தப்படவில்லை.

புவியியல் ரீதியான பிரிவுகளுக்கு சொத்துக்களையும் தொடர்பான பொறுப்புக்களையும் ஒதுக்குவதற்கு பொருத்தமானதொரு அடிப்படை காணப்படவில்லையென முகாமைத்துவம் கருதுகிறது. இதற்கமைய பிரிவிற்கான சொத்துக்கள், பிரிவிற்கான பொறுப்புக்கள் ஏனைய பிரிவிற்கான தகவல்கள் புவியியல்சார்ந்த பிரிவுகளின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படவில்லை.

வியாபாரப் பிரிவின் அடிப்படையிலான இரண்டாவது அறிக்கையிடல் குழுமத்தினால் வழங்கப்பட்ட பணிகளின் தன்மையினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. குழுமமானது இரண்டு முக்கிய வியாபாரப் பிரிவுகளான வான் போக்குவரத்திலும் அதன் துணை நிறுவனத்தினூடாக பறப்புக்களில் உணவு வழங்கும் பணியிலும் ஈடுபட்டிருக்கிறது.

### 2.5 நியமங்கள் விடுக்கப்பட்டு இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாதவை

ஏற்கனவேயுள்ள நியமங்களுக்குப் பதிலாக வெளியிடப்பட்டிருக்கின்ற குறிப்பிட்ட சில கணக்கீட்டு நியமங்களும் திருத்தங்களும்/மேம்பாடுகளும் 2016 மாச்சு 31ஆம் திகதி காலப்பகுதிக்குள் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியனவல்ல. அவற்றுள் ஒன்றையேனும் குழுமம்/கம்பனி நேரகாலத்துடன் பின்பற்றவில்லை.

#### இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இன் நிதியியல் சாதனங்கள்

இ.நி.அ. நியமம் 9, இ.க. நியமம் 39இன் நிதியியல் சாதனங்கள்: அங்கீகரிப்பும் அளவீடுகளும் என்பதிலுள்ள ஏற்கனவேயுள்ள வழிகாட்டல்களுக்குப் பதிலானதாகும். இ.நி.அ. நியமம் 9, நிதியியல் சாதனங்களின் பகுப்பாய்வு மற்றும் அளவீடுகள் மீதான திருத்தப்பட்ட வழிகாட்டல்கள், நிதியியல் சொத்துக்கள் மீதான பெறுமதி இழப்புக்களைக் கணிப்பதற்காக புதிதாக எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்பு மாதிரி மற்றும் புதிய பொதுப் பாதுகாப்பு கணக்கீட்டுத் தேவைப்பாடுகள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன. இது, இ.க. நியமம் 39 இலிருந்தான நிதியியல் சாதனங்களின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாதவற்றின் மீதான வழிகாட்டல்களை முன்கொண்டு செல்கிறது. இ.க. நியமம் 9இனை நேரகாலத்துடன் பின்பற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டதுடன் 2018 சனவரி 1 அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதிக்கு நடைமுறைக்குவரும்.

#### இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 15 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்

இ.நி.அ. நியமம் 15 எவ்வளவு வருமானத்தினை எப்பொழுது அங்கீகரிப்பது என்று தீர்மானிப்பதற்காக அனைத்தையுமுள்ளடக்கிய கட்டமைப்பொன்றினை அங்கீகரிக்கின்றது. இ.க. நியமம் 18 வருமானம், இ.க. நியமம் 11 கட்டுமான உடன்படிக்கைகள் மற்றும் சர்வதேச நிதியியல் அறிக்கையிடல் விளக்கமளித்தல் குழு 13இன் வாடிக்கையாளர் நம்பகத்தன்மை நிகழ்ச்சித்திட்டம் என்பன உட்பட ஏற்கனவேயுள்ள வருமான அங்கீரிப்பு வழிகாட்டலுக்குப் பதிலானதாகும். இ.நி.அ. நியமம் 15 நேரகாலத்துடன் பின்பற்றும் நடவடிக்கை அனுமதிக்கப்பட்டதும் 2018 சனவரி 1ஆம் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதிக்கு நடைமுறைப்படுத்தப்படும்.

விபரமான தாக்கப் பகுப்பாய்வினை பூரணப்படுத்துவதற்காக காத்திருப்பது இ.நி.அ. நியமம் 9 மற்றும் இ.நி.அ. நியமம் 15 என்பனவற்றிலிருந்தான சாத்தியமான தாக்கத்தினை அறிக்கையிடும் திகதியிலுள்ளவாறு நியாயமான முறையில் மதிப்பிடுவதனை இயலாமல் செய்யும்.

குழுமத்தின் திரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்களில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படவில்லை

- கூட்டுத் தொழிற்பாடுகளில் வட்டிக் கையேற்பிற்கான கணக்கீடு (இ.நி.அ. நியமம் 11 இற்கான திருத்தங்கள்)
- தேய்மானம் மற்றும் கடன் தீர்ப்பனவுகளின் ஏற்றுக்கொள்ளத்தக்க முறைகளின் பகுப்பாய்வு (இ.க. நியமம் 16 மற்றும் இ.க. நியமம் 38 இற்கான திருத்தங்கள்)
- வெவ்வேறுபட்ட நிதியியல் கூற்றுக்களிலுள்ள பங்குரிமை முறை (இ.க. நியமம் 27 இற்கான திருத்தங்கள்)
- முதலீட்டாளரொருவருக்கும் அதன் இணை அல்லது கூட்டுத் தொழில்முயற்சிகளுக்குமிடையிலான சொத்துக்களின் விற்பனை அல்லது பங்களிப்பு (இ.நி.அ. நியமம் 10 மற்றும் இ.க. நியமம் 28 இற்கான திருத்தங்கள்)
- இ.நி.அ. நியமங்கள் 2012 - 2014 சுற்றுவட்டத்திற்கான வருடாந்த மேம்பாடுகள் - பல்வேறுபட்ட நியமங்கள்
- முதலீட்டு தொழில்முயற்சிகள், திரட்டல் விதி விலக்குகளைப் பிரயோகித்தல் (இ.நி.அ. நியமம் 10, இ.நி.அ. நியமம் 12 மற்றும் இ.க. நியமம் 28 என்பனவற்றிற்கான திருத்தங்கள்)
- வெளிப்படுத்துகை முன்முயற்சிகள் (இ.க.நியமம் 1இற்கான திருத்தங்கள்)

## 3. சொத்து, பொறி மற்றும் சாதனம்

### 3.1 குழுமம்

| | காணி, கட்டடங்கள் ரூ. மில். | பொறி மற்றும் சாதனம் ரூ. மில். | தொழிற்பாட்டு குத்தகைகளிலான விமானங்களுக்கு செய்யப்பட்ட திருத்தங்கள் ரூ. மில். | விமானத்துடன் தொடர்பான சாதனங்கள் ரூ. மில். | நிதிக் குத்தகையின் கீழ் உள்ள பொறி மற்றும் சாதனம் ரூ. மில். | செயற்பாட்டிலுள்ள மூலதனம் ரூ. மில். | மொத்தம் ரூ. மில். |
|---|---|---|---|---|---|---|---|
| **செலவு/மீள்மதிப்பீடு** | | | | | | | |
| **2015 ஏப்பிறல் 01ஆம் நாளன்று உள்ளவாறான மீதி** | 4,656.62 | 6,339.63 | 2,579.17 | 7,858.62 | 3,065.39 | 431.66 | 24,931.09 |
| கொள்வனவு/மாற்றியமைத் தல்கள்/மீள்மதிப்பீடுகள் | 49.72 | 261.21 | 633.80 | 449.05 | 53.08 | 69.42 | 1,516.28 |
| மாற்றல்கள்/சீராக்கங்கள் | 3.31 | 4.54 | 4.49 | – | – | (415.48) | (403.14) |
| விற்பனைகள்/அகற்றல்கள் | (19.36) | (51.42) | – | (35.90) | – | – | (106.68) |
| **2016 மாச்சு 31இல் உள்ளவாறான மீதி** | 4,690.29 | 6,553.96 | 3,217.46 | 8,271.77 | 3,118.47 | 85.60 | 25,937.55 |
| **ஒன்றுசேர்ந்த தேய்மானம்** | | | | | | | |
| **2015 ஏப்பிறல் 01இல் உள்ளவாறான மீதி** | 540.63 | 4,216.83 | 1,433.20 | 5,637.67 | 763.28 | 3.33 | 12,594.94 |
| ஆண்டிற்கான கட்டணம் | 189.19 | 689.62 | 832.50 | 631.03 | 295.65 | – | 2,637.99 |
| மாற்றல்கள்/சீராக்கங்கள்/மீள்மதிப்பீடுகள் | 0.57 | 1.44 | 0.37 | – | – | 22.49 | 24.87 |
| விற்பனைகள்/அகற்றல்கள் | (7.93) | (30.34) | – | (35.21) | – | – | (73.48) |
| **2016 மாச்சு 31இல் உள்ளவாறான மீதி** | 722.46 | 4,877.55 | 2,266.07 | 6,233.49 | 1,058.93 | 25.82 | 15,184.32 |
| **2016 மாச்சில் 31இல் உள்ளவாறான தேறிய ஏட்டுப் பெறுமதி** | 3,967.83 | 1,676.41 | 951.39 | 2,038.28 | 2,059.54 | 59.78 | 10,753.23 |
| **2015 மாச்சில் 31இல் உள்ளவாறான தேறிய ஏட்டுப் பெறுமதி** | 4,115.99 | 2,122.80 | 1,145.97 | 2,220.95 | 2,302.11 | 428.33 | 12,336.15 |

**3.2** a. இவ்வாண்டில், குழுமத்தின் சொத்து, பொறி மற்றும் சாதனங்கள் மற்றும் துணை நிறுவனத்தின் விமானங்களினது சமையலறைச் சாதனங்கள் முறையே சந்தைப் பெறுமதியில் சுயாதீன மதிப்பீட்டாளர்களான திரு. ரஞ்சன் ஜே சமரகூன் (ஏ.ஐ.வி. இலங்கை - கம்பனி மதிப்பீட்டாளர்) மற்றும் திரு. பி.பீ கலுகெதரவினால் (பட்டய மதிப்பீட்டு அளவையாளர்) மீள்மதிப்பீடு செய்யப்பட்டன. அத்தகைய மீள்மதிப்பீடுகளின் பெறுபேறுகள் 2016 மாச்சு 31 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இந்நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மீள்மதிப்பீடுகளிலிருந்து தோன்றிய மிகைகள் மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கு மாற்றல் செய்யப்பட்டன.

பெறுமதிகுறிப்பிடப்பட்ட குழுமத்தின் காணி, கட்டடம், ஏனைய பொறிகள் மற்றும் சாதனங்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன:

| சொத்து | மதிப்பீட்டு முறை | மதிப்பீட்டு முறை நடைமுறைக்கு வந்த திகதி | அவதானிக்கப்பட முடியாத குறிப்பிடத்தக்க உள்ளீடுகள் | அவதானிக்கப்பட முடியாத உள்ளீடு களுக்கான மாறத்தக்க சந்தைப் பெறுமதி | மதிப்பிடப்பட்ட சந்தைப் பெறுமதி மட்டம் |
|---|---|---|---|---|---|
| காணி - கொழும்பு | திறந்த சந்தை | 2015 மாச்சு 31 | மதிப்பிடப்பட்ட பேச் ஒன்றிற்கான விலை ரூ. 12 மில்லியன் | சாத்தியமான மாறத்தக்க தன்மை | மட்டம் 3 |
| கட்டடங்கள் - கொழும்பு/கட்டுநாயக்கா | தேய்வடைந்த வற்றின் அகற்றல் செலவு | 2015 மாச்சு 31 | சதுர அடி ஒன்றிற்கான மதிப்பிடப்பட்ட விலை ரூ. 475 - ரூ. 9,000 | | |
| பொறி மற்றும் சாதனங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள விமான சமையலறைச் சாதனங்கள் - கட்டுநாயக்கா | திறந்த சந்தை மதிப்பீடுகள் | 2015 மாச்சு 31 | மதிப்பிடப்பட்ட விலை ரூ. 793.54 மில்லியன் | | |

b. வுாந உயசசலலைபெ யஅழரவெ ழக சநஎயடரநன யளளநவள வாயவ றழரடன ாயஎந டிநநெ லைெஉடரனநன லை வாந குலையெஉயைட ளுவயவநஅநவெள ாயன வாந யளளநவள டிநநெ உயசசநைன யவ உழளவ டநளள னநிசநஉயைவழைெ ளை யள கழடடழறள:

| சொத்துக்களின் வகுப்பு | செலவு ரூ. மில். | சொத்துக்கள் கிரயத்தில் கொண்டு செல்லப்பட்டிருக்குமாயின் ஒன்றுசேர்ந்த தேய்மானம் ரூ. மில். | கொண்டு செல்லப்படும் தேறிய தொகை 2016 ரூ. மில். | கொண்டு செல்லப்படும் தேறிய தொகை 2015 ரூ. மில். |
|---|---|---|---|---|
| காணி மற்றும் கட்டடங்கள் | 3,088.59 | 992.91 | **2,095.68** | 2,222.54 |
| பொறி மற்றும் சாதனம் | 1,893.94 | 1,841.27 | **52.67** | 101.93 |

c. இவ்வாண்டில், குழுமம் கொள்வனவு செய்த சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் ஒன்றுசேர்ந்த பெறுமதி ரூ. 1,039.56 மில்லியனாகும் (2015 - ரூ. 2,896.64 மில்லியன்). சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் கொள்வனவிற்காக இவ்வாண்டில் செய்யப்பட்ட காசுக் கொடுப்பனவுகள் ரூ. 1,129.04 மில்லியன் (2015 - ரூ. 1,977.32 மில்லியன்).

d. குழுமத்தின் சொத்துக்கள், பொறிகள் மற்றும் கருவிகள் முழுமையாக தேய்மானமடைந்த சொத்துக்களை உள்ளடக்கி மொத்தமாக ரூ. 9,471.9 மில்லியனை (2015 - ரூ. 9,265.08 மில்லியன்) கொண்டிருந்தது.

### 3.3 கம்பனி

| | காணி, கட்டடங் கள் | பொறி மற்றும் சாதனம் | தொழிற்பாட்டு குத்தகைகளி லான விமானங்களுக்கு செய்யப்பட்ட திருத்தங்கள் | விமானத் துடன் தொடர்பான சாதனங்கள் | நிதிக் குத்தகையின் கீழ் உள்ள பொறி மற்றும் சாதனம் | செயற்பாட்டி லுள்ள மூலதனம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். |
| **செலவு/மீள்மதிப்பீடு** | | | | | | | |
| **2015 ஏப்பிறல் 01ஆம் நாளன்று உள்ளவாறான மீதி** | 3,133.32 | 5,379.74 | 2,579.17 | 7,858.62 | 3,065.39 | 383.36 | 22,399.60 |
| கொள்வனவு/மாற்றியமைத் தல்கள்/மீள்மதிப்பீடு | 45.06 | 249.69 | 633.80 | 449.05 | 53.08 | 58.18 | 1,488.86 |
| மாற்றல்கள்/சீராக்கங்கள் | 3.31 | 4.54 | 4.49 | – | – | (415.48) | (403.14) |
| விற்பனைகள்/அகற்றல்கள் | (19.36) | (28.73) | – | (35.90) | – | – | (83.99) |
| **2016 மாச்சு 31இல் உள்ளவாறான மீதி** | 3,162.33 | 5,605.24 | 3,217.46 | 8,271.77 | 3,118.47 | 26.06 | 23,401.33 |
| **ஒன்றுசேர்ந்த தேய்மானம்** | | | | | | | |
| **2015 ஏப்பிறல் 1இல் உள்ளவாறான மீதி** | 540.63 | 4,214.85 | 1,433.20 | 5,637.67 | 763.28 | – | 12,589.63 |
| ஆண்டிற்கான கட்டணம் | 149.94 | 425.06 | 832.50 | 631.03 | 295.65 | – | 2,334.18 |
| மாற்றல்கள்/சீராக்கங்கள்/மீள்மதிப்பீடு | 0.57 | 1.44 | 0.37 | – | – | – | 2.38 |
| விற்பனைகள்/அகற்றல்கள் | (7.93) | (28.02) | – | (35.21) | – | – | (71.16) |
| **2016 மாச்சு 31இல் உள்ளவாறான மீதி** | 683.21 | 4,613.33 | 2,266.07 | 6,233.49 | 1,058.93 | – | 14,855.03 |
| **2016 மாச்சு 31இல் உள்ளவாறான தேறிய ஏட்டுப் பெறுமதி** | 2,479.12 | 991.91 | 951.39 | 2,038.28 | 2,059.54 | 26.06 | 8,546.30 |
| **2015 மாச்சு 31இல் உள்ளவாறான தேறிய ஏட்டுப் பெறுமதி** | 2,592.69 | 1,164.89 | 1,145.97 | 2,220.95 | 2,302.11 | 383.36 | 9,809.97 |

**3.4** a. இவ்வாண்டில், கம்பனியின் காணி மற்றும் கட்டடங்களின் சந்தைப் பெறுமதி சுயாதீன மதிப்பீட்டாளரான திரு. ரஞ்சன் ஜே சமரகூன் (ஏ.ஐ.வி. இலங்கை - கம்பனி மதிப்பீட்டாளர்) மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. அத்தகைய மீள்மதிப்பீடுகளின் பெறுபேறுகள் 2015 மாச்சு 31 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இந்நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நிதியியல் கூற்றக்களில் உள்ளடக்கப்படக்கூடிய மீள்மதிப்பிடப்பட்ட சொத்துக்களின் ஏட்டுப் பெறுமதி தேய்மானத்தைக் கழித்த செலவில் கீழே காட்டப்பட்டவாறு கொண்டு செல்லப்படுகிறது:

| சொத்து | மதிப்பீட்டு முறை | மதிப்பீட்டு முறை நடைமுறைக்கு வந்த திகதி | அவதானிக்கப்பட முடியாத குறிப்பிடத்தக்க உள்ளீடுகள் | அவதானிக்கப்பட முடியாத உள்ளீடு களுக்கான மாறத்தக்க சந்தைப் பெறுமதி | மதிப்பிடப்பட்ட சந்தைப் பெறமதி மட்டம் |
|---|---|---|---|---|---|
| காணி - கொழும்பு | திறந்த சந்தை | 2015 மாச்சு 31 | மதிப்பிடப்பட்ட பேச் ஒன்றிற்கான விலை ரூ. 12 மில்லியன் | சாத்தியமான மாறத்தக்க தன்மை | மட்டம் 3 |
| கட்டடங்கள் - கொழும்பு/கட்டுநாயக்கா | தேய்வடைந்த வற்றின் அகற்றல் செலவு | 2015 மாச்சு 31 | சதுர அடி ஒன்றிற்கான மதிப்பிடப்பட்ட விலை ரூ. 475 - ரூ. 9,000 | | |

b. நிதியியல் கூற்றக்களில் உள்ளடக்கப்படக்கூடிய மீள்மதிப்பிடப்பட்ட சொத்துக்களின் ஏட்டுப் பெறுமதி தேய்மானத்தைக் கழித்த செலவில் கீழே காட்டப்பட்டவாறு கொண்டு செல்லப்படுகிறது:

| சொத்து வகுப்பு | செலவு | சொத்துக்கள் கிரயத்தில் கொண்டு செல்லப்பட்டிருக்குமாயின் ஒன்றுசேர்ந்த தேய்மானம் | கொண்டு செல்லப்படும் தேறிய தொகை | கொண்டு செல்லப்படும் தேறிய தொகை |
|---|---|---|---|---|
| | | | 2016 | 2015 |
| | ரூ. மில் | ரூ. மில் | ரூ. மில் | ரூ. மில் |
| காணி மற்றும் கட்டடங்கள் | 1,463.41 | 512.78 | 950.63 | 1,002.78 |

c. இவ்வாண்டில், குழுமம் கொள்வனவு செய்த சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் ஒன்றசேர்ந்த பெறுமதி ரூ. 1,012.14 மில்லியனாகும் (2015 - ரூ. 2,810.85 மில்லியன்) சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் கொள்வனவிற்காக இவ்வாண்டில் செய்யப்பட்ட காசுக் கொடுப்பனவுகள் ரூ. 1,102.69 மில்லியன் (2015 - ரூ. 1,893.30 மில்லியன்).

d. குழுமத்தின் சொத்துக்கள், பொறிகள் மற்றும் கருவிகள் முழுமையாக தேய்மானமடைந்த சொத்துக்களை உள்ளடக்கி மொத்தமாக ரூ. 9,451.08 மில்லியனைக் (2015 - ரூ. 9,150.64 மில்லியன்) கொண்டிருந்தது.

## 4. விமானத்தினை விநியோகிப்பதற்கு முன்னரான கொடுப்பனவு

வழங்கலுக்கு முன்னரான கொடுப்பனவுகள் 2014 இற்கும் 2021 இற்குமிடையில் ஆறு A330-300 மற்றும் நான்கு A350-900 விமானங்களைக் கொள்வனவு செய்வதற்காக எயார்பஸ்சுடன் செய்து கொண்ட கொள்வனவு உடன்படிக்கையின் அடிப்படையில் கம்பனியில் மேற்கொள்ளப்பட்ட வழங்கலுக்கு முன்னரான கொடுப்பனவுகளை உள்ளடக்குகிறது. அறிக்கையிடும் நாளிலுள்ளவாறு விநியோகிப்பதற்கு முன்னரான கொடுப்பனவு 2015இற்கும் 2021 இற்குமிடையில் மூன்று A330-300 மற்றும் நான்கு A350-900 விமானங்களையும் வழங்குவதற்காகச் செய்யப்பட்டது. பன்னிரண்டு மாதங்களுக்குள் குத்தகைக்காரர்களிடமிருந்து அறவிடத்தக்க விநியோகிப்பதற்கு முன்னரான கொடுப்பனவான ரூ. 16,639.67 மில்லியன் வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 5. விமானப் பேணல் ஒதுக்கு

| | குழுமம்/கம்பனி | |
|---|---|---|
| | 2016 | 2015 |
| | ரூ. மில் | ரூ. மில் |
| ஏப்பிறல் 1இல் உள்ளவாறு மீதி | 22,048.82 | 26,261.65 |
| கொடுப்பனவுகள் | 7,201.23 | 8,471.22 |
| சீராக்கங்கள்ழு | (7,156.59) | (9,255.77) |
| அறவிடல்கள் | (2,106.65) | (3,973.06) |
| செலாவணி இலாபம் | 1,866.76 | 544.78 |
| | 21,853.57 | 22,048.82 |
| | (11,656.20) | (9,769.46) |
| **மாச்சு 31இல் உள்ளவாறு தேறிய அறவிடல் மீதி (குறிப்பு 5.1)** | 10,197.37 | 12,279.36 |

### 5.1 நடைமுறை/நடைமுறையல்லாப் பகுப்பாய்வு

| | மொத்தம் | ஐயத்திற்குரிய அறிவிடல் களுக்கான ஏற்பாடு | தேறிய | ஓராண்டிற்குள் அறவிடத்தக்கவை தொகை | ஓராண்டிற்குப் பின்னர் அறவிடத்தக்கவை தொகை |
|---|---|---|---|---|---|
| | ரூ. மில் | ரூ. மில் | ரூ. மில் | ரூ. மில் | ரூ. மில் |
| **2016 ஏப்பிறல் 1இல் உள்ளவாறு மீதி** | 21,853.57 | (11,656.20) | 10,197.37 | 3,612.16 | 6,585.21 |
| 2015 மாச்சு 31இல் உள்ளவாறு மீதி | 22,048.82 | (9,769.46) | 12,279.36 | 6,209.96 | 6,069.40 |

### 5.2 நடைமுறை/நடைமுறையல்லாப் பகுப்பாய்வு

| | 2016 | 2015 |
|---|---|---|
| | ரூ. மில் | ரூ. மில் |
| ஏப்பிறல் 1இல் உள்ளவாறு மீதி | 9,769.46 | 9,526.93 |
| இவ்வாண்டில் விதிக்கப்பட்டவை | 3,631.23 | 4,024.42 |
| சீராக்கங்கள்* | (2,784.65) | (4,011.22) |
| தேறல் செய்யப்படாத செலாவணி இலாபம் | 1,040.16 | 229.33 |
| **மாச்சு 31இல் உள்ளவாறு மீதி** | 11,656.20 | 9,769.46 |

** இலாபம் அல்லது இழப்பின் கூற்று மீதான நடப்பாண்டுத் தாக்கம், விமானப் பேணல் ஒதுக்கு மற்றும் பழுதுபார்த்தல் செலவு (குறிப்பு 5) என்பனவற்றிற்கான மீள்பதிவு ஏற்பாடுகளின் தேறல் தாக்கத்தினையும் பிரதிபலிப்பதுடன் (குறிப்பு 15) விமானப் பேணல் ஒதுக்குத் தொகையின் (குறிப்பு 5) பதிவழிப்பினையும் பிரதிபலிக்கிறது.*

## 6. அருவச் சொத்துக்கள்

| | குழுமம் | | | கம்பனி | | |
|---|---|---|---|---|---|---|
| கணனி மென்பொருள் | மென்பொருள் | செயற்பாட்டி லுள்ள மூலதனம் | மொத்தம் | மென்பொருள் | செயற்பாட்டி லுள்ள மூலதனம் | மொத்தம் |
| | ரூ. மில் | ரூ. மில் | ரூ. மில் | ரூ. மில் | ரூ. மில் | ரூ. மில் |
| **செலவு** | | | | | | |
| **2015 ஏப்பிறல் 31இல் உள்ளவாறு மீதி** | 2,154.39 | 4.18 | 2,158.57 | 2,119.32 | 4.18 | 2,123.50 |
| கொள்வனவுகள்/திருத்தியமைத்தல்கள் | 9.97 | 43.88 | 53.85 | 8.49 | 43.88 | 52.37 |
| மாற்றல்கள்/சீராக்கங்கள் | 12.34 | (17.60) | (5.26) | 12.34 | (17.60) | (5.26) |
| **2016 மாச்சு 31இல் உள்ளவாறு மீதி** | 2,176.70 | 30.46 | 2,207.16 | 2,140.15 | 30.46 | 2,170.61 |
| **ஒன்றுசேர்ந்த பதிவழிப்பு** | | | | | | |
| **2015 ஏப்பிறல் 01இல் உள்ளவாறான மீதி** | 873.50 | – | 873.50 | 843.27 | – | 843.27 |
| ஆண்டிற்கான கட்டணம் | 348.92 | – | 348.92 | 347.20 | – | 347.20 |
| மாற்றல்கள்/சீராக்கங்கள் | 0.15 | – | 0.15 | 0.15 | – | 0.15 |
| **2016 மாச்சு 31இல் உள்ளவாறு மீதி** | 1,222.57 | – | 1,222.57 | 1,190.62 | – | 1,190.62 |
| **2016 மாச்சு 31இல் உள்ளவாறு தேறிய ஏட்டுப் பெறுமதி** | 954.13 | 30.46 | 984.59 | 949.53 | 30.46 | 979.99 |
| **2015 மாச்சு 31இல் உள்ளவாறு தேறிய ஏட்டுப் பெறுமதி** | 1,280.89 | 4.18 | 1,285.07 | 1,276.05 | 4.18 | 1,280.23 |

குழுமத்தின்/கம்பனியின் அருவச் சொத்துக்கள் பதிவழிக்கப்பட்ட மொத்தத் தொகை முறையே ரூ. 444.85 மில்லியனையும் ரூ. 417.30 மில்லியனையும் கொண்ட முழுத்தொகையினை உள்ளடக்கியிருந்தது.

## 7. முதலீடுகள்

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2016 | 2015 | 2016 | 2015 |
| | ரூ. மில் | ரூ. மில் | ரூ. மில் | ரூ. மில் |
| **நடைமுறையல்லாத முதலீடுகள்** | | | | |
| **இலங்கையிலுள்ள துணை நிறுவனங்களில் முதலீடுகள்** | | | | |
| - சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட் ஜபணிப்பாளர் பெறுமதி தேறிய சொத்துப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது ரூ. 7.38 பில்லியன் (2015 - ரூ. 5.86 பில்லியன்)ஸ | – | – | 42.24 | 42.24 |
| - எயார் லங்கா (பிறைவேற்) லிமிடெட் (40,000 பங்குகள்)* | 0.40 | 0.40 | 0.20 | 0.20 |
| | 0.40 | 0.40 | 42.44 | 42.44 |

**எயார்லங்கா (பிறைவேற்) லிமிடெட்டின் 50 சதவீதப் பங்குகள் கம்பனி வசமும் எஞ்சிய 50 சதவீதம் துணைக் கம்பனி வசமுமுள்ளன.* (preceded by *)

எயார்லங்கா (பிறைவேற்) லிமிடெட் ஆரம்பத்திலிருந்தே இயங்காத கம்பனியாக இருக்கிறது.

## 8. இருப்புக்கள்

| | குறிப்பு | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| | | 2016 | 2015 | 2016 | 2015 |
| | | ரூ. மில் | ரூ. மில் | ரூ. மில் | ரூ. மில் |
| பொறியியலுடன்-தொடர்பான இருப்புக்கள் | | 5,125.62 | 4,984.88 | 5,125.62 | 4,984.88 |
| தரைப் பணியுடன்-தொடர்பான இருப்புக்கள் | | 516.45 | 418.44 | 516.45 | 509.13 |
| மூலப்பொருட்களும் நுகரத்தக்கவையும் | | 838.00 | 994.51 | 575.58 | 563.60 |
| | | 6,480.07 | 6,397.83 | 6,217.65 | 6,057.61 |
| கழி: மெதுவாக அசையும் இருப்புக்களுக்கான ஒதுக்கம் | 8.1 | (1,539.78) | (999.96) | (1,514.54) | (979.41) |
| | | 4,940.29 | 5,397.87 | 4,703.11 | 5,078.20 |

### 8.1 மெதுவாக அசையும் இருப்புக்களுக்கான ஏற்பாடு

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2016 | 2015 | 2016 | 2015 |
| | ரூ. மில் | ரூ. மில் | ரூ. மில் | ரூ. மில் |
| ஏப்பிறல் 01இல் உள்ளவாறு மீதி | (999.96) | (732.06) | (979.41) | (726.53) |
| இவ்வாண்டில் செய்யப்பட்ட ஏற்பாடு | (549.42) | (279.85) | (544.73) | (264.83) |
| இவ்வாண்டில் பதிவழிக்கப்பட்டவை | 9.60 | 11.95 | 9.60 | 11.95 |
| **மார்ச் 31இல் உள்ளவாறு மீதி** | (1,539.78) | (999.96) | (1,514.54) | (979.41) |

## 9. வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவை

| | குறிப்பு | குழுமம் 2016 ரூ. மில் | குழுமம் 2015 ரூ. மில் | கம்பனி 2016 ரூ. மில் | கம்பனி 2015 ரூ. மில் |
|---|---|---|---|---|---|
| வர்த்தகத்திலிருந்து பெறத்தக்கவை | | 11,238.69 | 10,165.86 | 10,405.75 | 9,673.74 |
| கழி: ஐயத்திற்கான கடன்பாடுகளுக்கான ஏற்பாடுகள் | 9.2 | (210.21) | (201.65) | (205.26) | (193.45) |
| | | 11,028.48 | 9,964.21 | 10,200.49 | 9,480.29 |
| ஏனைய கடன்பட்டோர் | | 128.61 | 1,274.39 | 128.61 | 1,274.40 |
| விமானத்தினை விநியோகிப்பதற்கு முன்னரான கொடுப்பனவு | 4 | – | 16,639.67 | – | 16,639.67 |
| வைப்புக்கள், முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் | | 3,059.87 | 3,178.95 | 2,834.84 | 2,976.30 |
| விமான ஆரம்ப நடவடிக்கைகளிலிருந்தானவை | | – | 1,701.19 | – | 1,701.19 |
| | | 14,216.96 | 32,758.41 | 13,163.94 | 32,071.85 |
| கம்பனி அலுவலர்களுக்கான கடன்கள், முற்பணங்கள் | 9.3 | 75.73 | 60.34 | 57.71 | 42.81 |
| | | 14,292.69 | 32,818.75 | 13,221.65 | 32,114.66 |

வர்த்தகத்திலிருந்து பெறத்தக்கவை வட்டி உழைக்காதவை என்பதுடன் பொதுவாக 30 நாள் கொடுகடன் காலத்தையும் கொண்டவை.

### 9.1 வர்த்தகத்திலிருந்து பெறத்தக்கவைகளின் கால ரீதியான பகுப்பாய்வு மாச்சு 31இல் உள்ளவாறு கீழே தரப்படுகிறது:

2016 மாச்சு 31இல் உள்ளவாறு கம்பனி தொடர்பான ரூ. 210.21 மில்லியன் கொண்ட வர்த்தகத்திலிருந்து பெறத்தக்க ஆரம்பத் தொகையொன்றும் குழுமம் தொடர்பான ரூ. 205.26 மில்லியனும் பெறுமதி இழந்தனவாக இருந்ததுடன் முழுமையாகவும் வழங்கப்பட்டிருந்தன. வர்த்தகத்திலிருந்து பெறப்பட்டவற்றின் பெறுமதி இழப்புத்தன்மையில் ஏற்பட்ட அசைவிற்குக் கீழே குறிப்பு 9.2 இனைப் பார்க்கவும்.

| | மொத்தம் ரூ. மில் | தவணைக் கட்டணம் கட்டப்படாதவை அல்லாதவையும் பெறுமதி இழப்பு ஏற்படாதவையும் ரூ. மில் | தவணைக் கட்டணம் கட்டப்படாதவை எனினும் பெறுமதி இழப்பு ஏற்படாதவை 30-60 ரூ. மில் | 61-90 ரூ. மில் | 91-180 ரூ. மில் | >180 ரூ. மில் |
|---|---|---|---|---|---|---|
| **2016 மாச்சு 31இல் உள்ளவாறு மீதி** | | | | | | |
| கம்பனி | 10,200.49 | 8,706.95 | 720.33 | 333.51 | 421.30 | 18.40 |
| குழுமம் | 11,028.48 | 8,963.77 | 932.70 | 468.59 | 555.36 | 108.06 |

### 9.2 ஐயத்திற்குரிய கடன்பாடுகளுக்கான ஏற்பாடுகளின் அசைவு

